# உயர் கல்விக்கான வழிகாட்டி

## +2-விற்குப் பிறகு என்ன படிக்கலாம்? எப்படி ஜெயிக்கலாம்...



**INNER WHEEL CLUB OF MADRAS**

District 323

# +2-விற்குப் பிறகு என்ன படிக்கலாம்? எப்படி ஜெயிக்கலாம்...



Copyright 2021 INNER WHEEL CLUB OF MADRAS, District 323

All rights reserved. No part of the book may be reproduced in any form, electronic or mechanical, including photocopy, recording, or any information storage or retrieval system, without permission in writing from the publisher.

Published in India

கட்டுரையாக்கம்: **ஞா.சக்திவேல் முருகன்**

நூலாக்கம், ஒருங்கிணைப்பு: **சுட்டி கணேசன்**

IWCM

# Career Counselling for 12th Standard Students

An initiative of

## Inner Wheel Club of Madras

District 323

# 2021-22

INNER WHEEL CLUB OF MADRAS

DISTRICT 323

# FOREWORD

This eBook is meant to be a guide and resource to the thousands of students who complete their 12th standard and are on the threshold of pursuing higher studies. As more and more young people are seeking jobs, it is important to choose a course of study that provides job opportunities.

The book covers a diverse range of subjects, who can opt for them, where to study, fee structure and job opportunities for each course. Not many are aware of courses that can be studied without fees or reduced fee structure. Information on such courses has been provided. Vocational courses, industrial training and even options to start working after completing 10th or 12th standards are also included.

The eBook has been designed with a desire to reach out to the thousands of students who require guidance on what to study for gainful occupation. It has been structured to make navigation and search easy with quick links to courses. A flowchart has been added as a quick reference to what courses a student is eligible to study, based on the subjects studied in the 12th standard.

We would like to thank Mr G Sakthivel Murugan and Mr ‘Chutti’ Ganesan for compiling, formatting and designing this valuable resource for students. They displayed immense cooperation and patience with the many changes we have suggested at frequent intervals.

We hope that students using this eBook will find it helpful and look forward to receiving their feedback.

| | |
|---|---|
| **President** | **Secretary** |
| **Javanthi Singaram** | **Sandhya Jaichandren** |

**September 2021**

# வாழ்த்துரை...

**த**ற்போது கற்றல் முறை பெரிய அளவில் மாற்றம் கண்டுள்ளது. வேலைவாய்ப்பு சந்தையில் போட்டிகள் அதிகரித்துள்ளன. இந்த நிலையில் பிளஸ் டூ படிக்கும் மாணவர்கள் உயர்கல்விக்கு செல்லும்போது சிந்தித்து முடிவெடுக்க வேண்டியது அவசியமாகிறது. தற்போது பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு உதவும் வகையில் உயர்கல்விக்கான வாய்ப்புகளையும், எதிர்கால வேலை வாய்ப்புகளையும் வழிகாட்டும் வகையில் '+2-விற்குப் பிறகு என்ன படிக்கலாம்? எப்படி ஜெயிக்கலாம்' என்ற பயனுள்ள வழிகாட்டி நூலைத் தயாரித்துள்ளோம்.

மாணவர்கள் உயர்கல்வி குறித்து யோசிக்கும்போது மருத்துவம், பொறியியல், அறிவியல், பி.காம், சட்டம், விஷுவல் கம்யூனிக்கேஷன் என ஏராளமான வாய்ப்புகள் குவிந்துகிடக்கின்றன. இதில் மாணவர்கள் ஆர்வத்துக்கும், திறமைக்கும் சவாலாக உள்ள படிப்புகளைத் தேர்ந்தெடுக்கலாம். மாணவர்களின் ஆர்வத்தை ஆக்கப்பூர்வமாக மாற்றும் வல்லமை படைத்தது கல்லூரிகள். கல்லூரி படிப்பையும், கல்லூரியையும் எவ்வாறு தேர்ந்தெடுப்பது என்பதில் ஆரம்பித்து ஒவ்வொரு படிப்பிலும் உள்ள வேலை வாய்ப்புகள் குறித்தும் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கையேட்டில் உள்ள கட்டுரைகளைத் தொகுத்து வழங்கிய செய்தியாளர் ஞா. சக்திவேல் முருகன் அவர்களுக்கும், ஒருங்கிணைப்புப் பணியை மேற்கொண்ட 'சுட்டி' கணேசன் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்தப் புத்தகம் மாணவர்களுக்குப் பெரிய அளவில் உதவும் என நம்புகிறோம். உயர்கல்விக்குள் நுழைய உள்ள அனைவருக்கும் எங்களது வாழ்த்துகள்.



# பொருளடக்கம்


| | |
|---|---|
| 1. எதிர்கால வாழ்க்கைக்கு உதவும் உயர்கல்வி | 13 |
| 2. சிறந்த கல்வி நிறுவனத்தைத் தேர்வு செய்வது எப்படி? | 16 |
| 2.1 நிபுணத்துவக் கல்லூரிகள் | 17 |
| 2.2. பிரபலமான கல்லூரிகள் | 18 |
| 2.3. கல்லூரியின் சுற்றுச்சூழலும் ஆன்லைன் வகுப்புகளும் | 18 |
| 2.4. முன்னாள் இந்நாள் மாணவர்களின் ஆலோசனைகள் | 19 |
| 2.5. கல்லூரி தகவல் புத்தகத்தை ஒப்பீடு செய்யுங்கள் | 19 |
| 2.6. விளம்பரமும் கேம்பஸ் இண்டர்வியூவும்! | 19 |
| 2.7. இணையத்தின் உதவியை நாடுங்கள் | 20 |
| 2.8. கட்டண சலுகை வழங்கும் கல்லூரிகள் | 20 |
| 2.9. நிபுணர்களின் ஆலோசனையைப் பெறுங்கள் | 20 |
| 2.10. மாணவர்கள் சேர்க்கையில் வெளிப்படைத்தன்மை | 20 |
| 3. கல்லூரிப் படிப்பைத் தேர்வு செய்யும்போது கவனிக்க வேண்டிய விஷயங்கள் | 21 |
| 3.1. முதலில் முடிவெடுக்க வேண்டிய விஷயங்கள் | 21 |
| 3.2. உயர்கல்விக்கான வாய்ப்புகள் | 23 |
| 4. மதிப்பும் மரியாதையும் மிகுந்த மருத்துவத் துறை படிப்புகள் | 24 |
| 4.1 சென்னையில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகள் | 25 |
| 4.2. எம்.பி.பி.எஸ்., படிப்புக் கட்டணம் ரூ. 13,600 மட்டுமே! | 26 |
| 4.3. அரசு ஒதுக்கீட்டில் சுயநிதி மருத்துவக் கல்லூரிக் கட்டணம் | 26 |
| 4.4. திட்டமிட்டுப் படித்தால் நீட் தேர்வு எளிது | 26 |
| 4.5. நீட் தேர்வுக்கு யார் விண்ணப்பிக்க முடியும்? | 27 |
| 4.6. நீட் மதிப்பெண் எவ்வளவு? | 27 |
| 4.7. வெளிநாட்டு வாய்ப்பை வழங்கும் நர்ஸிங் படிப்பு! | 28 |
| 4.7.1. யார் நர்ஸிங் படிக்கலாம்? | 29 |
| 4.7.2. நர்ஸிங் படிப்பு எத்தனை இடங்கள் | 29 |
| 4.7.3. நர்ஸிங் படிப்புக்கு ஆண்களும் விண்ணப்பிக்கலாம் | 30 |
| 4.7.4. நர்ஸிங் படிப்பு உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகள் | 30 |


IWCM

4.8. இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் மிகுந்த வரவேற்பைப் பெற்ற பிசியோதெரப்பிஸ்ட் படிப்பு 31

4.8.1. பிசியோதெரபி படிப்பு உள்ள அரசுக் கல்லூரிகள் 32

4.9. மருந்தாளுநர்களுக்கு (பார்மஸி) படிப்பு) 33

4.9.1. பி.பார்ம் படிப்புள்ள அரசு மருத்துவக் கல்லூரிகள் 33

4.10 சித்தா - ஆயுர்வேத படிப்புகள் 34

4.10.1. சித்தா - ஆயுர்வேதப் படிப்பிற்கான இடங்கள் 35

4.10.2. சித்தா - ஆயுர்வேதப் படிப்பிற்கான கட்டணம் 35

4.11. துணை மருத்துவப் படிப்புகள் 36

4.11.1. துணை மருத்துவப் படிப்புகளில் தொழில்சார் படிப்புகள் 36

4.11.2. இதர துணை மருத்துவப் படிப்புகள் 37

4.11.3. துணை மருத்துவப் பட்டயப் படிப்புகள் 38

4.11.4. துணை மருத்துவச் சான்றிதழ் படிப்புகள் 38

4.11.5. சென்னையில் துணை மருத்துவ படிப்பு வழங்கும் கல்லூரிகள் 39

4.12. மருத்துவப் படிப்புகளுக்கான கலந்தாய்வு - மாணவர்கள் கவனிக்க வேண்டிய விஷயங்கள் 40

4.12.1. கலந்தாய்வின்போது கொண்டு வரவேண்டிய சான்றிதழ்கள் 40

**5. கால்நடைத் துறையிலும் சாதிக்கலாம்** 43

5.1. கால்நடை மருத்துவக் கல்லூரிகள் 43

**6. வேலைவாய்ப்பு நிறைந்த வேளாண்மைப் படிப்புகள்** 45

6.1. வேளாண்படிப்புக்கு யார் விண்ணப்பிக்கலாம் 45

6.2. வேளாண்படிப்பில் சேர எளிய வழிகள் 46

6.3. வேளாண்பல்கலைக்கழகப் படிப்புகள் 47

6.4. வேளாண்பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் 47

**7. மீன்வளப் படிப்புகள்** 50

7.1. மீன்வளப் படிப்புகளை வழங்கும் கல்லூரிகள் 51

**8. பொறியியல் படிப்புகள்** 53

8.1. பொறியியல் படிப்பில் அசத்தும் அண்ணா பல்கலைக்கழகம் 53

8.1.1. அண்ணா பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகள் 54

8.1.2. மண்டல வளாகக் கல்லூரிகள் 55

8.2. அரசு பொறியியல் கல்லூரிகள் 55

8.2.1. அரசு உதவிபெறும் கல்லூரிகள் 55

8.3. பொறியியல் படிப்புகளைத் தேர்ந்தெடுக்கும்முன்பு கவனிக்க வேண்டிய விஷயங்கள் 56

8.4. முதன்மையான இன்ஜினீயரிங் பாடப்பிரிவுகள் 57

8.5. பயன்பாட்டு இன்ஜினீயரிங் பாடப்பிரிவுகள் 57

8.6. பொறியியல் படிப்புடன் வேலை வாய்ப்பை அள்ளித்தரும் ஐ.டி தொழில்நுட்பம் 58

8.7. மருத்துவத் துறை சார்ந்த பொறியியல் படிப்பு - பயோமெடிக்கல் இன்ஜினீயரிங் 60

8.7.1 யாரெல்லாம் பயோமெடிக்கல் பிரிவைத் தேர்ந்தெடுக்கலாம்? 61

8.8. கொரோனாவால் வாய்ப்பு மிகுந்த படிப்பாக மாறிய பயோடெக்னாலஜி படிப்பு 62

8.8.1. பி.டெக் பயோடெக்னாலஜி அல்லது பி.எஸ்சி பயோடெக்னாலஜி படிப்பு 63

8.9 ஆராய்ச்சிக்கும் வெளிநாட்டு வேலைக்கும் உகந்த பயோஇன்ஃபர்மேட்டிக்ஸ் படிப்பு 64

8.10 வேலை வாய்ப்பை அதிகரிக்கும் உணவுத் தொழில்நுட்பப் படிப்பு 66

8.11 இஸ்ரோவில் வேலை பார்ப்பதற்கான படிப்புகள் 67

8.12 மரைன் இன்ஜினீயரிங் படிப்புகள் 68

8.13 உதவித்தொகையுடன் பிளாஸ்டிக் தொழில்நுட்பப் படிப்பு 69

8.14 மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் வழங்கும் படிப்புகள் 69

8.15 கட்டட வடிவமைப்பு ஆர்வலர்களுக்கு ஆர்க்கிடெக்சர் படிப்பு 70

**9. கலை அறிவியல் படிப்புகள்** 72

9.1. பி.எஸ்சி., கம்ப்யூட்டர் சயின்ஸ், பி.சி..,ஏ படிப்பு 72

9.1.1 பி.சி.ஏ., -யில் சேரலாமா, பி.எஸ்சி., கம்ப்யூட்டர் சயின்ஸில் சேரலாமா? 73

9.1.2 ஐ.டி துறையில் வேலை வாய்ப்பு பெற என்ன செய்யவேண்டும்? 73

9.2 ஸ்டாட்டிஸ்டிக்ஸ் படித்தால் பன்னாட்டு நிறுவனங்களில் வேலை 74

9.3 வளம் நிறைந்த புவியியல் துறை 75

9.4 ஆய்வுத் துறையில் நுழைய நல்ல சாய்ஸ் பயோகெமிஸ்டரி 77

9.5 ஆய்வக வேலை வாய்ப்புக்கு உகந்த மைக்ரோபயாலஜி 79

9.6 வேகமாக வளர்ந்து வரும் உணவு மற்றும் ஊட்டச்சத்துத் துறை 81

IWCM

9.7 இயற்பியல்துறைப் படிப்பு 83
9.8 வேதியியல் துறைப் படிப்பு 84
9.9 தாவரவியல் துறைப் படிப்பு 86
9.10 விலங்கியல் துறைப் படிப்பு 87
9.11 நீங்களும் ஆகலாம் மேத்தமேட்டிஷியன்! 88

**10. வணிகவியல் படிப்புகள்** 89

10.1 பி.காம்., பி.பி.ஏ., படிப்பில் என்ன சொல்லிக்கொடுக்கப்படுகிறது? 89
10.2 உதவித்தொகையுடன் சி.ஏ. படிக்கலாம் 91
10.3 காஸ்ட் அண்ட் வொர்க்ஸ் அக்கவுன்டன்ட் படிப்பு 93
10.4 கம்பெனி செக்ரெட்டரிஷிப் படிப்பு 94

**11. அரசு வேலையில் சேர விரும்புகிறவர்களுக்கு ஏற்ற ஆர்ட்ஸ் படிப்புகள்** 96

11.1 வேலை வாய்ப்பை வழங்கும் எக்கனாமிக்ஸ், எக்னாமெட்ரிக்ஸ் 99
11.2 வாய்ப்புகள் நிறைந்த சமூகப் பணி படிப்பு 101
11.3 வளர்ந்து வரும் டிசைன் துறை 102
11.4 ஓவியக் கலையில் ஆர்வம் உள்ளவர்களுக்கு கவின்கலைக் கல்லூரி 104

11.4.1 பேஷன் டெக்னாலஜி 105
11.4.2 உடற்கல்வி 105

11.5 ஊடகத்துறையில் முன்னேற விஷுவல் கம்யூனிக்கேஷன் 106
11.6 இதழியல் படிப்பும் வேலை வாய்ப்பும் 108
11.7 ஐ.டி வேலைவாய்ப்பைப் பெற்றுத்தரும் ஆங்கிலப் பட்டப் படிப்பு 109
11.8 சட்டம் படித்து சட்ட நிபுணராகலாம் 111
11.9 உணவு விருந்தோம்பல் துறை படிப்புகள் 113

**12. எளிதில் வேலை வாய்ப்பைப் பெற பாலிடெக்னிக் படிப்புகள்** 116

**13. குறைந்த மதிப்பெண்ணா கவலை வேண்டாம், ஐ.டி.ஐ படிப்பு உங்களை உயர்த்தும்** 121


13.1 சென்னை மாநகராட்சி ஐடிஐ-யில் முற்றிலும் இலவச தொழிற்பயிற்சி 124
13.2 சென்னை மாநகராட்சியில் சமுதாயக் கல்லூரிகள் 126

**14. பிளஸ் டூ முடித்திருந்தால் ராணுவத்தில் அதிகாரியாகலாம்** 127
**15. பத்தாம் வகுப்பு படித்திருத்திருந்தால் அரசு வேலை** 129
**16. பேரிடர் மேலாண்மை படித்தால் அரசு வேலைக்கான வாய்ப்பு** 132
**17. தொலைதூரக் கல்வி - எங்கு சேரலாம்** 134
**18. கல்விக் கடன் பெறுவது எளிது** 136
**19.. உங்கள் பகுதியில் உள்ள அரசு கல்லூரிகள்** 138

IWCM

## +2 பாடப்பிரிவின் அடிப்படையில் உயர்கல்வி படிப்புக்கான வாய்ப்புகள்


## Courses on the Basis of Subject Group Studied in 12th Standard




IWCM

## +2 பாடப்பிரிவின் அடிப்படையில் உயர்கல்வி படிப்புக்கான வாய்ப்புகள்

## Courses on the Basis of Subject Group Studied in 12th Standard



IWCM

# 1. எதிர்கால வாழ்க்கைக்கு உதவும் உயர்கல்வி





'செய்திகளை மூளைக்குள் திணிப்பதல்ல கல்வி. வாழ்க்கையை வளப்படுத்துகின்ற, மனிதனை உருவாக்குகின்ற, குணத்தை மேம்படுத்துகின்ற, கருத்துகளை ஜீரணம் செய்யத்தக்க கல்வியே நாம் வேண்டுவது' என்கிறார் சுவாமி விவேகானந்தர். பட்டங்களும், மதிப்பெண்களும் உங்களுடைய தனித்திறமைக்கு அடையாளமாக இருக்கலாம். சமூகத்துக்குப் பொறுப்புள்ளவர்களாக, வேலை வாய்ப்பு உள்ளவர்களாக, சம்பாதிப்பவர்களாக இருக்கிறார்களா என்பதே அடையாளமாகப் பார்க்கப்படுகிறது.

பொருளடக்க பக்கத்துக்கு செல்ல




பிளஸ் டூ முடித்தவுடன் கல்லூரியில் சேர்ந்து விட்டால் போதும். நிச்சயம் வேலை கிடைத்து விடும் என்ற நம்பிக்கையுடன் மாணவர்கள் வலம் வருகிறார்கள். கல்லூரி படிப்பை முடிக்கும்போது எந்தளவுக்குக் கல்வியை உள்வாங்கி இருக்கிறார்கள் என்பதும், கல்லூரி படிப்பு மாணவர்களை எந்தளவுக்கு மேம்படுத்தி இருக்கிறது என்பதும்தான் அடுத்த நிலை உயர்வுக்கான அளவுகோல். கல்லூரியில் சேர்ந்து படிப்பில் கவனம் செலுத்திட வேண்டும். அரியர் இல்லாமல் ஒவ்வொரு செமஸ்டரிலும் அதிக மதிப்பெண்கள் பெற்றிட வேண்டும்.

பன்னாட்டு நிறுவனங்கள் வேலை வாய்ப்பு வழங்கும்போது கல்லூரி படிப்பில் அரியர் இல்லாமல் தேர்ச்சி பெற்றிருக்கிறார்களா என்பதை

**கூகுள்** நிறுவனத்தின் சி.இ.ஓ-வாக இருக்கும் சுந்தர்பிச்சை கல்லூரியில் மெட்ரியாலஜி படிப்பைத்தான் படித்தார். படிக்கும்போதே கூகுள் நிறுவனத்தில் வேலைக்குச் சேர வேண்டும் என்ற எண்ணத்தில் படிக்கவில்லை. அப்போது கூகுள் என்ற நிறுவனமும் தொடங்கப்படவில்லை. நல்ல கல்வி நிறுவனத்தில் படித்ததால் உயர்ந்த இடத்துக்குச் சென்றிருக்கிறார்.






IWCM

முதன்மையாகக் கவனிக்கிறார்கள். மேலும், எவ்வளவு சதவிகித மதிப்பெண் பெற்றிருக்கிறார்கள் என்பதையும் பார்க்கிறார்கள்.

நீங்கள் அடுத்தடுத்து முன்னேற வேண்டுமானால் உங்களது படிப்பில் கவனம் செலுத்திட வேண்டும். படித்து முடித்தவுடன் வேலை வாய்ப்பைப் பெற என்ன செய்ய வேண்டும் என்று யோசியுங்கள். கூடுதலாகச் சான்றிதழ் படிப்புகள் அல்லது பட்டயப் படிப்புகள் இருந்தால் அதில் சேர்ந்து உங்களது திறமையைப் பட்டைத் தீட்டுங்கள்.

டிஜிட்டல்தொழில்நுட்பக் காலத்தில் வாழ்வதால் உங்களது துறை சார்ந்த தகவல் தொழில்நுட்ப விஷயத்தைக் கற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டுங்கள். உங்களது படிப்பு சார்ந்த விஷயங்களில் அதிகக் கவனம் செலுத்துங்கள்.

பெற்றோர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டு உங்களைப் படிக்க வைக்கிறார்கள் என்பதை மறந்து விடாதீர்கள். நீங்கள் பள்ளியில் படிக்கும்போதும், கல்லூரியில் படிக்கும்போதும் அரசு உங்களுக்காக ஏராளமாகச் செலவு செய்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள் இது உங்களுடைய வாழ்க்கையை முன்னேற்றுவதற்காக மட்டுமே! முன்னேறுவோம்...சமூகத்தையும், நாட்டையும் முன்னேற்றுவோம்! ●

பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

# 2. சிறந்த கல்வி நிறுவனத்தை தேர்வு செய்வது எப்படி?

கல்லூரிப் படிப்பை ஒரு முறைதான் படிக்கப்போகிறோம். அதனால் சிறந்த கல்வி நிறுவனங்களில் படிக்க வேண்டும்.

- சிறந்த கல்வி நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்துப் படிக்கும்போது உங்களின் வெற்றி வாய்ப்பும் கூடும்.
- தரமற்ற கல்வியால் நல்ல வேலை வாய்ப்பு கிடைக்காது. பொருளாதார இழப்பும், கால விரயமும் ஏற்படும். இதனால் மாணவர்களின் கனவுகளும், எதிர்பார்ப்புகளும் சிதைய வாய்ப்புள்ளது.

ஆகையால், உயர்கல்வி படிக்கச் செல்லும்போது, நல்ல கல்லூரியையும் விரும்பும் படிப்பையும் மிகுந்த கவனத்துடன் தேர்வு செய்வது நல்லது.





மாணவர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் கல்லூரிகளின் பங்கு அதிகம். நல்ல கல்லூரியையும், படிப்பையும் தேர்ந்தெடுக்கும்போது உயர்கல்வி வெற்றிகரமானதாக அமையும்.

IWCM

சாதனையாளர்கள் பலரும், 'நான் இந்தக் கல்லூரியில் படித்ததால் தான் முன்னேறினேன்' என்று சொல்வார்கள். அந்தளவுக்கு வாழ்க்கையைத் தீர்மானிக்கும் முக்கியமான ஒன்றாக இருக்கிறது கல்லூரிப் படிப்பு. கல்லூரியைத் தேர்வுசெய்யும்போது கவனிக்க வேண்டிய முக்கிய விஷயங்கள்:

### 2.1 நிபுணத்துவக் கல்லூரிகள்

ஒரு சில கல்லூரிகள் தொழில்நுட்பம், மேலாண்மை, பொருளாதாரம் எனப் பல துறை சார்ந்த நிபுணத்துவத்தைப் பெற்றுள்ளன. உதாரணத்துக்கு, சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள 'மெட்ராஸ் ஸ்கூல் ஆஃப் எக்கனாமிக்ஸ்' கல்லூரி, பொருளாதாரப் படிப்பில் நிபுணத்துவம் பெற்றது.

அடையாரில் உள்ள சென்னை ஐ.ஐ.டி-யும் அண்ணா பல்கலைக்கழகமும் தொழில்நுட்பக் கல்வியில் பெயர் பெற்றவை.

சென்னையில் உள்ள மருத்துவக் கல்லூரிகள் மருத்துவத் துறையில் தனி அடையாளம் கொண்டவை. ஆக, எத்தகைய துறையில் நிபுணத்துவம் பெறுவது என்று முடிவெடுத்து நிபுணத்துவம் பெற்ற கல்லூரியில் சேர்வது சிறப்பு.

பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

## 2.2. பிரபலமான கல்லூரிகள்

உங்கள் பகுதியில் உள்ள ஒரு சில கல்லூரிகள் ஏற்கெனவே நல்ல கல்லூரி எனும் பெயரைப் பெற்றிருக்கும். அந்தக் கல்லூரியை நடத்தும் மேலாண்மை அமைப்பு சிறப்பானதாக இருக்கும். பேராசிரியர்கள் அனுபவம் கொண்டவர்களாக இருப்பார்கள். அங்குப் படித்த முன்னாள் மாணவர்கள் உயர்பொறுப்பில் இருப்பார்கள். பல பேர் வெளிநாட்டில் வேலை வாய்ப்பைப் பெற்றிருப்பார்கள். கல்விக் கட்டணம் மிகக் குறைவாக இருக்கும்.

**பொதுவாக, மாணவர்கள் நலனில் அக்கறை செலுத்தும் நல்ல கல்லூரிகளைத் தேர்ந்தெடுத்துச் சேர்வது உயர்வுக்கு வழிகாட்டும்.**

ஒரு சில கல்லூரிகள் பிரபலமான பிரமுகர்களால் நடத்தப்படுவதாக இருக்கலாம். இத்தகைய கல்லூரிகளில் பல்கலைக்கழகத் தேர்ச்சி விகிதம் எப்படி உள்ளது என்பதை அறிந்து சேர்வது நல்லது.

**நல்ல கல்வி நிறுவனத்தைத் தேர்ந்தெடுத்து எந்தப் பிரிவில் படித்தாலும் வேலை வாய்ப்பைப் பெறமுடியும்.**

IWCM



## 2.3 கல்லூரியின் சுற்றுச்சூழலும் ஆன்லைன் வகுப்புகளும்

கொரோனா அலை தொடர்ந்து கொண்டே இருப்பதால், ஆன்லைன் வகுப்புகள் தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது.

- ஆன்லைன் வகுப்புகளை வழங்குவதற்கான கட்டமைப்பு வசதிகள் கல்லூரிகளில் உள்ளனவா என்பதை அவசியம் கவனிக்கவும்.
- கல்லூரிச் சேர்க்கைக்கு விண்ணப்பிக்கும்போதே கல்லூரியின் சுற்றுச்சூழலையும் கல்லூரியில் உள்ள வசதிகளையும் விசாரிக்க வேண்டும்.
- கல்லூரிகளில் ஆய்வகங்கள், நூலகம், இன்டர்நெட் வசதி, கழிப்பிட வசதி, தண்ணீர் வசதி போன்றன இருக்கும். ஆனால், அவை முறையாகப் பராமரிக்கப்படுகின்றதா என்பதையும் விசாரியுங்கள்.

### 2.4. முன்னாள் இந்நாள் மாணவர்களின் ஆலோசனை

நீங்கள் சேர நினைக்கும் கல்லூரியில் படித்த முன்னாள் மாணவர்களிடமும், தற்போது படித்துக்கொண்டிருக்கும் மாணவர்களிடமும் கல்லூரியின் செயல்பாடுகள் குறித்து தீர விசாரியுங்கள்.

நீங்கள் ஆலோசனை பெறும் முன்னாள் மாணவர்கள் நன்றாகப் படிக்காதவர்களாக இருந்தால், அவர்களின் ஆலோசனைகள் உங்களைக் குழப்பக்கூடும். ஆகையால், குறிப்பிட்ட கல்லூரியில் படித்த வெற்றியாளரை அடையாளம் கண்டு அவரின் ஆலோசனையைப் பெறுங்கள். இந்த ஆலோசனை உங்களுடைய எதிர்காலத்துக்கும், கல்லூரி வாழ்க்கைக்கும் மிகவும் உதவியாக அமையும்.

### 2.5. கல்லூரி தகவல் புத்தகத்தை ஒப்பீடு செய்யுங்கள்

கல்லூரிக்கு விண்ணப்பிக்கும்போது கல்லூரி குறித்த தகவல் அடங்கிய புத்தகம் வழங்கப்படுவது வழக்கம். இந்தத் தகவல் புத்தகத்தில்

- கல்லூரி எப்போது தொடங்கப்பட்டது, குறிப்பிட்ட பாடப்பிரிவு எப்போது தொடங்கினார்கள், பாடப்பிரிவிற்கு உரிய அனுமதி பெற்றிருக்கிறார்களா?
- கல்லூரி நிர்வாகிகள் குறித்த விவரங்கள்
- கல்லூரியில் பணியாற்றும் பேராசிரியர்கள், கல்லூரியில் உள்ள வசதிகள் எனக் கல்லூரியின் விவரங்கள் அனைத்தையும் தொகுத்து வழங்கியிருப்பார்கள்.

IWCM

நீங்கள் விண்ணப்பிக்கும் கல்லூரிகளின் தகவல் புத்தகங்களில் உள்ள விவரங்களையும் மற்ற கல்லூரியின் விவரங்களையும் ஒப்பிட்டு, எந்தக் கல்லூரியில் என்னென்ன வசதிகள் உள்ளன என்பதைக் கண்டறியுங்கள்.

### 2.6. விளம்பரமும் கேம்பஸ் இண்டர்வியூவும்!

எஃப்.எம் விளம்பரமாகட்டும், தற்போது கல்லூரியில் வேலை பார்க்கும் பணியாளர்களாகட்டும், எங்கள் கல்லூரி நல்ல கல்லூரி என ஏகத்துக்கும் கல்லூரி குறித்த நல்ல இமேஜை உருவாக்குகிறார்கள்.

ஒரு சில கல்லூரிகளோ, எங்கள் கல்லூரியிலிருந்து 1500 பேர் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர், 2000 பேர் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர் என்று விளம்பரம் செய்கின்றனர். 10 ஆண்டுகளுக்கு முன்பு கேம்பஸ் இன்டர்வியூ நடத்தப்பட்டதையே பெரும் சாதனையாக விளம்பரம் செய்கிறார்கள். இவற்றில் எல்லாம் மயங்காமல் தீர விசாரித்துச் சேர்வது நல்லது.

பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

### 2.7. இணையத்தின் உதவியை நாடுங்கள்

உங்களுடைய கல்வி சார்ந்த சந்தேகங்களுக்கு இணையத்தின் உதவியை நாடலாம். பல்வேறு இணைய தளங்கள், கல்வி நிறுவனங்கள் குறித்தும் பாடப்பிரிவுகள் குறித்தும் பல்வேறு தகவல்களை வழங்கி வருகின்றன. தகவல்களின் உண்மை தன்மையை அறிந்து கல்லூரிகளில் சேரலாம்.

### 2.8. கட்டணச் சலுகை வழங்கும் கல்லூரிகள்!

ஒரு சில கல்லூரிகள் பன்னிரண்டாம் வகுப்பில் 90 அல்லது 80 சதவிகிதத்துக்குக் கூடுதலாக மதிப்பெண் பெற்றிருந்தால் கல்விக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை, பேருந்துக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை என்ற விளம்பரமும் செய்கின்றன.

மாணவர்கள் சேர்க்கை இல்லாமல் இருக்கும் கல்லூரிகளில் சிலவற்றில் இத்தகைய விளம்பரத்தைச் செய்கின்றன. இந்தக் கல்லூரிகளில் கட்டணச் சலுகை மட்டும்தானா அல்லது கற்றுக்கொடுப்பதும் சலுகை அளவிலா என்பதையும் விசாரியுங்கள்.

### 2.9. நிபுணர்களின் ஆலோசனையைப் பெறுங்கள்



தற்போது கல்லூரிகள் மற்றும் பாடப்பிரிவுகள் குறித்து நிபுணர்கள் பலரும் ஆலோசனை வழங்குகின்றனர். இவர்களின் ஆலோசனைக் கூட்டங்கள் இணையத்திலும் நடத்தப்படுகின்றன. அவற்றில் கலந்துகொண்டு குறிப்பிட்ட துறை குறித்தும், கல்லூரிகளின் நிலை குறித்தும் ஆலோசனை பெறலாம்.

### 2.10. மாணவர்கள் சேர்க்கையில் வெளிப்படைத்தன்மை

தமிழ்நாட்டில் உள்ள மருத்துவக் கல்லூரிகளிலும், பொறியியல் கல்லூரிகளிலும் சேர அரசு கவுன்சலிங் நடத்துகிறது. அறிவியல் மற்றும் கலைக் கல்லூரிகளில் சேர ஆன்லைன் கவுன்சலிங் முறையை அறிமுகப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. ஆகையால் மாணவர் சேர்க்கை குறித்த விவரங்கள் வெளியாகிறதா என்பதை கவனமாகப் பார்க்க வேண்டும். பெரும்பாலான தனியார் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கையில் வெளிப்படைத்தன்மை இருப்பதில்லை. வெளிப்படைத்தன்மையோடு மாணவர்கள் சேர்க்கை நடத்தப்படும் கல்லூரிகளில் சேர்வதே நல்லது. ●

# 3. கல்லூரிப் படிப்பைத் தேர்வு செய்யும் போது கவனிக்க வேண்டிய விஷயங்கள்

*இளநிலை பட்டப்படிப்பில் விருப்பமான துறைகளைத் தேர்ந்தெடுத்தால் சுலபமான வெற்றியைப் பெறலாம். ஆனால், சில விஷயங்களை முன்கூட்டியே சிந்திப்பது நல்லது.*


### 3.1 முதலில் முடிவெடுக்க வேண்டிய விஷயங்கள்

- உங்களுக்குப் பிடித்த ஆர்வமுள்ள துறை எது?
- தொழில் படிப்பா அல்லது தொழில் சாரா படிப்பா?
- சேர விரும்பும் படிப்பின் எதிர்காலம் எப்படி இருக்கும்?
- என்னென்ன மாதிரியான வாய்ப்புகள் உள்ளன?
- கலந்தாய்வு மூலம் சேர்க்கையா அல்லது தனியே விண்ணப்பிக்க வேண்டுமா?
- படித்து முடித்தவுடன் வேலையா அல்லது உயர்கல்வியா?
- கல்விக்கான கட்டணம் எவ்வளவு?
- கல்லூரிப் படிப்பை முடிப்பதற்கு எவ்வளவு செலவாகும்?
- வேலை வாய்ப்பைப் பெற சான்றிதழ் படிப்புகள் உள்ளனவா?
- விண்ணப்பித்த உடன் கல்லூரியில் இடம் கிடைக்குமா அல்லது போட்டிகள் உள்ளதா?
- உதவித்தொகை கிடைக்குமா? கல்விக் கட்டணத்தில் சலுகை உண்டா?

IWCM

*மேற்கண்ட கேள்விகளுக்குத் தெளிவான பதிலுடன் கல்லூரியைத் தேட ஆரம்பிப்பது நல்லது.*

*பொறியியல், மருத்துவம், பாராமெடிக்கல், சட்டம், மேலாண்மை, ஃபேஷன், ஆர்க்கிடெக்சர், கலை அறிவியல் படிப்புகள், வடிமைப்பு (Design), இதழியல், திரைப்பட துறைக்குச் செல்வதற்கான ஏராளமான படிப்புகளும் உள்ளன.*





IWCM



**பெற்றோர்கள் மற்றும் நண்பர்களின் வற்புறுத்தலால் எந்தப் படிப்பையும் தேர்ந்தெடுக்காதீர்கள்.**

IWCM

*மாணவர்கள், தங்களுடைய பலத்தையும் பலவீனத்தையும் அறிந்து சரியான படிப்பைத் தேர்வுசெய்ய வேண்டும்.*


### 3.2 உயர்கல்விக்கான வாய்ப்புகள்

+2 வகுப்பில் பொதுவாக நான்கு பிரிவுகளில் மாணவர்கள் படித்திருப்பார்கள்.

1. கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல் அல்லது கணினி அறிவியல்.
2. கணிதப் பாடத்திற்குப் பதிலாக, தாவரவியல் மற்றும் விலங்கியல் பாடப் பிரிவுகள்.
3. கணக்குப் பதிவியல், பொருளாதாரம், வணிகவியல், வரலாறு பாடங்களைக் கொண்ட பிரிவுகள்.
4. தொழில்படிப்புகள் (வொகேஷனல் கோர்ஸ்) எடுத்து படிப்பவர்கள்.

மேற்கண்ட பிரிவுகளின் அடிப்படையிலேயே எந்தப் படிப்பில் சேர்வது என்பதை முடிவெடுக்கலாம். உதாரணத்துக்கு முதல் பிரிவில் உயிரியல் பாடத்தைப் படித்தவர்களுக்கு மருத்துவம், பொறியியல் என எந்தப் பிரிவை வேண்டுமானாலும் தேர்ந்தெடுக்கலாம். மூன்றாவது பிரிவைத் தேர்ந்தெடுத்தவர்கள் வணிகவியல் பாடங்களைத் தேர்ந்தெடுத்துப் படிக்கலாம். தொழிற்படிப்பு படித்தவர்கள் குறிப்பிட்ட பாடப்பிரிவில் மட்டுமே உயர்கல்விக்குச் செல்ல முடியும். ●

# 4.மதிப்பும் மரியாதையும் மிகுந்த மருத்துவத் துறை




*கொரோனா பாதிப்புக்குப் பின்னர் மருத்துவத் துறையின் மதிப்பும் மரியாதையும் பல மடங்கு அதிகரித்துள்ளது. கடந்த பத்தாண்டுகளில் தடுக்கி விழுந்தாலும் பொறியியல் படித்தவர்கள் மீது விழும் அளவிற்குப் பொறியியல் படித்தவர்களின் எண்ணிக்கை அதிகமாகிவிட்டது. ஆனால், மருத்துவத் துறையில் மிகப்பெரிய இடைவெளி உள்ளது.*

- **மருத்துவப் படிப்புகளில் சேர்வதற்கான ஆர்வம் அதிகரித்துவருகிறது. எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ்., நர்சிங் படிப்புகளில் சேர, நீட் நுழைவுத்தேர்வு எழுதி குறைந்தபட்ச மதிப்பெண் பெற வேண்டியது அவசியம்.**
- *நீட் தேர்வு எழுதும் மாணவர்கள், இரண்டு கலந்தாய்வுகளில் கலந்து கொண்டும் அரசு மருத்துவக் கல்லூரியில் சேரலாம்.*



பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

| | |
|---|---|
| தமிழ்நாடு மருத்துவக் கவுன்சில் நடத்தும் கலந்தாய்வு (https://tnhealth.tn.gov.in/) | |
| அகில இந்திய ஒதுக்கீடு இடங்களுக்கு இந்திய மருத்துவக் கவுன்சில் நடத்தும் கலந்தாய்வு (https://mcc.nic.in/ugcounselling/) | |

- *ஐந்தரை ஆண்டுக் காலப் படிப்பாக எம்பிபிஎஸ் உள்ளது. பல் மருத்துவப் படிப்பு என்பது ஐந்தாண்டு காலம் கொண்டது. தமிழ்நாட்டில் 36 அரசு மருத்துவக்கல்லூரிகளும் 16 தனியார் மருத்துவக் கல்லூரிகளும் உள்ளன. அரசு மருத்துவக் கல்லூரியில் 3150 இடங்கள் உள்ளன. இந்தியாவிலேயே அதிக மருத்துவப் படிப்புகள் கொண்ட மாநிலமாகத் தொடர்ந்து தமிழகம் முதலிடத்தில் இருக்கிறது.*

**வேலை வாய்ப்பு:** *எம்.பி.பி.எஸ்., படித்து அரசு மருத்துவமனையில் பயிற்சி மருத்துவராகப் பணியாற்றுபவர்களுக்கு அரசு மருத்துவர்களாக நியமிக்கப்பட வாய்ப்பு உள்ளது. தற்போது தனியார் மருத்துவமனைகள் அதிகரித்தும், தங்களுடைய கிளை மருத்துவ மனைகளை இரண்டாவது மற்றும் மூன்றாவது நகரங்களில் தொடங்குவதாலும் மருத்துவம் படித்தவர்களுக்கு வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன.*

IWCM

### 4.1 சென்னையில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகள்:

| | |
|---|---|
| 1 | சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை. |
| 2 | ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, இராயபுரம், சென்னை. |
| 3 | கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி, சேத்துப்பட்டு, சென்னை. |
| 4 | சென்னை அரசு மருத்துவக் கல்லூரி, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை. |
| 5 | தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரி, சென்னை. |

### 4.2 எம்பிபிஎஸ் படிப்பு கட்டணம் ரூ. 13600 மட்டுமே!

- அரசு மருத்துவக் கல்லூரிகளில் கட்டண விவரம்
- பொதுப்பிரிவினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் செலுத்த வேண்டிய கட்டணம் ரூ. 13,600.
- பல் மருத்துவ கல்லூரியில் இடம் கிடைத்தால் செலுத்த வெண்டிய கட்டணம் ரூ. 11,600.
- பிற பிரிவைச் சேர்வ்த மாணவர்கள் எம்.பி.பி.எஸ்., சேர ஒதுக்கீடு பெற்றாலோ பல் மருத்துவம் பயில வாய்ப்பு பெற்றாலோ கட்ட வேண்டியக் கட்டணம் ரூ. 9,600.

### 4.3 அரசு ஒதுக்கீட்டில் சுயநிதி மருத்துவக் கல்லூரியில் கட்டணம் எவ்வளவு?

- அரசு ஒதுக்கீட்டில் சுயநிதி மருத்துவக் கல்லூரிகளில் பொதுப் பிரிவினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவைச் சார்ந்த மாணவர்களுக்கு எம்.பி.பி.எஸ் அல்லது பல் மருத்துவம் சேர ஒதுக்கீடு பெற்றால், கல்விக் கட்டணமாக ரூ. 25,000 செலுத்த வேண்டும்.
- தாழ்த்தப்பட்டோர், அருந்ததியினர், பழங்குடியினர் மற்றும் கிறிஸ்தவ மதம் மாறிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள், தங்களுடைய பெற்றோர்களின் ஆண்டு வருமானம் 2.5 லட்சத்துக்குக் குறைவாக இருந்தால், கல்விக் கட்டணமாக 25,000 ரூபாய் செலுத்துவதில் இருந்து விலக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 4.4 திட்டமிட்டு படித்தால் நீட் தேர்வு எளிது

இந்தியாவில் மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்க வேண்டும் என்றால் நீட் தேர்வு எழுத வேண்டியது அவசியம். போட்டி அதிகரித்துவரும் வேளையில் நீட் நுழைவுத்தேர்வுக்கு முன்கூட்டியே திட்டமிடலும் தகுந்த முறையில் தயாரிப்புப் பணியை ஆரம்பிப்பது அவசியம்.

- அரசு மருத்துவக் கல்லூரியில் எம்பிபிஎஸ் படிப்புக்கான ஆண்டு கல்விக் கட்டணம்: 13,600 ரூபாய்.
- அரசு பல் மருத்துவக் கல்லூரியில் பி.டி.எஸ்., படிப்புக்கான ஆண்டு கல்விக் கட்டணம்: 11,600 ரூபாய்.
- நர்சிங், பிஸியோதெரபி, பார்மஸி போன்ற துணை மருத்துவப் படிப்புகளுக்கான கட்டணம் 3000 ரூபாய்.



பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

நீட் தேர்வை தேசிய தகுதித்தேர்வு ஆணையம் நடத்திவருகிறது. தேசிய தகுதித்தேர்வு ஆணையம், நீட் தேர்வுக்கு எந்தப் பகுதியைப் படிக்க வேண்டும் என்பதற்கான பாடத்திட்டத்தையும், மாதிரி கேள்வித்தாள்களையும் வெளியிட்டுள்ளது. மாணவர்கள் இதனை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும், தேர்வுக்கு முன்பு மாதிரி தேர்வுகளையும் ஆன்லைனில் நடத்துகிறது. இதனையும் எழுதி பழகிக்கொள்ளலாம்.

> தமிழிலும் நீட் தேர்வு எழுதலாம். இயற்பியல் பாடத்திலிருந்து 60 கேள்விகள், வேதியியல் பாடத்திலிருந்து 60 கேள்விகள் , உயிரியல் பாடத்திலிருந்து 60 கேள்விகள் என மொத்தம் 180 கேள்விகள் கேட்கப்படும். மொத்த மதிப்பெண் 720.

### 4.5 நீட் தேர்வுக்கு யார் விண்ணப்பிக்க முடியும்?

- பொதுப் பிரிவினர் இயற்பியல், வேதியியல், உயிரியல் அல்லது தாவரவியல் மற்றும் விலங்கியல் பாடத்தில் 50 சதவிகித மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். மற்ற பிரிவினர், மேற்கண்ட பாடங்களில் 40 சதவிகித மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும்.
- நீட் தேர்வு எழுத விருப்பப்படும் மொழிகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். கேள்விகள் ஆங்கிலத்திலும் தமிழிலும் இடம்பெறும்.
- மூன்று மணி நேரம் நடைபெறும் நீட் தேர்வில் இயற்பியல், வேதியியல், உயிரியல் (தாவரவியல் மற்றும் விலங்கியல்) பாடங்களிலிருந்து அப்ஜெக்டிவ் (சரியான விடைகளைத் தேர்ந்தெடுக்கும் முறை) முறையில் 180 கேள்விகள் கேட்கப்படும்.

### 4.6 எவ்வளவு மதிப்பெண்?

சரியான விடையளித்தால் 4 மதிப்பெண்கள். தவறான விடையளித்தால் ஒரு மதிப்பெண் கழித்துக்கொள்ளப்படும். கேள்விக்கு பதிலளிக்கவில்லை என்றால் மதிப்பெண் கிடையாது. மொத்த மதிப்பெண் 720. கடந்த ஆண்டில் 720-க்கு 720 மதிப்பெண் பெற்று முதலிடம் பெற்றவர்களும் உண்டு.

நீட் தேர்வு குறித்து மேலும் விவரங்களுக்கு: https://www.neetnic.in/neet-2023/




IWCM

## 4.7 வெளிநாட்டு வாய்ப்பை வழங்கும் நர்ஸிங் படிப்பு!

பன்னிரண்டாம் வகுப்பு உயிரியல், வேதியியல், இயற்பியல் பாடப்பிரிவுகளைப் படித்தவர்கள், நர்ஸிங் படிப்பில் சேரலாம் என்றாலும், நீட் தேர்வில் தேர்ச்சிபெற்றவர்களிடையே கலந்தாய்வு நடத்தியே நர்ஸிங் படிப்பில் சேர்க்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசு மருத்துவக் கல்லூரியில் ஓர் ஆண்டு படிப்புக் கட்டணம் 3000 ரூபாய் மட்டுமே! மேலும், நர்ஸிங் படிப்பில் சேர போட்டியும் குறைவு. இதனால் நர்ஸிங் கோர்ஸைத் தேர்ந்தெடுப்பவர்கள் அதிகம். தற்போது அதிகரித்துவரும் மருத்துவமனைகளால் நர்ஸிங் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்புகளும் அதிகரித்துள்ளன. ஆரம்பத்தில் நர்ஸ் என்றழைக்கப்பட்டவர்கள் பொதுவான ஒரு பிரிவின் கீழ் மட்டுமே பயின்று வந்தனர். தற்போது, நர்ஸிங் துறையிலும் பல சிறப்புப் பிரிவுகளும் வர ஆரம்பித்து விட்டன.




### 4.7.1. யார் நர்ஸிங் படிக்கலாம்?

நோயாளிகளுடனும் மருத்துவர்களுடன் எந்த விதமான சுணக்கமும் இல்லாமல் பணியாற்றுவதற்கான அர்ப்பணிப்பு, இரக்கம் மற்றும் சிறந்த தகவல் தொடர்புத் திறனும் அவசியம்.

நான்காண்டு நர்ஸிங் படித்து முடித்தவர்கள், ஒருவருட பயிற்சி முடித்து, தங்களுடைய பெயரை நர்ஸிங் கவுன்சிலில் பதிவு செய்துகொள்ள வேண்டும். பிஎஸ்சி நர்ஸிங் முடிப்பவர்கள், எம்.எஸ்சி., நர்ஸிங் படிக்கவும் வாய்ப்புள்ளது. இளநிலை நர்ஸிங் முடித்தவர்கள், குழந்தை மருத்துவ நர்ஸிங், அவசர கால பிரிவு நர்ஸிங், கார்டியோ-தெரபிக் நர்ஸிங், நியூரோ சயின்ஸ் நர்ஸிங், நெஃப்ரோ-யூரோலஜி நர்ஸிங், மகளிர் மருத்துவ நர்ஸிங் என ஏராளமான சிறப்புப் பயிற்சிகளும் படிப்புகளும் உள்ளன.

### 4.7.2 எத்தனை இடங்கள் உள்ளன?

தமிழகத்தில் ஐந்து அரசு மருத்துவக் கல்லூரிகளில் நர்ஸிங் படிப்புகள் உள்ளன. இங்கு, 250 பி.எஸ்சி., நர்ஸிங் இடங்களும், 2000 நர்ஸிங் சான்றிதழ் படிப்புக்கான இடங்களும் உள்ளன. தனியார் கல்வி நிறுவனங்களில் அரசு ஒதுக்கீட்டில் 5134 பி.எஸ்சி., நர்ஸிங் இடங்கள் உள்ளன. அரசு மருத்துவக் கல்லூரியில் நர்ஸிங் பட்டப்படிப்புக்கான ஆண்டுக் கட்டணம் 3000 ரூபாய் மட்டுமே. இதுவே தனியார் கல்லூரியில் 45,000 ரூபாய்.

பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

### 4.7.3. யார் விண்ணப்பிக்கலாம்?

*மாணவிகளுக்கு வாய்ப்புகள் அதிகம் உள்ள நர்ஸிங் படிப்பில் தற்போது மாணவர்களும் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். BSc (Nursing) படிக்க, 17 வயது நிறைவடைந்தவர்களும் 30 வயதுக்கு உட்பட்டவர்களும் விண்ணப்பிக்கலாம். எஸ்.சி, எஸ்.டி பிரிவினர் வயது 35 வரை இருக்கலாம். மற்ற படிப்புகளுக்கு விண்ணப்பிக்க, 17 வயது நிரம்பியிருக்க வேண்டும்.*

**வேலை வாய்ப்பு:** தற்போது, இந்தியா முழுவதும் 6 லட்சம் நர்ஸிங் படித்தவர்களுக்கான தேவை உள்ளது என்கிறது சுகாதாரத்துறை. மத்திய அரசு சுகாதாரத்துறையில் அதிக கவனம் செலுத்தி வருவதால் இந்த எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும் எனக் கணித்துள்ளனர். நர்ஸிங் படித்தவர்களுக்கு அரசு வேலை வாய்ப்பும் அதிகமாக உள்ளது.

> மாணவிகளுக்கு வாய்ப்புகள் அதிகம் உள்ள நர்ஸிங் படிப்பில் தற்போது மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். BSc (Nursing) படிக்க, 17 வயது நிறைவடைந்தவர்களும் 30 வயதுக்கு உட்பட்டவர்களும் விண்ணப்பிக்கலாம்.

IWCM

*நர்ஸிங் படித்தவர்களுக்கு வெளிநாட்டிலும் வேலை வாய்ப்பு மிகுந்துள்ளது. தமிழக அரசு நிறுவனமான ஓவர்சீஸ் மேன்பவர் கார்ப்பரேஷன் நிறுவனம், நர்ஸிங் படித்தவர்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பை அடையாளம் கண்டு தேர்ந்தெடுத்தும் அனுப்பும் பணியைச் செய்துவருகிறது. குறிப்பாக, இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் வளைகுடா நாடுகளில் நர்சிங் படித்தவர்களுக்கு தேவை அதிகமாக உள்ளது.*

| 4.7.4. BSc (Nursing) படிப்புள்ள அரசு மருத்துவக் கல்லூரிகள்: | |
|---|---|
| 1 | Madras Medical College, Chennai. |
| 2 | Madurai Medical College, Madurai. |
| 3 | Chengalpattu Medical College, Chengalpattu. |
| 4 | Govt. Mohan Kumaramangalam Medical College, Salem. |
| 5 | Govt. Theni Medical College, Theni. |

# 4.8 இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ள பிசியோதெரப்பிஸ்ட் படிப்பு!




IWCM

இப்போது மருத்துவமனைக்கு சிகிச்சைக்குச் சென்றால், மருத்துவர் சிகிச்சையை முடித்ததும் அடுத்த அறையில் உள்ள பிசியோதெரப்பிஸ்ட்டையும் பார்க்கலாம். நோயைக் குணமாக்குவதில் மருத்துவர் வழங்கும் சிகிச்சையுடன் பிசியோதெரப்பிஸ்ட் வழங்கும் பயிற்சியும் உடலையும் சீக்கிரம் குணமாக்கும். தற்போது, பெரிய மருத்துவமனைகளில் பிசியோதெரப்பிஸ்ட்டுகளுக்கு அதிக முக்கியத்துவம் வழங்குகிறார்கள். இதனால் நிபுணத்துவம் பெற்ற பிசியோதெரப்பிஸ்ட்டுகளுக்கு தேவை அதிகரித்துவருகிறது.

நோயின் தன்மை, உடல் உறுப்புகளின் செயல்பாடு போன்றவற்றை நுணுக்கமாகக் கற்றுக்கொள்ளவும், மருத்துவச் சிகிச்சையுடன் உடற்பயிற்சியின் மூலம்

> “பிசியோதெரப்பிஸ்ட் படிப்பில் சேர நல்ல மதிப்பெண் பெற்றிருந்தால் போதும் என்ற நிலை மாறி, குறைந்தபட்சம் நீட் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்றாகியிருக்கிறது.”



பாதிக்கப்பட்ட பகுதியை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவரத்தேவையான பயிற்சிகளைக் கற்றுத் தரும் திறனும் பிசியோ தெரப்பிஸ்ட்க்கு அவசியம்.

பிசியோதெரப்பிஸ்ட், மருத்துவமனையில் பணி செய்வதோடு மற்ற நேரத்தில் நோயாளியின் இருப்பிடத்திற்கே சென்று பயிற்சி வழங்குவதும் அதிகரித்து வருகிறது. இதன்மூலம் கணிசமான வருமானம் கிடைக்கிறது. தற்போது, விளையாட்டுத்துறை வளர்ந்து வருகிறது. இத்துறையில் பிசியோதெரப்பிஸ்ட்டுகளின் பங்களிப்பு அதிகரித்துள்ளது. விளையாட்டுத் துறையில் ஆர்வமுள்ளவர்கள், பிசியோதெரப்பிஸ்ட் படித்தும் வேலை வாய்ப்பைப் பெறலாம்.

பிசியோதெரப்பிஸ்ட் படிப்பில் சேர நல்ல மதிப்பெண் பெற்றிருந்தால் போதும் என்ற நிலை மாறி, குறைந்தபட்சம் நீட் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்றாகியிருக்கிறது. இது, நான்கரை வருடப் படிப்பாகும்.

| 4.8.1. பிசியோதெரபி படிப்பு உள்ள அரசுக் கல்லூரிகள்: | |
|---|---|
| 1. | Govt. Institute of Rehabilitation Medicine, Chennai |
| 2. | Govt. College of Physiotherapy, Trichy |
| 3. | Govt. Kilpauk Medical College, Chennai |

**இருபதுக்கும் மேற்பட்ட சுயநிதிக் கல்லூரிகள் உள்ளன. அரசுக் கல்லூரியில் ஆண்டு படிப்புக் கட்டணம் ரூ. 3000. சுயநிதிக் கல்லூரிகளில் படிப்புக் கட்டணம் ரூ. 33,000.**

**வேலை வாய்ப்பு:** பிசியோதெரப்பிஸ்ட் படித்தவர்கள், மருத்துவமனைகள் மற்றும் மருத்துவச் சிகிச்சை மையங்களில் வேலை வாய்ப்பைப் பெறலாம். பணி அனுபவத்தைப்பெற்று தனியே பிசியோதெரப்பி மையங்களை வைத்தும் நடத்தலாம். விளையாட்டு நிறுவனங்களிலும், உடற்பயிற்சி மையங்களிலும் வேலை வாய்ப்பைப் பெறலாம். இந்தியாவைவிட, வளர்ந்த நாடுகளில் பிசியோதெரப்பி படிப்பைப் படித்தவர்களுக்கு வாய்ப்புகள் அதிகம். ●



பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

# 4.9 மருந்தாளுநர்களுக்கான படிப்பு (Pharmacy Courses)




மருத்துவத்துறையில் மருந்தாளுநர்களுக்கான படிப்புகளும் (Pharmacy Courses) முக்கியத்துவம் பெறுகின்றன. பன்னிரண்டாம் வகுப்பில், இயற்பியல், வேதியியல், உயிரியல் அல்லது தாவரவியல் மற்றும் விலங்கியல் பாடங்களில் 40 சதவிகிதம் அல்லது அதற்கும் கூடுதலான மதிப்பெண் பெற்றவர்கள் பார்மஸி படிப்பில் சேர விண்ணப்பிக்கலாம்.

தமிழ்நாடு மருத்துவக் கல்வி இயக்ககத்தால் நடத்தப்படும் மாநில அளவிலான கலந்தாய்வு வழியாக இப்படிப்பில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். தமிழ்நாட்டில் சென்னை மற்றும் மதுரையில் அரசு மருந்தாளுநர் கல்லூரிகள் உள்ளன. இதைத் தவிர, 37 சுயநிதிக் கல்லூரிகளிலும் மருந்தாளுநர் படிப்பு உள்ளது.

பார்மஸி படிப்பவர்கள் அரசு மற்றும் தனியார் மருத்துவ மனைகளில் மருந்தாளுநராகப் பணிபுரியலாம். விற்பனையாளராகத் தனியார் மருந்தகங்களில் பணிபுரியலாம். எம்.பார்ம் போன்ற உயர் கல்வி படிக்கலாம். பி.பார்ம் படித்தவர்கள் தனியாக மருந்தகம் துவங்கலாம். டி.பார்ம் படித்தவர்கள் நோயாளிகளுக்கு மருந்து ஆலோசகராகப் பணிபுரியலாம். வெளிநாட்டிலும் வேலை வாய்ப்பு உள்ளது.

| | |
|---|---|
| 1. | BPharm (Bachelor of Pharmacy) - 4 Years |
| 2. | DPharm (Diploma in Pharmacy) - 2 Years |
| 3. | PharmD (Doctor in Pharmacy) - 6 Years |
| **4.9.1. பி.பார்ம் படிப்புள்ள அரசு மருத்துவக் கல்லூரிகள்:** | |
| 1 | Madras Medical College, Chennai |
| 2 | Madurai Medical College, Madurai |

பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

# 4.10 சித்தா - ஆயுர்வேதப் படிப்புகள்



எம்.பி.பி.எஸ். படிப்பு, ஆங்கில மருத்துவத்தை முதன்மையாகக் கொண்டது. இதற்கு அடுத்த நிலையில் சித்தா - ஆயுர்வேத மருத்துவப் படிப்புகள் உள்ளன.

| |
|---|
| BSMS - Bachelor of Siddha Medicine and Surgery |
| BAMS - Bachelor of Ayurvedic Medicine and Surgery |
| BNYS - Bachelor of Naturopathy and Yogic Sciences |
| BUMS - Bachelor of Unani Medicine and Surgery |

மேற்கண்ட படிப்புகளுக்கான சேர்க்கை, எம்.பி.பி.எஸ்., மருத்துவப் படிப்புக்கான சேர்க்கைக்குப் பின்னர் கலந்தாய்வு நடத்தப்படும். இது குறித்த அறிவிப்பை தமிழக மருத்துவக் கவுன்சில் வெளியிடும்.

**மேலும் விவரங்களுக்கு**
https://tnhealth.tn.gov.in/
www.tnmedicalselection.org

*கடந்த ஆண்டு முதல் நீட் தேர்வில் குறைந்தபட்ச மதிப்பெண் பெற்றவர்களே இந்தப் படிப்புக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் என்று அறிவித்துள்ளதையும் கவனிக்க வேண்டும். சித்தா - ஆயுர்வேதப் படிப்பிற்கு பொதுப்பிரிவினர் இயற்பியல், வேதியியல், உயிரியல் அல்லது தாவரவியல் மற்றும் விலங்கியல் பாடத்தில் 50 சதவிகித மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். மற்ற பிரிவினர், மேற்கண்ட பாடங்களில் 40 சதவிகித மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும்.*

| | **4.10.1. எவ்வளவு இடங்கள் உள்ளன?** |
|---|---|
| 1 | அரசு சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை (BSMS) - 100 இடங்கள் |
| 2 | அரசு சித்த மருத்துவக் கல்லூரி, சென்னை (BSMS) - 60 இடங்கள் |
| 3 | அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி கோட்டாறு, நாகர்கோவில் (BAMS)- 60 இடங்கள் |
| 4 | அரசு யுனானி மருத்துவக் கல்லூரி சென்னை - BUMS - 60 இடங்கள் |
| 5 | அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி, திருமங்கலம், மதுரை - 50 இடங்கள் |
| 6 | ஐந்து கல்லூரிகளிலும் மொத்த இடங்கள் 330. இதில் 50 இடங்கள் அகில இந்திய ஒதுக்கீட்டுக்கான இடங்கள். தமிழ்நாட்டில் தனியார் சித்த மருத்துவக் கல்லூரிகள் 25 உள்ளன. |

IWCM

**வேலை வாய்ப்பு:** அரசு மருத்துவமனையிலேயே சித்தா பிரிவும் தொடங்கியுள்ளனர். இதனால், சித்த மருத்துவம் படித்து அரசு மருத்துவமனையில் குறிப்பிட்ட காலம் பயிற்சி பெற்றால், அரசு மருத்துவர்களாக நியமிக்கப்படுவார்கள். தனியார் மருத்துவமனைகளிலும் வேலை வாய்ப்புப் பெறலாம். தனியாகவும் மருத்துவமனை துவங்கலாம்.

### 4.10.2. சித்தா - ஆயுர்வேத படிப்புக்கான கட்டணங்கள்

- அரசுக் கல்லூரியில் கட்டணம் ரூ. 5000
- அரசு ஒதுக்கீட்டில் சுயநிதிக் கல்லூரியில் சேர்பவர்களுக்குக் கட்டணம் ரூ. 10,000
- சுயநிதிக் கல்லூரியில் அரசு நிர்ணயித்துள்ள கல்விக் கட்டணம் ரூ. 1,25,000

# 4.11 துணை மருத்துவப் படிப்புகள்

- மருத்துவத் துறையில் ஏராளமான துணை மருத்துவப் படிப்புகள் உள்ளன. மருத்துவமனைகளில் மருத்துவ பணியாளர்கள் இல்லாமல், மருத்துவர்களால் உரிய சிகிச்சை அளிக்க முடியாது. அந்தளவுக்கு மருத்துவப் பணியாளர்களின் தேவை உள்ளது. மருத்துவப் பணியாளர்களாக ஆவதற்குத் துணை மருத்துவப் படிப்புகள் உதவும்.
- துணை மருத்துப் படிப்புகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். முதலில் பட்டப் படிப்புகள், இரண்டாவது டிப்ளமோ படிப்பு, மூன்றாவது சான்றிதழ் படிப்புகள்.
- துணை மருத்துவப் படிப்புகளுக்கான கலந்தாய்வு, மருத்துவப் படிப்புக்கான கலந்தாய்வு முடிந்தவுடன் நடத்தப்படுகிறது. ஆகையால், மாணவர்கள் தொடர்ந்து நாளிதழை அல்லது தமிழ்நாடு மருத்துவக் கல்வி இயக்ககத்தின் இணைய தளத்தைப் பார்த்து விண்ணப்பிக்க வேண்டும்.
- துணை மருத்துவப் படிப்புகளில் பிபார்ம், பிஎஸ்சி நர்சிங், பிசியோதெரப்பி படிப்புகள் தொழில்சார் படிப்புகளாகக் கருதப்படுகின்றன. இந்தப் படிப்புகளுக்கான காலம் - நான்கு ஆண்டுகள். இதை முடித்தவுடன் ஓராண்டு பயிற்சியில் கலந்து கொள்ள வேண்டும். அரசு மருத்துவக் கல்லூரியில் இதற்கான கல்விக்கட்டணம் ரூ. 3000 மட்டுமே.

| 4.11.1 துணை மருத்துவப் படிப்புகளில் தொழில்சார் படிப்புகள் | |
|---|---|
| 1. | BSc Nursing |
| 2. | Bachelor of Physiotherapy |
| 3. | BPharm (Bachelor of Pharmacy) |
| 4. | BOT - Bachelor of Occupational Therapy |
| 5. | BMRSc - Bachelor of Medical Record Science, Bachelor of Allied Healh Science |



பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

| 4.11.2. இதர துணை மருத்துவப் படிப்புகள் | |
|---|---|
| 1. | BSc – Accident & Emergency Care Technology |
| 2. | BSc – Audiology & Speech Language Pathology |
| 3. | BSc – Cardiac Technology |
| 4. | BSc – Cardio Pulmonary Perfusion Care Technology |
| 5. | BSc – Critical Care Technology |
| 6. | BSc – Dialysis Technology |
| 7. | BSc – Electro Neurophysiology |
| 8. | BSc – Medical Lab Technology |
| 9. | BSc – Medical Sociology |
| 10. | BSc – Nuclear Medicine Technology |
| 11. | BSc – Operation Theatre & Anaesthesia Technology |
| 12. | BSc – Optometry Technology |
| 13. | BSc – Physician Assistant |
| 14. | BSc – Prosthetics & Orthotics |
| 15. | BSc – Radiology Imaging Technology |
| 16. | BSc – Radiotherapy Technology |
| 17. | BSc – Anesthesia Technology |
| 18. | BSc – Cardiac Perfusion Technology (CPI) |
| 19. | BSc – Cardio Vascular Technology (CVT) |
| 20. | BSc – Diabetes Science |
| 21. | BSc – Echocardio graphy Technology. |

IWCM

மருத்துவத் துறையில் துணை மருத்துவப் படிப்புகளில் தொழில்நுட்பம் படிப்பவர்களுக்கு பல்நோக்கு மருத்துவமனைகளில் (multi speciality Hospital) வாய்ப்புகள் குவிந்துகிடக்கின்றன. தகுந்த ஆட்கள் இல்லாததால் பல மருத்துவமனைகளே பயிற்சிக் கல்வி நிறுவனங்களை நடத்தி வருவதையும் கவனிக்க வேண்டும். பல்நோக்கு லேப் டெக்னீஷியன்களுக்கு ரூ. 20,000 முதல் ஒரு லட்ச ரூபாய் வரை சம்பளம் வழங்குகிறார்கள். ஆகையால், காலத்தை வீண் செய்யாமல் மருத்துவம் சார்ந்த தொழில்நுட்ப படிப்பில் சேர்ந்து உடனடியாக வேலை வாய்ப்பைப் பெறலாம்.

பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

| 4.11.3. DIPLOMA IN ALLIED HEALTH SCIENCES (for 12th Standard) (2 years) | |
|---|---|
| 1. | Accident & Emergency Care Technology |
| 2. | Critical Care Technology |
| 3. | Nursing Aided |
| 4. | Operation Theatre & Anesthesia Technology |
| 5. | Ophthalmic Nursing Assistant |
| 6. | Paediatric Technician |
| 7. | Scope Support Technology |
| 8. | Medical Record Science |
| 9. | Optometry Technology |
| 10. | Radiology & Imaging Technology |
| 11. | Medical Lab Technology |
| 12. | Cardiac Non Invasive Technology |
| 13. | Dialysis Technology |

IWCM

| 4.11.4. CERTIFICATE COURSE (1 year) | |
|---|---|
| 1. | Cardiac Sonography Technician |
| 2. | ECG/Treadmill Technician |
| 3. | Pump Technician |
| 4. | Cardiac Catherization Lab Technician |
| 5. | Emergency Care Technician |
| 6. | Respiratory Technician |
| 7. | Dialysis Technician |
| 8. | Anesthecia Technician |
| 9. | Theatre Technician |
| 10. | Orthopedic Technician |

“

கண் பரிசோதகருக்கான துணை மருத்துவப் படிப்பு (பி.எஸ்சி., ஆப்டோமெட்ரி) சென்னை எழும்பூர் அரசு கண் மருத்துவ நிறுவனத்தில் உள்ளது. இந்தப் படிப்பு டெல்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனைக்கு அடுத்து தமிழ்நாட்டில் மட்டுமே உள்ளது சிறப்பு. கண் பரிசோதகருக்கான இரண்டு ஆண்டுக்கால பட்டயப் படிப்பு (DIPLOMA IN OPTOMETRY) பல அரசு மருத்துவக் கல்லூரியில் உள்ளன. இந்தப் படிப்பை முடிப்பவர்கள் Optician ஆகலாம்.

பல் மருத்துவத் துறையில் தொழில்நுட்ப உதவியாளராவதற்கான டென்டல் மெக்கானிக், டென்டல் ஆபரேடிங் ரூம் அசிஸ்டன்ட் உள்ளிட்ட சில டிப்ளமோ படிப்புகளும் உள்ளன. 12 ஆம் வகுப்பிற்குப் பிறகு இந்த டிப்ளமோ படிப்புகளைப் படித்தால் பல் மருத்துவரிடம் உதவியாளர் வேலை வாய்ப்பு பெறலாம்.

”



பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

| | |
|---|---|
| **4.11.5. BSc [RADIOGRAPHY AND IMAGING TECHNOLOGY] படிப்பு உள்ள கல்லூரிகள்:** | |
| 1 | Madras Medical College, Chennai |
| 2 | Stanley Medical College, Chennai |
| 3 | Chengalpattu Medical College, Chengalpattu |
| BSc [RADIOTHERAPY] **படிப்பு உள்ள கல்லூரிகள்:** | |
| 1 | Madras Medical College, Chennai |
| 2 | Govt. Kilpauk Medical College, Chennai |
| BSc [CARDIO PULMONARY PERFUSION TECHNOLOGY] **படிப்புகள்:** | |
| 1 | Madras Medical College, Chennai |
| 2 | Govt. Tirunelveli Medical College, Tirunelveli |
| B OPTOM **படிப்பு:** | |
| 1 | Madras Medical College, Chennai |
| 2 | Govt. K. A. P. V. Medical College, Trichy |
| 3 | Govt. Villupuram Medical College, Villupuram |
| BSc CARDIAC TECHNOLOGY **படிப்பு** | |
| 1 | Govt. Tirunelveli Medical College, Tirunelveli |
| 2 | Govt. K. A. P. V. Medical College, Trichy |
| 3 | Govt. Villupuram Medical College, Villupuram |
| 4 | Govt. Mohan Kumaramangalam Medical College, Salem |
| BOT, **படிப்பு** | |
| | Govt. Kilpauk Medical College, Kilpauk |

IWCM

பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

# 4.12 மருத்துவப் படிப்புகளுக்கான கலந்தாய்வு - மாணவர்கள் கவனிக்க வேண்டிய விஷயங்கள்



- *மருத்துவக் கலந்தாய்வை, ஓமந்தூரார் பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் நடத்தி வருகிறது தமிழ்நாடு மருத்துவக் கவுன்சில். மாணவர்கள் எந்த நேரத்தில் கலந்தாய்வில் கலந்துகொள்வது என்ற விவரத்தை தமிழ்நாடு மருத்துவக் கல்வி இயக்ககம் வெளியிடும்.*
- *மருத்துவப் படிப்புக்கான கலந்தாய்வு கால அட்டவணையை www.tnhealth.org / https://tnmedicalselection.net/ பார்த்து தெரிந்துகொள்ள வேண்டும்.*

## 4.12.1. கலந்தாய்வில் கலந்து கொள்ளும்போது கொண்டு வர வேண்டிய சான்றிதழ்கள்

- நீட் தேர்வுக்கான ஹால் டிக்கெட்
- நீட் மதிப்பெண் சான்றிதழ்
- பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்
- மாற்றுச்சான்றிதழ்

- தமிழ்நாட்டில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை படித்ததற்கான அரசுப் பள்ளி மற்றும் அரசு உதவிப் பெறும் பள்ளியின் அத்தாட்சிக் கடிதம்
- ஏற்கெனவே கல்லூரியில் சேர்ந்திருந்தால் அதற்கான Bonafide certificate சான்றிதழ் கடிதம்
- ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை வெளி மாநிலத்தில் படித்திருந்தால், அதற்கான இருப்பிடச் சான்றிதழ்
- ஆதார் கார்டு
- சாதிச் சான்றிதழ்
- முதல் தலைமுறை பட்டதாரியாக இருந்தால் அதற்கான சான்றிதழ்
- ரேஷன் கார்டு

## பெற்றோர்கள் கொண்டு வர வேண்டிய சான்றிதழ்கள்

- பிறப்புச் சான்றிதழ்
- பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு மற்றும் இதர படிப்புக்கான சான்றிதழ்கள்
- இருப்பிடச் சான்றிதழ்
- சாதிச் சான்றிதழ்
- ஆதார் கார்டு
- வருமானச் சான்றிதழ்

IWCM



பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

**மருத்துவம், துணை மருத்துவப் படிப்புகளில் சேர விரும்பும் மாணவர்கள், கலந்தாய்வு எப்போது நடக்கிறது என்பது குறித்த விவரங்களை www.tnhealth.org / www.tnmedicalselection.org இணைய தளங்களில் பார்த்துத் தெரிந்து கொள்வது அவசியம்.**

*அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கு 25,000-க்கும் மேற்பட்டவர்கள் விண்ணப்பிக்கிறார்கள். ஏற்கெனவே, அகில இந்திய ஒதுக்கீட்டில் இடம் கிடைத்து மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தவர்கள், இந்தக் கலந்தாய்வில் கலந்துகொண்டு இடம்பெற முடியாது. பொறியியல் படிப்பு அல்லது இதர படிப்பில் சேர்ந்த மாணவர்கள், தாங்கள் சேர்ந்துள்ள கல்லூரியில் Bonafide certificate -ஐ வாங்கி வர வேண்டும்.*

*முதல் கட்ட கலந்தாய்வுக்குப் பின்பு மருத்துவச் சேர்க்கைக்கான இடங்கள் காலியாக இருந்தாலும், முதல் கட்ட கலந்தாய்வில் கலந்துகொள்ளவில்லை என்றால் அதன்பின்பு சேர்க்கையில் இடம் இருந்தாலும், இரண்டாம் கட்ட கலந்தாய்வில் கலந்துகொள்ள முடியாது. கலந்தாய்வில் கலந்துகொள்ள 500 ரூபாய்க்கு வரைவோலையும், மருத்துவக் கல்லூரி இடத்தைத் தேர்ந்தெடுத்த பின்புக் கல்வி கட்டணத்துக்கான வரைவோலையும் வழங்க வேண்டும்.*

*சுயநிதிக் கல்லூரி இடங்களை, அரசு ஒதுக்கீட்டுக்கான இடங்களைத் தேர்தெடுப்பவர்கள் கல்விக் கட்டணத்துக்கான வரைவோலையைச் சமர்ப்பித்த பின்பு மீண்டும் திரும்பப் பெற முடியாது. முதல் கட்ட கலந்தாய்வில் விரும்பிய கல்லூரியில் இடம் கிடைக்கப் பெறாமல் ஏதேனும் ஒரு கல்லூரியில் இடம் கிடைத்து சேர்ந்தவர்களுக்கு, இரண்டாம் கட்ட கலந்தாய்வில் விரும்பிய கல்லூரியில் இடம் இருக்கும்போது மாறிக்கொள்ள வாய்ப்பு வழங்கப்படும். ஆனால், மாற்றுத்திறனாளிகள், முன்னாள் ராணுவத்தினரின் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள், விளையாட்டுப் பிரிவைச் சார்ந்த மாணவர்களுக்கு இடம் மாறிக்கொள்ள வாய்ப்பு வழங்கப்பட மாட்டாது.*

*ஒவ்வொரு நாளும் பொது மருத்துவத்திலும், பல் மருத்துவத்திலும் அரசு ஒதுக்கீட்டிலும், சுயநிதி மேனேஜ்மென்ட் ஒதுக்கீட்டிலும் எவ்வளவு இடங்கள் காலியாக இருக்கின்றன என்ற விவரங்களை*

**www.tnhealth.org / www.tnmedicalselection.org**
**இந்த இணையத்தளங்களில் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.**

# 5. கால்நடை துறையிலும் சாதிக்கலாம்!




பத்து, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு வரை கால்நடை மருத்துவப் படிப்புகள் அதிக அளவில் ஈர்ப்பில்லாமல் இருந்தன. ஆனால் தற்போது, கால்நடை மருத்துவர்களின் தேவை அதிகரிப்பு, நல்ல ஊதியம் போன்ற காரணங்களால் கால்நடை மருத்துவப் படிப்புக்கு விண்ணப்பிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது.

### 5.1. கால்நடை படிப்பானது ஐந்தரை ஆண்டுக் காலம் கொண்டது.

**கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் கல்லூரிகள்**

| | |
|---|---|
| 1. | கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக வளாகம், சென்னை. (120 இடங்கள்) |
| 2 | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல். (80 இடங்கள்) |
| 3 | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி. (80 இடங்கள்) |

பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

| | |
|---|---|
| 4 | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஒரத்தநாடு, தஞ்சாவூர். (80 இடங்கள்) |
| 5 | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தலைவாசல், சேலம். (40 இடங்கள்) |
| 6 | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், வீரபாண்டி, தேனி. (40 இடங்கள்) |
| 7 | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், உடுமலைப்பேட்டை, திருப்பூர். (40 இடங்கள்) |
| 8 | திருவள்ளூர் மாவட்டம் கொடுவள்ளியில் நான்கரை ஆண்டு பிடெக் (எஃப். டி.- உணவுத் தொழில்நுட்பம்) படிப்பு - (40 இடங்கள்) |
| 9 | ஒசூரில் உள்ள கல்லூரியில் பி.டெக்.- பி.பி.டி., - கோழியின உற்பத்தி தொழில்நுட்பப் படிப்பு - (40 இடங்கள்) |
| 10 | சென்னை மாதவரத்தில் பி.டெக் பால் பொருள்கள் தொழில்நுட்பப் படிப்பு - (40 இடங்கள்) |

IWCM

மேலும் விவரங்களுக்கு www.tanuvas.ac.in

**வேலை வாய்ப்புகள்:** பிவிஎஸ்சி முடித்த பல மாணவர்கள் மத்திய அரசு தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குரூப் 1 தேர்வுகளை முடித்து உயர்பதவிகளுக்குச் செல்லலாம். தமிழக அரசு, ஒவ்வோர் ஆண்டும் 500 முதல் 1000 கால்நடை மருத்துவர்களைத் தேர்வுசெய்து வருகிறது. தமிழ்நாட்டில் பெருகிவரும் கால்நடைப் பண்ணைகள், கோழி பண்ணைகள், பால் பண்ணைகள் போன்றவற்றிலும் கால்நடை மருத்துவர்களுக்கான தேவை உள்ளது. கால்நடைத் தீவனங்கள் தயாரிப்பு, பால் உற்பத்தி நிலையங்கள் போன்றவற்றிலும் கால்நடை மருத்துவர்களைப் பணியில் நியமிக்கிறார்கள். முதுநிலைப் படிப்பு முடித்து ஆசிரியர் பணிக்குச் செல்லலாம். ஆராய்ச்சிகளை மேற்கொள்ளலாம். வெளிநாடுகளிலும் வேலை வாய்ப்புகள் குவிந்து கிடக்கின்றன.

*தற்போது தமிழக அரசின் சுகாதாரத் துறை செயலாளராக உள்ள ஜெ.இராதாகிருஷ்ணன் ஐஏஎஸ் அவர்கள், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியில் படித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.* ●

# 6.வேலை வாய்ப்பு நிறைந்த வேளாண்மை படிப்பு




IWCM

**பொ**றியியல் படிப்புகள் தனது கவர்ச்சியை இழக்க, கடந்த ஐந்து ஆண்டுகளாக அதிகளவில் விரும்பப்படும் படிப்புகளில் ஒன்றாக மாறி இருக்கிறது, வேளாண் படிப்புகள். கொரோனா பிரச்னைக்கு ப்பின் வேளாண்மைக்கான மவுசு கூடி இருக்கிறது.

அக்ரி படிப்பில் சேர பன்னிரண்டாம் வகுப்பில் உயிரியல் அல்லது தாவரவியல், விலங்கியல் பாடங்களை முதன்மையாகப் படித்தவர்கள் மட்டுமே சேரலாம் என்று இருக்கிறது. ஆனால், அக்ரிகல்ச்சர் டெக்னாலஜி, ஃபுட் டெக்னாலஜி போன்ற பாடங்களில் சேர கணிதம், கம்ப்யூட்டர் சயின்ஸ் பாடங்களைப் படித்தவர்களும் சேரலாம் என்பதையும் கவனிக்க வேண்டும்.

### 6.1. யார் விண்ணப்பிக்கலாம்?

பொதுப் பிரிவினர் கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல் அல்லது தாவரவியல் மற்றும் விலங்கியல் பாடங்களில் 55 சதவிகித மதிப்பெண்ணையும், பிற்படுத்தப்பட்டோர் பிரிவினர் 50 சதவிகித மதிப்பெண்ணையும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 45 சதவிகித மதிப்பெண்ணையும் பெற்றிருக்க வேண்டும். தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடி பிரிவைச் சேர்ந்தவர்கள், தேர்ச்சி பெற்றிருந்தாலேயே விண்ணப்பிக்கலாம்.


### 6.2. அக்ரி படிப்பில் சேர எளிய வழிகள்...

டெல்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் நடத்தும் நுழைவுத்தேர்வை எழுதுவது. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் நடத்தும் கவுன்சலிங்கில் கலந்துகொண்டு வாய்ப்பைப் பெறுவது.

இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் நடத்தும் நுழைவுத் தேர்வு எழுத, பன்னிரண்டாம் வகுப்பில் எவ்வளவு மதிப்பெண் என்பதைக் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. ஆனால், நுழைவுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று, இந்தியாவில் உள்ள சிறந்த வேளாண் கல்லூரிகளில் சேரலாம். இந்த நுழைவுத்தேர்வு குறித்து விவரங்கள் பெற https://icar.nta.nic.in/WebInfo/Public/Home.aspx என்ற இணையதளத்தில் தெரிந்துகொள்ளலாம்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் நடத்தும் கவுன்சலிங் தவிர, சிதம்பரத்தில் உள்ள அண்ணாமலை பல்கலைக்கழகத்திலும், திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள காந்தி கிராம நிகர்நிலை பல்கலைக்கழகத்திலும் தனியே விண்ணப்பித்து, வேளாண்மைப் படிப்பில் சேரலாம்.

IWCM



“அரசுக் கல்லூரியில் வேளாண் அறிவியல் பாடப்பிரிவைத் தேர்ந்தெடுத்தால் ஆண்டுக் கட்டணம் ரூ. 30,000 – க்கு குறைவாகவும், தொழில்நுட்ப பாடப்பிரிவைத் தேர்ந்தெடுத்தால் ஆண்டுக் கட்டணம் ரூ. 70,000 – க்கும் குறைவாகவும் பெறப்படுகிறது. ‘முதல் தலைமுறைப் பட்டதாரி’ என்றால் கல்வி கட்டணம் செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.”

| 6.3. வேளாண் பல்கலைக்கழகத்தில் வழங்கப்படும் படிப்புகள்: |
|---|
| பி.எஸ்சி. (ஹானர்ஸ்) வேளாண்மை |
| பிஎஸ்.சி. (ஹானர்ஸ்) தோட்டக்கலை |
| பி.எஸ்சி. (ஹானர்ஸ்) வனவியல் |
| பி.எஸ்சி. (ஹானர்ஸ்) உணவு, ஊட்டச்சத்து மற்றும் உணவு முறையியல் (ஃபுட் நியூட்ரிஷன் அண்டு டயட்டிக்ஸ்) |
| பி.டெக். – வேளாண் பொறியியல் |
| பி.எஸ்சி. (ஹானர்ஸ்) பட்டு வளர்ப்பு |
| பி.டெக். – உணவுத் தொழில்நுட்பம் (ஃபுட் டெக்னாலஜி) |
| பி.டெக். – உயிரித் தொழில்நுட்பம் (பயோடெக்னாலஜி) |
| பி.டெக். – ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் |
| பி.எஸ்சி. – வேளாண் வணிக மேலாண்மை |

*கோவை வேளாண் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளாக 14 கல்லூரிகள் உள்ளன. இக்கல்லூரிகள் அனைத்தும் அரசுக் கல்லூரிகளே. இதைத்தவிர, 29 சுயநிதிக்கல்லூரிகள் உள்ளன. இக்கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டின் கீழ் சேரலாம்.*

IWCM

| 6.4. வேளாண் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகள்: | |
|---|---|
| 1 | வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர் – 641 003 |
| 2 | வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை – 625 104 |
| 3 | வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிள்ளிகுளம், தூத்துக்குடி – 628 252 |
| 4 | அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாவலூர் குட்டப்பட்டு, திருச்சிராப்பள்ளி – 620 027 |
| 5 | வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், வாழவச்சனூர், திருவண்ணாமலை – 606 753 |

பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

| | |
|---|---|
| 6 | வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், குடுமியான்மலை, புதுக்கோட்டை - 622 104 |
| 7 | வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஈச்சங்கோட்டை, ஒரத்தநாடு, தஞ்சாவூர் - 614 902 |
| 8 | தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர் - 641 003 |
| 9 | தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பெரியகுளம், தேனி - 625 604 |
| 10 | தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், (பெண்கள்), நாவலூர் குட்டப்பட்டு, திருச்சிராப்பள்ளி - 620 027 |
| 11 | வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர் - 641 003 |
| 12 | வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், குமுளூர், பல்லபுரம், திருச்சிராப்பள்ளி - 621 712 |
| 13 | வனவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மேட்டுப்பாளையம் - 641 301 |
| 14 | சமுதாய அறிவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை - 625 104 |

IWCM

“ நீட் தேர்வு அடிப்படையில் வேளாண் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் சேர்க்கை நடத்தப்பட வேண்டும் என்று மத்திய அரசு வலியுறுத்தி வரும் நிலையில், இன்னும் நடைமுறைக்கு வராதது மாணவர்களுக்கு சாதகமான விஷயம். ”

*வேளாண் பல்கலைக்கழக கலந்தாய்வில் கலந்துகொள்ள விண்ணப்பித்து, அரசு ஒதுக்கீட்டில் இட வாய்ப்பு பெறுகிறவர்களுக்குக் கட்டணம் மிகவும் குறைவு. அரசு உறுப்புக் கல்லூரிகளில் 1600 இடங்களும், இணைப்புக் கல்லூரிகளான சுயநிதிக் கல்லூரிகளில் 3100 இடங்களும் உள்ளன.*

*வேளாண் படிப்பைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர்கள், இரண்டு ஆண்டுகள் டிப்ளமோ படிப்பில் சேர விண்ணப்பிக்கலாம். மூன்று அரசுக் கல்லூரிகளிலும், எட்டு சுயநிதிக் கல்லூரிகளில் டிப்ளமோ படிப்பு உள்ளது. இதையும் மாணவர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்.*



பொருளடக்க பக்கத்துக்கு செல்ல



| |
|---|
| தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் நடத்தும் கலந்தாய்வு குறித்த மேலும் விவரங்களுக்கு https://tnauonline.in/ |
| அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பட்டப்படிப்பும், பட்டயப் படிப்பும் உள்ளன. ஆன்லைன் வழியே விண்ணப்பிக்க https://annamalaiuniversity.ac.in/adm/index.php |

*அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் சேர விரும்பும்போது, அரசு ஒதுக்கீட்டு இடங்கள், சுயநிதி ஒதுக்கீட்டு இடங்கள் என இரண்டு பிரிவுகள் உள்ளன. அரசு ஒதுக்கீட்டில் இடம்பெறும்போது, கட்டணம் 40,000 ரூபாய்க்குக் குறைவு. சுயநிதி ஒதுக்கீட்டில் சேரும்போது, கூடுதலாக ஒரு லட்ச ரூபாய் செலுத்த வேண்டி இருக்கும் என்பதையும் தெரிந்துகொள்ளவும்.*

**வேலை வாய்ப்பு:** வேளாண் ஆராய்ச்சியாளர், வேளாண் தொழில்நுட்பாளர், கள ஆய்வாளர், பண்ணை மேலாளர், வேளாண் விற்பனைப் பிரதிநிதி, வேளாண் உணவுப்பொருள் நுகர்பொருள் கிடங்கு அதிகாரி, வேளாண் கல்வியாளர், திட்ட வரைவாளர், மண்வள ஆய்வாளர், வேளாண் தொழில் வல்லுநர், வேளாண் நிர்வாக அதிகாரி எனப் பலவிதமான பொறுப்புகளுக்குச் செல்ல முடியும். அரசு மற்றும் தனியார் வேளாண் நிறுவனங்கள், வேளாண் கருவி தயாரிப்பு நிறுவனங்கள், உர நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் போன்றவற்றிலும் வேலைவாய்ப்புகள் கிடைக்கும். விருப்பம் உள்ளவர்கள் வேளாண் படிப்பைத் தேர்வு செய்து, பிரகாசமான எதிர்காலத்தைப் பெறலாம்.

# 7.மீன்வளப் படிப்புகள்!




*மீன்வளத் துறையில் ஆர்வமுள்ளவர்கள், நாகப்பட்டினம் மீன்வளப் பல்கலைக்கழகம் நடத்தும் கலந்தாய்வில் கலந்துகொண்டு மீன்வள அறிவியல் அல்லது மீன்வள பொறியியல் படிப்பில் சேரலாம். மீன்வளப் பல்கலைக்கழகத்தில்,*

| |
|---|
| Bachelor of Fisheries Science (BFSc) - 4 years |
| BSc Aqua Culture (Fishery Microbiology) - 3 years |
| BE Fisheries Engineering - 4 Years |
| BFSc (Nautical Science) என்று நான்கு படிப்புகள் உள்ளன. |

*12ஆம் வகுப்பு கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல் அல்லது தாவரவியல், விலங்கியல் பாடங்களைப் படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.*

| |
|---|
| மேலும் விவரங்களுக்கு |
| https://cifnet.gov.in/ என்ற இணையத்தளத்தை பார்வையிடலாம். |

| | 7.1. மீன்வளப் படிப்புகளை வழங்கும் கல்லூரிகள் |
|---|---|
| 1. | பொன்னேரி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம் |
| 2. | நாகப்பட்டினம் மீன்வளப் பொறியியல் கல்லூரி |
| 3. | தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம் |
| 4. | மீன்வள ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையம், மாதவரம், சென்னை |
| 5. | மீன்வள பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், (தஞ்சாவூர் & கன்னியாகுமரி) |












பொருளடக்க பக்கத்துக்கு செல்ல




கேரளாவில் கொச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் *Central Institute of Fisheries Nautical and Engineering Training (CIFNET)* கல்வி நிறுவனம், சென்னை இராயபுரத்திலும் அமைந்துள்ளது. இங்கு, நாட்டிக்கல் சயின்ஸ் மற்றும் நாட்டிக்கல் இன்ஜினீயரிங் படிப்புகள் உள்ளன. மிகக் குறைந்த கட்டணத்தில் படிக்கலாம். மேலும் விவரங்களுக்கு *https://cifnet.gov.in/*

மத்திய கடல்சார் பல்கலைக்கழகம் *(Indian Maritime University)* சென்னை - பாண்டிச்சேரி கிழக்குக் கடற்கரைச் சாலையில், உத்தண்டியில் உள்ளது. இங்கும், நாட்டிக்கல் சயின்ஸ் மற்றும் நாட்டிக்கல் இன்ஜினீயரிங் படிப்புகள் *(B.S. Nautical Technology,*

*BTech, Marine Engineering, BTech, Naval Architecture and Ocean Engineering, BSc Nautical Science, BSc Applied Nautical Science, BSc Maritime Science, BSc Ship building and Repair)* உள்ளன.


மீனவ குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு மத்திய கடல்சார் பல்கலைக்கழகத்தில் சேரும்போது, 50% கல்விக் கட்டணச் சலுகை உண்டு. இந்த கல்வி நிறுவனத்தில் சேர தனியே நுழைவுத்தேர்வு எழுத வேண்டும். மேலும் விவரங்களுக்கு *https://www.imu.edu.in/*

**வேலை வாய்ப்புகள்:** தமிழக அரசின் மீன்வளத் துறையில் வேலை வாய்ப்பைப் பெறலாம். கடல்சார் உயிரின உணவுப் பொருள்களின் வணிகம் மேம்பட்டுவருகிறது. இதனால் மீன் ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களிலும், மீன் பதனிடும் நிறுவனங்களிலும் வேலை வாய்ப்புகள் உள்ளன. மீன் மற்றும் இறால் பண்ணைகளிலும், மீன் உணவுப்பொருள் தயாரிப்பு நிறுவனங்களிலும் வேலைகள் உண்டு. கப்பல்களிலும் துறைமுகங்களிலும்கூட வாய்ப்புகள் உள்ளன.



பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

# 8. பொறியியல் படிப்புகள்




IWCM

*கடந்த 20 ஆண்டுகளில் பொறியியல் படிப்புகளுக்கான கட்டமைப்பு தமிழகத்தில் அபரிமிதமாக வளர்ச்சியடைந்துள்ளது. 500-க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள் உள்ளன. ஆனால், வேலை வாய்ப்பு சந்தை தேக்கமடைந்ததால் கடந்த ஐந்து ஆண்டுகளாக பொறியியல் படிப்புகளுக்கான மோகம் குறைந்திருக்கிறது. அரசு ஒதுக்கீட்டின் மூலம் ஒரு லட்சத்துக்கும் கூடுதலாக இடங்கள் உள்ளன. கடந்த சில ஆண்டுகளாக பொறியியல் கலந்தாய்வின் மூலம் முழுமையாக மாணவர்கள் நிரம்பும் கல்லூரிகள் ஒற்றை இலக்கத்திலேயே உள்ளன.*

*தமிழ்நாட்டில் இருபதுக்கும் மேற்பட்ட அரசு பொறியியல் கல்லூரிகள் உள்ளன. பொறியியல் படிப்பில் எங்கு சேரலாம், என்னென்ன படிப்புகள் உள்ளன என்பதைப் பார்ப்போம்.*

### 8.1 பொறியியல் படிப்பில் அசத்தும் அண்ணா பல்கலைக்கழகம்

*பொறியியல் படிப்பில் ஐஐடிகள், தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களுக்கு அடுத்த இடத்தில் உள்ளது அண்ணா பல்கலைக்கழகம். தமிழ்நாட்டில் பிளஸ் டூ முடித்தவுடன் பொறியியல் படிப்பில் சேர ஆர்வம் உள்ள மாணவர்களின் முதல் சாய்ஸ் அண்ணா பல்கலைக்கழகம் தான்.*

அண்ணா பல்கலைக்கழகத்தின் முதன்மை அங்கமாக உள்ள கிண்டி பொறியியல் கல்லூரி, குரோம்பேட்டையில் உள்ள எம்.ஐ.டி, அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி, ஸ்கூல் ஆஃப் ஆர்க்கிடெக்சர் அண்ட் பிளானிங் என நான்கு கல்லூரிகள் உள்ளன.

**அண்ணா பல்கலைக்கழகம் ஏராளமான தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளன. ஒவ்வோர் ஆண்டும் பல பன்னாட்டு நிறுவனங்கள் அண்ணா பல்கலைக்கழகத்தில் கேம்பஸ் இன்டர்வியூ மூலம் மாணவர்களைத் தேர்வு செய்துவருகின்றன.**

இதில் கிண்டி பொறியியல் கல்லூரி, குரோம்பேட்டையில் உள்ள எம்.ஐ.டி, அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரியில் ஏரோநாட்டிக்கல், ஆட்டோமொபைல், கம்ப்யூட்டர் சயின்ஸ், சிவில், எலெக்ட்ரிக்கல் அண்ட் எலெக்ட்ரானிக்ஸ், எலெட்ரானிக்ஸ் அண்ட் கம்யூனிக்கேஷன், எலெக்ட்ரானிக்ஸ் இன்ஸ்ட்ரூமென்டேஷன், ஜியோ இன்ஃபர்மேட்டிக்ஸ், இன்ட்ஸ்ட்ரியல், மெக்கானிக்கல், மெட்டீரியல்ஸ் சயின்ஸ், மைனிங், மேன்யுஃபேக்சரிங், பிரின்டிங், புரொடக்‌ஷன், கெமிக்கல், செராமிக், ஃபுட் டெக்னாலஜி, இன்ஃபர்மேஷன் டெக்னாலஜி, இன்டஸ்ட்ரீஸ் பயோ டெக்னாலஜி, பெட்ரோ கெமிக்கல், பார்மாசூட்டிக்கல், ரப்பர் அண்ட் பிளாஸ்டிக், டெக்ஸ்டைல், மெக்காட்ரானிக்ஸ், பயோ மெடிக்கல், எலெக்ட்ரானிக் அண்ட் டெலிகம்யூனிகேஷன், இன்ட்ஸ்ரூமென்டேஷன், மரைன் இன்ஜினீயரிங், மெட்டர்லிஜிகல், பெட்ரோலியம், ரோபோட்டிக்ஸ் அண்ட் ஆட்டோமேஷன், டெக்ஸ்டைல் டெக்னாலஜி என ஏராளமான படிப்புகள் உள்ளன.

**அண்ணா பல்கலைக்கழகத்தில், உள்ள படிப்புகள் குறித்து மேலும் அறிய www.annauniv.edu என்ற இணையதளப் பக்கத்தைப் பார்வையிடவும்.**

### 8.1.1 அண்ணா பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகள்

காஞ்சிபுரம், விழுப்புரம், திண்டிவனம், பண்ருட்டி, ஆரணி, அரியலூர், புதுக்கோட்டை, திருக்குவளை, திண்டுக்கல், ராமநாதபுரம், நாகர்கோவில் பகுதியில் அமைந்துள்ளன.

### 8.1.2 மண்டல வளாகக் கல்லூரிகள்

அண்ணா பல்கலைக்கழகத்தின் மண்டல அலுவலகங்களாக கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் மதுரையிலும் செயல்பட்டுவருகிறது. மண்டல அலுவலகங்களில், மண்டல வளாகக் கல்லூரிகள் செயல்பட்டுவருகின்றன.

### 8.2 அரசு பொறியியல் கல்லூரிகள்:

| | |
|---|---|
| 1 | கோவை அரசு தொழில்நுட்பக் கல்லூரி |
| 2 | அழகப்பா செட்டியார் இன்ஜினீயரிங் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, காரைக்குடி |
| 3 | அரசு இன்ஜினீயரிங் கல்லூரி, பர்கூர், கிருஷ்ணகிரி |
| 4 | அரசு இன்ஜினீயரிங் கல்லூரி, கருப்பூர், சேலம் |
| 5 | அரசு இன்ஜினீயரிங் கல்லூரி, திருநெல்வேலி |
| 6 | தந்தை பெரியார் அரசு தொழில்நுட்பக் கல்லூரி, வேலூர் |
| 7 | அரசு இன்ஜினியரிங் கல்லூரி, தஞ்சாவூர் |
| 8 | அரசு இன்ஜினீயரிங் கல்லூரி, தருமபுரி |
| 9 | அரசு இன்ஜினீயரிங் கல்லூரி, போடிநாயக்கனூர், தேனி |
| 10 | அரசு இன்ஜினீயரிங் கல்லூரி,ஸ்ரீரங்கம், திருச்சி |
| 11 | இன்ஸ்டிட்யூட் ஆஃப் ரோடு அண்ட் டிரான்ஸ்போர்ட் டெக்னாலஜி, ஈரோடு |

### 8.2.1 அரசு உதவிப்பெறும் கல்லூரிகள்:

| | |
|---|---|
| 1 | பி.எஸ்.ஜி தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர் |
| 2 | கோயம்புத்தூர் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டெக்னாலஜி, கோயம்புத்தூர் |
| 3 | தியாகராஜர் இன்ஜினீயரிங் கல்லூரி, மதுரை |

அண்ணா பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள், அரசு பொறியியல் கல்லூரிகள், அரசு உதவிபெறும் கல்லூரிகளில் சேர, தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் நடத்தும் கலந்தாய்வில் கலந்துகொள்ள வேண்டும். தற்போது பொறியியல் படிப்புக்கான கலந்தாய்வு ஆன்லைன் மூலமாக நடத்தப்படுகிறது. ஆன்லைன் வழியாக விண்ணப்பித்து,

ஆன்லைனிலேயே தாங்கள் சேர விரும்பும் கல்லூரிகளையும் படிப்புகளையும் தேர்ந்தெடுக்க வேண்டும்.

## 8.3 பொறியியல் படிப்புகளைத் தேர்ந்தெடுக்கும் முன்பு கவனிக்க வேண்டிய விஷயங்கள்

- பொறியியல் படிப்பில் எது பெஸ்ட் என்று தேடுபவர்களுக்கு முதல் சாய்ஸ்... கம்ப்யூட்டர் சயின்ஸ் என்றால், அடுத்த தேர்வு எலெக்ட்ரானிக்ஸ் அண்ட் கம்யூனிகேஷன் பொறியியல் பிரிவாக உள்ளது. பொறியியல் பாடப்பிரிவுகளைத் தேர்ந்தெடுக்கும் முன்பு சில விஷயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.
- கடந்த ஆண்டு, பொறியியல் கல்லூரியில் எவ்வளவு மதிப்பெண் பெற்றிருந்தவர்களுக்கு குறிப்பிட்ட கல்லூரியில், குறிப்பிட்ட பாடப்பிரிவில் இடம் கிடைத்திருக்கிறது என்பதைத் தெரிந்துக்கொள்ள வேண்டும்.
- கடந்த காலங்களில் குறிப்பிட்ட கல்லூரியின் தேர்ச்சி விகிதம் எப்படி இருந்திருக்கிறது என்பதைக் கவனிக்க வேண்டும்.
- ஒவ்வோர் ஆண்டும் தேர்ச்சி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு முகாம் நடத்துகிறார்களா என்பதையெல்லாம் முன்கூட்டியே தெரிந்து கொள்ள வேண்டும்.
- கடந்த ஐந்து ஆண்டுகளில் தேர்ச்சி விகிதம் எப்படி உள்ளது என்பதை அண்ணா பல்கலைக்கழகம் தன் இணையதளத்தில் விவரங்களை வெளியிடும். அதைப் பார்த்து தெரிந்துகொள்ளலாம்.
- பொறியியல் கல்லூரியைத் தேர்வுசெய்யும்போது எவ்வளவு கட்டணம் என்பதையும், குறிப்பிட்ட பாடத்துக்கு அகில இந்திய பொறியியல் கல்வி நிறுவனத்தின் அனுமதியைப் பெற்றிருக்கிறதா என்பதையும் பார்க்க வேண்டும்.
- பொறியியல் படிப்புக்கு விண்ணப்பிக்கும்போது வழங்கப்படும் தகவல் கையேட்டில் அனைத்து விவரங்களும் உள்ளன.

**பொறியியல் படிப்பில் சேரவும், கலந்தாய்வில் கலந்துக்கொள்ளவும் விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள்**
**https://www.tneaonline.org/**
**என்ற இணையத்தளத்தை பார்வையிடவும்**



பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

**பொறியியல் பாடப்பிரிவுகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.**

1. முதன்மையான இன்ஜினீயரிங் பாடப்பிரிவுகள்
2. பயன்பாட்டு இன்ஜினீயரிங் பாடப்பிரிவுகள்

## 8.4 முதன்மையான இன்ஜினீயரிங் பாடப்பிரிவுகள்

- கம்ப்யூட்டர் சயின்ஸ் இன்ஜினீயரிங்
- எலெட்ரானிக்ஸ் கம்யூனிகேஷன் இன்ஜினீயரிங்
- எலெக்ட்ரிக்கல் & எலெக்ட்ரானிக்ஸ் இன்ஜினீயரிங்
- மெக்கானிக்கல் இன்ஜினீயரிங்
- சிவில் இன்ஜினீயரிங்


## 8.5 பயன்பாட்டு இன்ஜினீயரிங் பாடப்பிரிவுகள்

- பயோ மெடிக்கல்
- இன்டஸ்ட்ரியல் பயோடெக்னாலஜி
- ஃபுட் புராசஸிங்
- செராமிக் டெக்னாலஜி
- டெக்ஸ்டைல் டெக்னாலஜி
- லெதர் டெக்னாலஜி என ஏராளமான படிப்புகள் உள்ளன.

IWCM

வேலை வாய்ப்புகள்: GATE தேர்வு எழுதி, பொதுத்துறை நிறுவனங்களான பாரத் மிகு மின் நிறுவனம், பாரத் எலெட்ரானிக்ஸ் நிறுவனம், இந்திய விண்வெளி ஆய்வு மையம், இயற்கை எண்ணெய் மற்றும் வாயு நிறுவனம், நேஷனல் தெர்மல் பவர் கார்ப்பரேஷன், பவர் கிரிட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா, இந்திய தொலைத்தொடர்பு நிறுவனம், இந்திய பாதுகாப்புத் துறை ஆராய்ச்சி அமைப்பு, விமானப் பிரிவு, கடற்பிரிவு மற்றும் பாதுகாப்புத் துறையின் இதர பிரிவுகளிலும் வேலை வாய்ப்பில் சேரலாம். இதைப் போலவே தனியார் நிறுவனங்களிலும் வேலை வாய்ப்பைப் பெறலாம். சென்ட்ரல் எலெட்ரானிக்ஸ் நிறுவனம், இந்தியன் ரயில்வே, அணுமின் நிறுவனம், ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்கல் லிமிடட், உள்நாட்டு விமான நிறுவனம் போன்றவற்றில் வேலை வாய்ப்பைப் பெறலாம்.

பொருளடக்க பக்கத்துக்கு செல்ல



## 8.6 பொறியியல் படிப்புடன் வேலை வாய்ப்பை அள்ளித்தரும் தகவல் தொழில்நுட்பம் (IT)

IWCM

**பை**யனோ, பெண்ணோ இன்ஜினீயரிங் படித்துவிட்டு வேலை கிடைக்கவில்லையே என்று ஆதங்கப்படுபவர்கள் நிறைய பேர். தொழில் நிறுவனங்களின் மனிதவள மேலாளர்கள், ‘எங்களுடைய எதிர்பார்ப்பைப் பூர்த்திசெய்யும் அளவுக்கு திறன்கொண்டவர் களைத்தான் நாங்கள் வலை வீசித் தேடிவருகிறோம்’ என்கிறார்கள்.

மாணவர்களின் திறனுக்கும், தொழில்நிறுவனம் எதிர்பார்க்கும் திறனுக்குமான இடைவெளியைக் குறைத்தால் மட்டுமே வேலை வாய்ப்பு நிச்சயம் என்ற நிலைக்கு வந்திருக்கிறோம். பொறியியல் படிப்பை முடித்தவுடன் வேலை கிடைக்க என்ன செய்யலாம்?

நீங்கள் எந்த பொறியியல் பாடப் பிரிவைத் தேர்ந்தெடுத்துப் படித்தாலும், அந்தத் துறையில் தகவல் தொழில்நுட்பத்தைப் (IT) பயன்படுத்தத் தெரிந்துகொள்ள வேண்டும்.

தற்போது, 32 சதவிகித வேலைகள் தொழில்நுட்பம் சார்ந்ததாக இருக்கின்றன. அடுத்த ஐந்தாண்டில் 76 சதவிகித வேலைகள் தொழில்நுட்பத்தை முழுமையாகப் பயன்படுத்தும் வகையில் மாறும். இதை உணர்ந்து படிக்க வேண்டும்.

இயந்திரங்கள் நிறைந்த தொழிற்சாலைகளை ஆட்டோமேட்டிக்

டெக்னாலஜியும், ஆர்ட்டிபிஷியல் டெக்னாலஜியும் இயக்க உள்ளன. இன்டர்நெட் ஆஃப் திங்ஸ் தொழில்நுட்பம் உலகைக் கைவசப்படுத்தியுள்ளது. இத்தகைய தொழில்நுட்பத்தில் நிபுணத்துவம் பெறுபவர்களுக்கு வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன.

ஆர்ட்டிபிஷியல் இன்டெலிஜென்ஸ், ரோபோடிக், மெஷின் லேர்னிங், டேட்டா அனாலிடிக்ஸ் ஆட்டோமேஷன் சார்ந்து தகவல் தொழில்நுட்பப் பிரிவுகள் முன்னேறிவருகின்றன. வங்கித் துறையானாலும் சரி, உற்பத்தித் துறையானாலும் சரி அனைத்துத் துறைகளிலும் மேற்சொன்ன பிரிவுகளின் தாக்கம் அதிகரித்துவருகிறது. இது சார்ந்த டிஜிட்டல் தொழில்நுட்ப அறிவை வளர்த்துக் கொள்ள அதிக முக்கியத்துவம் தர வேண்டும்.

> “இந்தியாவில் அடுத்த ஐந்தாண்டில் ரோபோடிக் புராசஸிங் ஆட்டோமேஷன் தொழில்நுட்பத்தில் 5 லட்சம் பேர் தேவை. ஆனால், 50,000 பேர்கூட இல்லை. கம்ப்யூட்டர் விஷன் தொழில்நுட்பத்தில் நிறைய பேர் தேவை. ஆனால், தகுந்த திறன் கொண்டவர்கள் இல்லை. பொறியியல் பாடப்பிரிவில் எந்தப் படிப்பு வேண்டுமானாலும் படிக்கலாம். மேற்கண்ட பிரிவுகளில் கூடுதல் திறனை வளர்த்துக் கொண்டால் வேலைவாய்ப்பைப் பெறலாம்.”

IWCM


### கலந்தாய்வில் கலந்துகொண்டு பொறியியல் படிப்பைத் தேர்ந்தெடுங்கள்

தமிழ்நாடு தொழில்நுட்ப இயக்ககம் நடத்தும் பொது கலந்தாய்வில் கலந்துகொண்டு தமிழ்நாட்டில் உள்ள பொறியியல் கல்லூரிகளில் சேரலாம். பொறியியல் படிப்பைத் தேர்ந்தெடுக்கும்போது ECE, EEE, Mechanical Engineering, Civil Engineering என்று முதன்மையான Core Engineering பாடத்தையோ அல்லது வர்த்தக வாய்ப்புள்ள பயோ மெடிக்கல், பயோ டெக்னாலஜி, ஃபுட் பிராசசிங் போன்ற பிரிவுகளையோ தேர்ந்தெடுக்கலாம்.

பொறியியல் கலந்தாய்வின் போது **‘முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்’ என்ற சான்றிதழை வழங்கும்போது உங்களுக்கான கல்விக்கட்டணத்தை அரசே வழங்கி விடும்.** இதைத்தவிர அரசு உதவித்தொகையும் வழங்குகிறது. அரசு பொறியியல் கல்லூரியைத் தேர்ந்தெடுத்தால் கல்விக்கட்டணம் ரூ. 30,000-க்கும் குறைவே.

பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

## 8.7 மருத்துவத் துறை சார்ந்த பொறியியல் படிப்பு - பயோ மெடிக்கல் இன்ஜினீயரிங்




மருத்துவத் துறையின் ஆராய்ச்சிப் பிரிவில் நுழைய மருத்துவக் கல்லூரியில் படித்தாக வேண்டும் என்பதில்லை. பயோமெடிக்கல், பயோடெக்னாலஜி போன்ற பொறியியல் படிப்புகள் படித்தாலும், மைக்ரோபயாலஜி, பயோகெமஸ்ட்ரி போன்ற அறிவியல் படிப்புகளைப் படித்தாலும் மருத்துவத் துறையில் சாதிக்கலாம்.

பொறியியல், மருத்துவம் இரண்டிலும் ஆர்வமுள்ளவர்களுக்கு வாய்ப்புள்ள பிரிவு, பயோமெடிக்கல் இன்ஜினீயரிங்.

**நீட் தேர்வில் அதிக மதிப்பெண் பெற முடியாமல் மருத்துவத் துறையில் கால் பதிக்க முடியாதவர்கள் பயோமெடிக்கல் பிரிவைத் தேர்ந்தெடுத்து மருத்துவத் துறையில் பணி வாய்ப்பைப் பெறலாம்.**

பொறியியல் அறிவை, ஹெல்த்கேர் பிரிவுக்குத் தேவைக்கான மாற்றங்களைக் கொண்டுவருவது, மருத்துவத் துறைக்குத் தேவையான கருவிகள் வடிவமைப்பு, மேம்படுத்துவது, புதிய கருவிகள் தயாரிப்பு, உடலுறுப்புகளின் செயல்பாட்டில் ஏற்படும் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பது எனப் பல வகையான வேலைகளே பயோமெடிக்கல் பிரிவின் முக்கிய பணி.



பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

### 8.7.1 யாரெல்லாம் பயோமெடிக்கல் பிரிவைத் தேர்ந்தெடுக்கலாம்?

- பொறியியல் மற்றும் பயாலஜி பிரிவுகளில் மிகுந்த ஆர்வம் உள்ளவர்கள்
- மருத்துவ அளவீடுகளில் மிகுந்த கவனம் செலுத்துபவர்கள்
- பகுப்பாய்வுத் திறன் மிக்கவர்கள்
- கருவிகள் வடிவமைப்பிலும், மேம்பாட்டிலும் ஈடுபாடு உள்ளவர்கள்
- மருத்துவம் மற்றும் சுகாதாரத் துறையினரோடு இணைந்து பணியாற்றும் மனப்பக்குவம் உள்ளவர்கள்
- தற்போது பல கல்வி நிறுவனங்களில் பயோமெடிக்கல் இன்ஜினியரிங் மற்றும் அறிவியல் படிப்புகள் உள்ளன. குறிப்பாக, அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் இதர பொறியியல் கல்வி நிறுவனங்களிலும் பயோமெடிக்கல் இன்ஜினியரிங் படிப்புகள் உள்ளன.


- **வேலை வாய்ப்பு:** பயோமெடிக்கல் இன்ஜினியரிங் படித்து முடித்தவுடன், பொதுத்துறை மற்றும் பன்னாட்டு மருந்து தயாரிப்பு நிறுவனங்களில் வேலை வாய்ப்பைப் பெறலாம். பன்னாட்டு விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா, உலக சுகாதார நிறுவனத்திலும் பயோமெடிக்கல் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது.

இந்தியாவில், லார்சன் & டூப்ரோ, சிப்லா, டெலாய்ட் கன்சல்டிங் இந்தியா பிரைவேட் லிமிடெட், ஸ்ட்ரைக்கர் தொழில்நுட்ப மையம், சீமென்ஸ், பிபிஎல் ஹெல்த்கேர், விப்ரோ, GE மருத்துவ அமைப்பு, பிலிப்ஸ் ஹெல்த்கேர், ஜெனரல் எலெக்ட்ரிக் குளோபல் ரிசர்ச், டெக்ஸாஸ் இன்ஸ்ட்ருமென்ட்ஸ் இன்க் போன்ற நிறுவனங்களிலும் வேலை வாய்ப்பைப் பெறலாம்.

> **அமெரிக்காவில்** பயோமெடிக்கல் இன்ஜினீயர்களுக்கு ஆரம்ப சம்பளமாக ஆண்டுக்கு, 40,000 டாலர் வரை கிடைக்கிறது. முதுகலை பயோமெடிக்கல் இன்ஜினீயருக்கு ஆண்டு சம்பளமாக 60,000 டாலர் வரை கிடைக்கிறது. இனி வரும் காலம் மருத்துவத் தேவை மிகுந்த காலம் என்பதால் பயோமெடிக்கல் பிரிவு ஏற்றமிகு பிரிவுகளில் முக்கிய இடத்தில் உள்ளது.

பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

# 8.8 கொரோனாவால் வாய்ப்பு மிகுந்த படிப்பாக மாறிய பயோடெக்னாலஜி படிப்பு!




தற்போது உலகையே ஆட்டிப் படைத்து வரும் கொரோனா பிரச்னையாக இருந்தாலும் சரி, ஜிகா வைரஸ் பிரச்னையாக இருந்தாலும் சரி, நுண்ணுயிர் பிரச்னைகளுக்குத் தீர்வு காண அதிகம் நம்புவது பயோ டெக்னாலஜியைத்தான்.

உலகளவில் மாறிவரும் வேளாண்மை, உணவு உற்பத்தி, மருத்துவம், பொதுச் சுகாதாரம் என முதன்மையான பிரிவுகளில் ஆராய்ச்சியையும், மேம்படுத்துதலையும் முன்னெடுக்கும் மிக முக்கிய துறையாக உள்ளது, பயோடெக்னாலஜி.

**மருத்துவம் படிக்க வாய்ப்பு கிடைக்கவில்லையே என்று கவலைப்பட வேண்டியதில்லை. மருத்துவத் துறையில் மிக முக்கியமான பிரிவுகளில் ஒன்றாக உள்ள பயோடெக்னாலஜி படிப்பைத் தேர்ந்தெடுக்கலாம்.**

### பயோடெக்னாலஜி பிரிவில் என்ன சொல்லிக்கொடுக்கப்படுகிறது?

பொதுவாக, பயோடெக்னாலஜி படிப்பில் மருத்துவம் மற்றும் உடல்நலம் சார்ந்த அறிவையும், உயிரியல் சார்ந்த ஆராய்ச்சி முன்னேற்றங்களையும் கற்றுக்கொள்ள முடியும். உயிரினங்களில் நுண்ணுயிர்கள் பரவல் குறித்தும், அதைக் கட்டுப்படுத்துவதையும், அதற்கான மருத்துவத்தையும் ஆராய்ச்சி நோக்கோடு அணுகுகிறது



பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

பயோடெக்னாலஜி. ஆராய்ச்சி மையங்களிலும், சோதனை மையங்களிலும் பணியாற்றும் ஆர்வமும், நுணுக்கமாகப் பார்க்கும் திறனும் பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

### 8.8.1. பி.டெக் பயோடெக்னாலஜி படிப்பில் சேரலாமா அல்லது பி.எஸ்சி பயோ டெக்னாலஜி படிப்பில் சேரலாமா?

தொழில்நுட்பம் சார்ந்த விஷயங்கள் பி.டெக் பயோடெக்னாலஜியில் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. அறிவியல் ரீதியில் பி.எஸ்சி பயோ டெக்னாலஜி பாடத்திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. உயர்கல்விக்காக பி.எஸ்சி முடித்து எம்.எஸ்.சி சேர வேண்டும். பி.டெக் முடிப்பவர்கள் எம்.எஸ் சேர வேண்டும். எம்.எஸ்சி முடித்து மீண்டும் ஆராய்ச்சி படிப்பில் சேர வேண்டும். பி.டெக் சேருபவர்கள், கொஞ்சம் கூடுதலாகக் கட்டணம் செலுத்த வேண்டி இருக்கும். உங்களுடைய பொருளாதாரத்தையும், குறிக்கோளையும் வைத்து எதைத் தேர்ந்தெடுப்பது என்பதை முடிவு செய்யுங்கள்.

**வேலை வாய்ப்பு:** பயோ டெக்னாலஜி படித்தவர்கள் மருத்துவம், வேளாண்மை, கடல் வளம், சுற்றுச்சூழல், வேதியியல் துறை, பூச்சி மற்றும் நுண்ணுயிர்களைக் கட்டுப்படுத்துதல் போன்ற துறைகளில் வேலை வாய்ப்பு உள்ளது.


IWCM

பி.டெக் படித்தவர்கள் மருந்துப் பொருள் உற்பத்தி நிறுவனங்கள், ஹெல்த்கேர், உணவுப்பொருள் தயாரிப்பு நிறுவனம், இரசாயன நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் எனப் பல இடங்களில் பயோடெக்னாலஜி படித்தவர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

பயோடெக்னாலஜி படித்தவர்கள் முதுநிலை பட்டப்படிப்பையும், ஆராய்ச்சிப் படிப்பையும் மேற்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். உயர்படிப்பில் சேர்ந்து குறிப்பிட்ட பிரிவில் நிபுணத்துவம் பெறும்போது, அத்துறையில் நிறைவான சம்பளம் வாங்கும் வேலை வாய்ப்பைப் பெறலாம். வெளிநாட்டில் ஆராய்ச்சி நிறுவனங்களிலும், மையங்களிலும் சேரலாம். GATE தேர்வெழுதி உயர் கல்வி நிறுவனங்களில் ஆராய்ச்சி மேற்கொள்ளலாம். ●

> தற்போது, இந்தியாவில் பயோ டெக்னாலஜி துறை அதிவேகமாக வளர்ச்சி உள்ள துறையாகவே அறியப்படுகிறது. மேலும், கொரோனா பிரச்னை பயோடெக்னாலஜிஸ்ட் தேவைகளை உணரவைத்துள்ளது. பயாலஜியையும், டெக்னாலஜியையும் விரும்புகிறவர்களுக்கு நல்ல சாய்ஸ் பயோடெக்னாலஜி படிப்பு.

# 8.9 ஆராய்ச்சிக்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கும் உகந்த பயோஇன்ஃபர்மேட்டிக்ஸ் படிப்பு!




**உ**யிரியல் துறையில் தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாடுகள் அதிகரித்து வருகிறது. இதனால் உயிரியல் துறையில், உயிரியல் தகவலியல் (Bioinformatics) துறை மிக வேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது.

### பயோஇன்ஃபர்மேட்டிக்ஸ் பிரிவில் என்ன இருக்கிறது?

உயிரியல் தகவலியல் துறையில் கணினி, கணிதம், இயற்பியல், வேதியியல், மருந்தியல், மானுடவியல் மற்றும் உயிரியல் சார்ந்த பிரிவுகளை உள்ளடக்கியதாக உள்ளது. உயிரியல் ஆய்வுத் தகவல்களைப் பதிவுசெய்தல், பகுப்பாய்வு செய்தல், மருந்துகளின் செயல்பாட்டை ஆய்வு செய்தல், புதிய மருந்துக்கான காரணிகளைக் கண்டறிதல், மருந்துகளின் பண்புகளை வகைப்படுத்துதல், நச்சுத்தன்மைகளுக்கு எதிர்வினையாற்றும் மருந்துப் பொருள்களை அடையாளம் காணுதல் என உயிரியல் தகவலியல் பயன்பாடு அதிகம்.

### பயோஇன்ஃபர்மேட்டிக்ஸ் பிரிவு எங்குள்ளது?

தமிழ்நாட்டின் பெரும்பாலான கல்லூரிகளில் இளநிலை பயோஇன்ஃபர்மேட்டிக்ஸ் என்ற உயிரியல் தகவலியல் படிப்பு உள்ளது. கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் பி.டெக் பயோஇன்ஃபர்மேட்டிக்ஸ் படிப்பு உள்ளது.

இளநிலை படிப்பில் சேர பிளஸ் டூ வகுப்பில் கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல் பாடங்களைப் படித்தவர்கள் சேரலாம். முதுநிலை படிப்பில் சேர இயற்பியல், வேதியியல், உயிரி தகவலியல், கம்ப்யூட்டர் சயின்ஸ் பட்டப்படிப்பு படித்தவர்கள் சேரலாம்.

### யார் இந்தப் படிப்பைத் தேர்ந்தெடுக்கலாம்?

உயிரியல் துறையின் மீது ஆர்வமும், பகுப்பாய்வு செய்யும் திறனும் பெற்றவர்கள் இந்தப் படிப்பைத் தேர்தெடுக்கலாம். புரதத்தைப் படிகமாக்கல், மூலக்கூறுகள் வடிவமைப்பு சார்ந்த மருந்துப் பொருள்கள் கண்டுபிடிப்பு, நுண்ணுயிரிகளின் பண்புகளைக் கண்டறிந்து, அதற்குத் தகுந்தாற்போல் மருந்துப் பொருளை உருவாக்குதல் எனப் பல வகையில் ஆராய்ச்சி மேற்கொள்ளலாம். மரபியல், மூலக்கூறு உயிரியல் பிரிவுகளில் நிபுணத்துவம் பெறலாம்.

IWCM

**வேலை வாய்ப்பு:**

பயோஇன்ஃபர் மேட்டிக்ஸ் பிரிவில் ஆராய்ச்சிக்கான வாய்ப்புகள் அதிகம். ஆராய்ச்சியில் ஈடுபடுபவர்களுக்கு IIT போன்ற மத்திய கல்வி நிறுவனங்களில் வாய்ப்புகள் உள்ளன. பன்னாட்டுத் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களிலும் வேலை வாய்ப்பைப் பெறலாம்.

> “நீண்டகாலமாக பல்கலைக்கழகத்தின் பயோடெக்னாலஜி துறையின் கீழ் செயல்பட்டு, உயிரியல் தகவலியல் பிரிவில் முதுநிலை பட்டப்படிப்பு மட்டுமே இருந்துவந்தது. ஆனால், இப்போது தமிழ்நாட்டின் பெரும்பாலான கல்லூரிகளில் இளநிலை பயோஇன்ஃபர்மேட்டிக்ஸ் என்ற உயிரியல் தகவலியல் படிப்பு உள்ளது.”

# 8.10 முன்னேறி வரும் உணவு உற்பத்தி வேலை வாய்ப்பு அதிகரிக்கும் உணவுத் தொழில்நுட்ப படிப்பு!

*அடுத்த 15 ஆண்டுகளில் உணவு உற்பத்தித் துறையில் மிகப்பெரிய மாற்றத்தையும், உணவுத் தொழில்நுட்ப புரட்சியும் நிகழவுள்ளது. இதனால் வேளாண்மை மற்றும் உணவு தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சி அதிகரித்து, வேலை வாய்ப்புகளும் அதிகரிக்கவுள்ளன.*

| எங்கு படிக்கலாம்? | |
|---|---|
| 1. | அண்ணா பல்கலைக்கழகம் - பி.டெக். ஃபுட் டெக்னாலஜி, |
| 2. | தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் - பி.டெக். ஃபுட் டெக்னாலஜி |
| 3. | கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகம் - பி.டெக். ஃபுட் டெக்னாலஜி |

*மத்திய அரசின் முதன்மைக் கல்வி நிறுவனங்களில் ஒன்றான Indian Institute of Food Processing Technology தஞ்சாவூரில் அமைந்துள்ளது. இங்கு, இளநிலை மற்றும் முதுநிலைப் படிப்பாக, உணவுத் தொழில்நுட்ப பொறியியல் படிப்பு உள்ளது.*

IWCM

*Indian Institute of Food Processing Technology கல்வி நிறுவனத்தில் இளநிலை படிப்பில் 60 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். பிளஸ் டூ - வில் கணிதம், இயற்பியல், வேதியியல் பாடங்களில் 55 சதவிகித மதிப்பெண்ணுடன், ஜே.இ முதல்நிலை தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். நான்கு ஆண்டு படிப்பில் சேர்பவர்கள், உலகத் தரத்திலான ஆய்வகங்களில் உணவு சார்ந்த பல்வேறு ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளலாம். படித்து முடித்தவுடன் 50,000 ரூபாய்க்குக் குறைவில்லாமல் வேலை வாய்ப்பைப் பெறலாம்.*

*தற்போது வளர்ந்து வரும் தொழில்நுட்பப் படிப்பில் மாணவர்கள் அதிகளவில் ஆர்வம் காட்டினால், பிற்காலத்தில் வளர்ந்த துறையில் கைநிறைய சம்பளத்துடன் நிபுணத்துவம் பெற்றவர்களாக மாறியிருப்பார்கள். உணவுத்தொழில் மீது ஆர்வம் உள்ளவர்கள், உணவு தொழில்நுட்பப் படிப்பில் கவனம் செலுத்தினால், மிகப்பெரிய வெற்றி பெறலாம்.*

**வேலை வாய்ப்பு:** இந்திய அரசின் உணவுப்பொருள் வாணிபக் கழகத்திலும், மாநில அரசின் உணவுப்பொருள் சேமிப்புக் கிடங்குகளிலும், உணவுப்பொருள் பகுப்பாய்வு மையங்களிலும் வேலை வாய்ப்பைப் பெறலாம்.

## 8.11 இஸ்ரோவில் (ISRO) வேலைபார்க்கலாம்!

இளைஞர்களுக்கு ஆர்வமுள்ள வேலை வாய்ப்புகளில் ஒன்றாக உள்ளது, ஏரோஸ்பேஸ் தொழில்நுட்பம். இந்த தொழில்நுட்பத் துறையில் அதிக அளவில் வாய்ப்புகளை வழங்கிவருகிறது இஸ்ரோ. இந்திய விண்வெளி ஆராய்ச்சிக்குத் தேவையான ஆட்களை உருவாக்குவதற்காக 'இண்டியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஸ்பேஸ் சயின்ஸ் அண்ட் டெக்னாலஜி' (IIST - Indian Institute of Space Science and Technology) என்ற கல்வி நிலையத்தை திருவனந்தபுரத்தில் உள்ள 'விக்ரம் சாராபாய் விண்வெளி ஆராய்ச்சி நிலையத்துக்கு ' அருகிலேயே அமைத்துள்ளது.

### ஐஐஎஸ்டி-யில் எப்படி சேர்வது?

இதில் சேர கணிதம், இயற்பியல், வேதியியல் பாடங்களுடன் பிளஸ் டூ தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். ஐஐடி நடத்தும் 'ஜாயின்ட் என்ட்ரன்ஸ் எக்ஸாம்' (ஜே.இ.இ) தேர்வில் கலந்துகொண்டு தேர்ச்சி பெற வேண்டும். இந்தத் தேர்வின் முடிவில் ஐஐடி நிறுவனம் வெளியிடும் தரவரிசையில் இடம்பிடித்தால், எளிதில் ஐஐஎஸ்டி கல்வி நிறுவனத்துக்குள் நுழைந்துவிடலாம். ஐஐடி தரவரிசைப் பட்டியல் வெளியான பின்பு இரண்டாவது மூன்றாவது வாரத்தில், பெங்களூருவிலோ அல்லது திருவனந்தபுரத்திலோ கவுன்சிலிங் நடைபெறும்.

### என்னென்ன படிப்புகள் உள்ளன?

பி.டெக். ஏவியானிக்ஸ், பி.டெக். ஏரோஸ்பேஸ் இன்ஜினீயரிங் என இரண்டு கோர்ஸ்கள் இருக்கின்றன. இவை நான்கு வருட இளநிலை பி.டெக். படிப்பு. அடுத்து, எம்.எஸ்ஸி. ஐந்து வருட படிப்பு. இதைத் தவிர எம்.டெக். படிப்புகளும் உள்ளன. ●

> 'இண்டியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஸ்பேஸ் சயின்ஸ் அண்ட் டெக்னாலஜி' கல்லூரியில் சேரும் அனைவருக்கும் கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், உணவு என்று அனைத்தும் குறைந்த கட்டணத்தில் வழங்கப்படுகிறது. மாணவர்களுக்கு சர்வதேச அளவில் நவீன ஆய்வுக்கூடமும், படிப்புக்கு ஏற்ற சுற்றுச்சூழலும் உள்ளன. இங்குப் படித்து முடித்தவுடன், இஸ்ரோவில் விஞ்ஞானியாகவோ அல்லது பொறியாளராகவோ வேலை பார்க்க வேண்டும்.

பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

# 8.12 மரைன் இன்ஜினீயரிங் படிப்புகள்

எந்தத் துறையிலும் இல்லாத வாய்ப்பும், சம்பளமும் கப்பல் துறையில் இருக்கிறது என்கிறார்கள் கடல்வள ஆர்வலர்கள். சென்னை செம்மஞ்சேரியில் உள்ளது கடல் சார் பல்கலைக்கழகம்(Indian Maritime University). இது மத்திய கப்பல் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது.

இந்த பல்கலைக்கழகத்தில் பி.எஸ்சி நாட்டிக்கல் சயின்ஸ், பி.டெக் மரைன் இன்ஜினீயரிங், பி.டெக் நேவல் ஆர்கிடெக்சர் ஓஷன் இன்ஜினீயரிங், பி.பி.ஏ.(லாஜிஸ்டிக், ரிடெய்லிங் & இ-காமர்ஸ்) படிப்புகள் உள்ளன. மேலும், ஓராண்டு டிப்ளமோ படிப்பாக நாட்டிக்கல் சயின்ஸ் படிப்பு உள்ளது. இந்த டிப்ளமோ படித்தவர்கள் பி.எஸ்சி நாட்டிக்கல் சயின்ஸ் படிப்பில் சேர தகுதி உடையவர்கள்.

மேற்கண்ட படிப்பில் டிப்ளமோ தவிர, இதர படிப்பில் சேர பிளஸ் டூ தேர்வில் கணிதம், இயற்பியல், வேதியியல் பாடப்பிரிவுகளில் குறைந்தது 60 சதவீத மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். ஆங்கில பாடத்தில் குறைந்தது 50 சதவீத மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். பட்டியலினத்தவருக்குக் குறைந்த பட்ச மதிப்பெண்களில் 5 சதவீத சலுகை உண்டு. டிப்ளமோ படிப்பிலும், பி.எஸ்சி ஷிப் பில்டிங் & ரிப்பேர் படிப்பிலும் சேர கணிதம், இயற்பியல், வேதியியல், ஆங்கிலப் பாடங்களில் குறைந்தது 50 சதவீத மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும்.

மேற்கண்ட படிப்பில் சேர இந்திய கடல்சார் பல்கலைக்கழகம் பொது நுழைவுத் தேர்வை (Common Entrance Exam - CET) நடத்துகிறது. இந்த நுழைவுத்தேர்வு ஆன்லைன் மூலமாக நடத்தப்படுகிறது.

**வேலை வாய்ப்பு:** உள்நாட்டுக் கப்பல் நிறுவனங்களில் மட்டுமல்லாது, வெளிநாட்டுக் கப்பல் நிறுவனங்களிலும் பணியாற்றும் வாய்ப்பைப் பெறலாம். துறைமுகங்களில், துறைமுகப் பகுதியில் அமைந்துள்ள ஏற்றுமதி நிறுவனங்களிலும் பணியாற்றலாம்.

மரைன் படிப்பில் சேர மேலும் விவரங்களுக்கு
https://www.imu.edu.in

| மரைன் இன் ஜினீயரிங் படிப்புகள் | | |
|---|---|---|
| 1. | BTech (Marine Engineering) | 4 Years |
| 2. | BTech (Naval Architecture Ocean Engineering) | 4 Years |
| 3. | BSc (Nautical Science) | 3 Years |
| 4. | BBA (Logistics, Retailing & E-Commerce) | 3 Years |
| 5. | Diploma in Nautical Science leading to B.Sc. (Applied Nautical Science) | 1 Year |
| 6. | BSc (Ship Building & Repair) | 3 Years |

# 8.13 உதவித்தொகையுடன் பிளாஸ்டிக் தொழில்நுட்பக் கல்வி பயிலலாம்




இந்திய அரசின், வேதியியல் மற்றும் உரங்களுக்கான அமைச்சகத்தின் கீழ், தன்னாட்சி பெற்ற கல்வி நிறுவனமாக உள்ளது, கிண்டியில் உள்ள மத்திய பிளாஸ்டிக் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கழகம் (CIPET - Central Institute of Plastics Engineering and Technology).

இங்கு, அரசு உதவித்தொகையுடன் பிளாஸ்டிக் தொழில்நுட்பக் கல்வி தொடர்பான மூன்றாண்டுப் பட்டயப் படிப்புகள், ஓராண்டு, இரண்டாண்டு சான்றிதழ் படிப்புகள் வழங்கப்படுகின்றன. நான்காண்டு இளநிலை தொழில்நுட்பப் படிப்பில் சேர, பொறியியல் கலந்தாய்வில் கலந்து கொண்டும் சேரலாம்.


| |
|---|
| மேலும் விவரங்களுக்கு : https://www.cipet.gov.in/centres/cipet-chennai/introduction.php |

## 8.14 மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் (சிஎல்ஆர்ஐ) வழங்கும் படிப்புகள்

சென்னை அடையாறில் பிரதான கல்வி நிறுவனங்களில் ஒன்றாக உள்ளது, மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம். இதுவும் சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்த தோல் ஆராய்ச்சி நிறுவனங்களில் ஒன்றாக உள்ளது. இந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் மண்டல அலுவலகங்கள் கொல்கத்தா, கான்பூர், ஜலந்தர், அகமதாபாத், மும்பை ஆகிய நகரங்களில் உள்ளன. இங்கு, பி.டெக் லெதர் டெக்னாலஜி படிப்பு உள்ளது. இந்தப் படிப்பில் சேர, தமிழ்நாடு தொழில்நுட்ப நிறுவனம் நடத்தும் பொறியியல் படிப்புக்கான பொது கலந்தாய்வில் கலந்து கொண்டு தேர்வு செய்ய வேண்டும்.

| |
|---|
| மேலும் விவரங்களுக்கு www.clri.org |

# 8.15 கட்டட வடிவமைப்பு ஆர்வலர்களுக்கு அற்புதமான படிப்பு ஆர்க்கிடெக்சர்!




தற்போது பொறியியல் கல்லூரிகளில், ஆர்க்கிடெக்சர் படிப்பை கூடுதலாகச் சேர்த்துவருவது, அந்தப் படிப்பின் மீதுள்ள மதிப்பையும், மாணவர்கள் ஆர்க்கிடெக்சர் படிப்பின் மீது கொண்டுள்ள ஆர்வத்தையும் அறிந்துகொள்ள முடியும்.

### யார் கட்டட வடிவமைப்பு கோர்ஸில் சேரலாம்?


பன்னிரண்டாம் வகுப்பில் கணிதப் பாடத்தைப் படிக்கும் எந்தப் பிரிவினர் வேண்டுமானாலும் பி.ஆர்க் படிப்பில் சேரலாம். பிளஸ் டூ தேர்வு முடிந்தவுடனோ அல்லது அதற்கு முன்னதாகவோ கவுன்சில் ஃபார் ஆர்க்கிடெக்சர் அமைப்பு நடத்தும், தேசிய அளவிலான திறனறிவு தேர்வை எழுதலாம்.

### பி.ஆர்க் படிப்பில் சேர என்ன செய்ய வேண்டும்?

கட்டடங்களையும், இதர கட்டுமானங்களையும் வடிவமைப்பது பற்றிய ஐந்து வருட பி.ஆர்க் படிப்புக்கு *National Aptitude Test for Architecture (NATA)* என்ற நுழைவுத் தேர்வை எழுத வேண்டும்.

| |
|---|
| National Aptitude Test for Architecture (NATA) தேர்வு குறித்து மேலும் விவரங்களுக்கு http://www.nata.in/ |

### நுழைவுத்தேர்வு எப்படி நடைபெறும்?



National Aptitude Test for Architecture (NATA) தேர்வில் 200 மதிப்பெண்கள். இதில் 80 மதிப்பெண்கள் பெற்றால் தேர்ச்சி பெற்றவர்களாகக் கருதப்படுவார்கள். இந்த நுழைவுத் தேர்வில் பெறும் மதிப்பெண்ணை 50 சதவிகிதமாகவும்,பன்னிரண்டாம் வகுப்பில் பெறும் மதிப்பெண்ணை 50 சதவிகிதமாகவும் கணக்கில் எடுத்துக்கொண்டு கவுன்சலிங் மூலம் சேர்க்கை நடைபெறுகிறது.

நுழைவுத் தேர்வில் பொது அறிவு வினாக்களோடு, கட்டடக் கலையின் வரலாறு சார்ந்த விஷயங்கள் குறித்து சரியான விடைகளைத் தேர்ந்தெடுக்கும் முறை ஒரு தாளும், மாணவரின் வரையும் திறனையும், கற்பனைத் திறனையும் சோதித்தறியப்படும் வகையிலான டிராயிங் தேர்வு இரண்டாவது தாளாகவும் உள்ளன.

### கட்டட வடிவமைப்புப் படிப்பில் என்னென்ன சொல்லிக் கொடுக்கப்படுகிறது?

IWCM

பி.ஆர்க் படிப்பில் நகர கட்டமைப்பு, கட்டட வடிவமைப்பு, கட்டட உள்வடிவ டிசைன், லேண்ட்ஸ்கேப் டிசைன், 3டி விஷுவலைஸர், புராஜெக்ட் மேனேஜ்மென்ட், என்விரான்மென்ட் டிசைன் எனப் பல பிரிவுகள் உள்ளன.

**வேலை வாய்ப்புகள்**: தற்போது மத்திய அரசு, 2023 ஆம் ஆண்டில் அனைவருக்கும் வீடு எனும் திட்டத்தைச் செயல்படுத்திவருகிறது. இதனால், கட்டுமானத் துறையிலும், கட்டட வடிவமைப்பியல் துறையிலும் வாய்ப்புகள் ஏராளம்.


படிப்பை முடித்தவுடன், ஆர்க்கிடெக்சர் நிறுவனத்தில் ஒரு குறிப்பிட்ட காலம் வரை வேலை செய்த பின்பு, தனியே வடிவமைப்பாளராகக் களம் இறங்கி, அதிகளவில் சம்பாதிக்கவும் வாய்ப்புகள் ஏராளம்.

பொதுத்துறை நிறுவனங்களான பாதுகாப்புத் துறை, ரயில்வே துறை, வங்கித் துறைகளிலும் கட்டுமான வடிவமைப்பியல் பிரிவில் வேலை வாய்ப்பைப் பெறலாம். ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைந்துள்ள நகர கட்டமைப்புத் துறையில் வேலை வாய்ப்பு பெறலாம். ●

# 9.கலை அறிவியல் கல்லூரி படிப்புகள்!

கடந்த சில ஆண்டுகளாகக் கலை அறிவியல் படிப்புகள் மீது மாணவர்களின் பார்வை திரும்பியுள்ளது. தற்போது பொறியியல் கல்லூரியில் சேர எளிதாக இடம் கிடைக்கும் நிலை உருவாகியுள்ளது. ஆனால், கலை அறிவியல் கல்லூரிகளில் சேர போட்டி அதிகரித்துள்ளது. தொழிற்கல்வி படிப்புடன் ஒப்பிடும்போது கலை அறிவியல் படிப்புகளுக்குச் செலவு மிகவும் குறைவு. மேலும், பொறியியல் பட்டதாரிகளுக்கு இணையாகக் கலை அறிவியல் பட்டதாரிகளுக்கும் கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த துறைகளில் வேலைவாய்ப்புகள் பெருகியுள்ளன. கலைக் கல்லூரிகளில் பி.எஸ்சி படிப்பிலும் ஏராளமான சிறப்புப் பாடப்பிரிவுகள் வந்தவண்ணம் உள்ளன. வேலை வாய்ப்பு அதிகமுள்ள பாடப்பிரிவுகள் குறித்தும், அந்த பிரிவுக்கான வேலை வாய்ப்புகள் குறித்தும் விவரங்களைத் தொகுத்துள்ளோம்.

### 9.1 பி.எஸ்சி. கம்ப்யூட்டர் சயின்ஸ், பி.சி.ஏ. படிப்பு




கடந்த 25 வருடங்களாக விருப்பப் பாடமாக இருக்கிறது பி.எஸ்சி கம்ப்யூட்டர் சயின்ஸ் படிப்பு. பி.எஸ்சி கம்ப்யூட்டர் சயின்ஸ் படிப்புக்கு கிடைத்த வரவேற்பைத் தொடர்ந்து, பல கல்லூரிகளில் பி.சி.ஏ. (பேச்சுலர் ஆஃப் கம்ப்யூட்டர் அப்ளிகேஷன்) படிப்பும் வழங்கப்படுகிறது. மேற்கண்ட இரண்டு படிப்புகளும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளிலேயே உள்ளன என்பதால், மாணவர்கள் மேற்கண்ட படிப்பில் மிகக் குறைந்த செலவில் படிக்கலாம்.

பிளஸ் டூ வகுப்பில் கணிதப் பாடம் எடுத்து படித்தவர்கள், பி.எஸ்சி கம்ப்யூட்டர் சயின்ஸ் / பி.சி.ஏ. படிப்பில் சேரலாம். தற்போது, பள்ளி மாணவர்களுக்கான பாடங்களுடன் கணினிப் பாடங்களை அறிமுகப்படுத்தி இருப்பதால், கம்ப்யூட்டர் குறித்த பாடங்கள் படிப்பது எளிது.


பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

### 9.1.1. பி.சி.ஏ. சேரலாமா, பி.எஸ்சி கம்ப்யூட்டர் சயின்ஸ் சேரலாமா?

பி.எஸ்சி கம்ப்யூட்டர் சயின்ஸில் கம்ப்யூட்டர் சாஃப்ட்வேர், கம்ப்யூட்டர் ஹார்டுவேர் குறித்தும், கம்ப்யூட்டர் இயக்கங்கள் குறித்தும் முழுமையாகப் படிக்கலாம். பி.சி.ஏ., வில் கம்ப்யூட்டர் குறித்த அடிப்படையான விஷயங்களோடு, புரோகிராமிங் குறித்தும், தகவல் மேலாண்மைக்கான அப்ளிகேஷன்கள், நிறுவன மேலாண்மை குறித்த விஷயங்களையும் கூடுதலாகப் படிக்கலாம்.

### 9.1.2 வேலை வாய்ப்பைப் பெற என்ன செய்ய வேண்டும்?

பி.எஸ்சி. கம்ப்யூட்டர் சயின்ஸ் படிப்பவர்கள், கம்ப்யூட்டர் நெட்வொர்க்கிங் குறித்தும் படித்து, அதில் சான்றிதழ் படிப்புகளைப் படித்தால் வேலை வாய்ப்பு பெறுவது எளிது.

பி.சி.ஏ. படிக்கும்போதே டிப்ளமோ படிப்பாக ஆட்டோமேஷன், டேட்டா அனலிட்டிக்ஸ் போன்ற படிப்புகள் படித்தால் வேலை வாய்ப்புத் துறையில் வாய்ப்புகளை அள்ளலாம். மேற்கண்ட டிப்ளமோ படிப்புகளை இலவசமாகவே படிக்கலாம்.

மத்திய கல்வித் துறை பல்வேறு ஐஐடி- களை இணைத்து, பல்வேறு டிப்ளமோ படிப்புகளை இலவசமாக வழங்கிவருகிறது.

IWCM

மேலும் விவரங்களுக்கு
https://onlinecourses.nptel.ac.in/, https://onlinedegree.iitm.ac.in/

பி.சி.ஏ. படித்து முடித்தவுடன் இரண்டு ஆண்டு படிப்பாக எம்.சி.ஏ. படிக்கலாம். கடந்த காலங்களில் மூன்று ஆண்டு படிப்பாக இருந்ததை அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழு (ஏஐசிடிஇ) பி.எஸ்சி படித்தவர்கள் இரண்டு ஆண்டு எம்.சி.ஏ. படித்தால் போதும் என்று விதிமுறையை மாற்றியுள்ளது.

ஆட்டோமேஷன், டேட்டா அனாலிட்டிக்ஸ் போன்ற படிப்புகள் படித்தால் வேலை வாய்ப்புகளை அள்ளலாம்.
மேற்கண்ட டிப்ளமோ படிப்புகளை இலவசமாகவே படிக்கலாம்.
மத்திய கல்வித் துறை பல்வேறு ஐஐடி-களை இணைத்து, பல்வேறு டிப்ளமோ படிப்புகளை இலவசமாக வழங்கிவருகிறது.
மேலும் விவரங்களுக்கு: https://onlinecourses.nptel.ac.in/, https://onlinedegree.iitm.ac.in/

# 9.2 ஸ்டாட்டிஸ்டிக்ஸ் படித்தால் பன்னாட்டு நிறுவனங்களில் வேலை!




**ஒ**வ்வொரு 10 ஆண்டுகளுக்கு ஒரு முறையும் மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. ஒவ்வொரு கிராமத்திலும், பஞ்சாயத்திலும், ஒன்றியத்திலும், மாவட்டத்திலும் எவ்வளவு பேர் வசிக்கின்றனர் என்பதையெல்லாம் தெளிவாகச் சொல்வது புள்ளியியல் (Statistics) துறை.

IWCM

**கொஞ்சம் கணிதத் திறனும் லாஜிக் அறிவும் இருந்தாலே ஸ்டாட்டிஸ்டிக்ஸ் துறையில் கலக்கலாம்.**

பொதுவாக, பன்னிரண்டாம் வகுப்பு கணிதப் பிரிவில் பயின்றவர்களே ஸ்டாட்டிஸ்டிக்ஸ் படிப்பைத் தேர்ந்தெடுப்பார்கள். ஆனால், வணிகவியல் படிப்பைப் படித்தவர்களும் ஸ்டாட்டிஸ்டிக்ஸ் படிப்பைத் தேர்ந்தெடுத்துப் படிக்கலாம். அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இளநிலை பட்டப்படிப்பு கற்றுக்கொடுக்கப்படுகின்றன.


**வேலை வாய்ப்பு:** புள்ளியியல் படித்தால் உள்நாட்டில் மட்டுமல்ல, வெளிநாட்டிலும் வேலை வாய்ப்பைப் பெறலாம். தற்போது, டேட்டா சயின்ஸ் துறை வேகமாக வளர்ச்சியடைந்துவருகிறது. இதனால், இளநிலை பட்டப்படிப்பு படிப்பவர்களுக்கு வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. டேட்டா மைனிங், டேட்டா வேர்ஹவுஸிங், நிதித் துறைகளில் வாய்ப்புகள் நிறைந்துள்ளன.

புள்ளியியல் படித்தால் அரசு வேலை வாய்ப்பையும் பெறலாம். சிவில் சர்வீஸ் தேர்வு, இந்தியப் புள்ளியியல் துறைத் தேர்வு மற்றும் இந்தியப் பொருளாதாரத் துறை தேர்வுகளில் தேர்ச்சிபெற்று, அரசின் உயர் பொறுப்புகளைப் பெறலாம். ●



பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

# 9.3 வளம் நிறைந்த புவியியல் துறை!




IWCM


பள்ளிப் படிப்பிலேயே மொழிப்பாடம், கணிதப் பாடத்துக்கு அடுத்த இடத்தில் இருப்பது சமூக அறிவியல் மற்றும் சுற்றுச்சூழலியல் பாடம்தான். சுற்றுச்சூழலியலின் முக்கிய அடிப்படையான விஷயம் புவியியல்.

### என்ன சொல்லிக்கொடுக்கப்படுகிறது?

பல வித சுற்றுச்சூழல் நிலைகள், புவியின் அமைப்புகள், பருவநிலை மாற்றம் உள்ளிட்ட பல முக்கியப் பிரச்னைகள் குறித்தும், புவியில் உள்ள வளங்களைக் கண்டறிவது, அதன் வயதைத் தீர்மானிப்பது எனப் பல விதமான ஆய்வுகள் குறித்தும் படிக்கலாம். புவியியல் துறையைச் சார்ந்தவர்கள் கல்லூரிகளில் ஜியாலஜி (புவியமைப்பியல்) துறையிலும் சேரலாம்.

> தற்போது, இந்திய ஆட்சிப்பணிக்கு நடத்தப்படும் சிவில் சர்வீஸ் எக்ஸாமில் அதிகளவில் தேர்வு செய்யப்படும் பாடமும் புவியியல்தான்.

தமிழ்நாட்டில் பெரும்பாலான அரசு கலைக் கல்லூரிகளில் ஜியாலஜி துறை




உள்ளது. ஜியாலஜி இளநிலை பட்டப்படிப்பு முடித்தவர்கள் முதுநிலை பட்டப்படிப்பு படிக்க, ஜியாலஜி, அப்ளைடு ஜியாலஜி, எர்த் சயின்ஸ், ஜியோ பிசிக்ஸ், மரைன் ஜியாலஜி, என்விரான்மென்டல் சயின்ஸ், என்விரான்மென்டல் ஜியாலஜி என ஏகப்பட்ட படிப்புகள் உள்ளன. இதில் ஏதேனும் ஒன்றில் சேர்ந்து, பிடித்த பிரிவில் நிபுணத்துவம் பெறலாம். மேலும் ரிமோட் சென்சிங், பேரிடர் மேலாண்மை, நகர்ப்புற திட்டமிடல், ஜியோ இன்ஃபர் மேட்டிக்ஸ், சுற்றுச்சூழல் மேலாண்மை போன்ற பிரிவுகளிலும் நிபுணத்துவம் பெறலாம்.

**வேலை வாய்ப்பு:** தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், புவியியல் மற்றும் பொதுப்பணித் துறைக்குத் தேவையானவர்களைத் தேர்வு நடத்தித் தேர்ந்தெடுக்கிறது. இதைப் போலவே மத்திய அரசின் கீழ் செயல்படும் இந்தியப் புவி அறிவியல் துறை (ஜியாலஜிகல் சர்வே ஆஃப் இந்தியா), மத்திய நிலத்தடி நீர்வளத் துறை, இந்திய எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனம் (ஓ.என்.ஜி.சி.), இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ), ஹைதராபாத்தில் உள்ள நேஷனல் ரிமோட் சென்சிங் சென்டர் (இன்காய்ஸ்), டேராடூன் இந்திய ரிமோட் சென்சிங் தொழில்நுட்ப நிறுவனம்(என்.ஆர்.எஸ்.ஸி), தேசிய தகவல் தொடர்பு மையம், இந்திய வானிலை ஆய்வு மையம், சுற்றுச்சூழல், நகர மேம்பாட்டு ஆணையம், சுற்றுச்சூழல் ஆய்வு நிறுவனங்கள் போன்றவற்றிலும் ஜியாலஜி படித்தவர்களைத் தேர்வு நடத்தித் தேர்ந்தெடுக்கின்றன.


எண்ணெய் மற்றும் இயற்கை வளங்களில் ஆர்வம் காட்டிவரும் ஷெல், ரிலையன்ஸ், பிரிட்டிஷ் கேஸ் போன்ற தனியார் எண்ணெய் நிறுவனங்களிலும் புவியியல் படித்த மாணவர்களுக்கு அதிகளவிலான வாய்ப்புகள் உள்ளன. தேசிய அனல் மின் நிலையம், நிலக்கரி, இரும்பு எஃகு நிறுவனங்கள், நீர்வள, நிலவளத் துறை, கனிமத் துறை போன்ற அரசுத் துறை நிறுவனங்களிலும் வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

உள்நாட்டில் மட்டுமல்லாது வெளிநாடுகளில், கனிம வளங்களில் கவனம் செலுத்திவரும் பன்னாட்டு நிறுவனங்களிலும் ஜியாலஜி படித்தவர்களுக்கு வாய்ப்புகள் உள்ளன. புவியில் உள்ள வளங்கள் குறித்து ஆர்வம் கொண்டவர்களுக்கு ஜியாலஜி துறை அற்புதமானது.



பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

# 9.4 ஆய்வுத் துறையில் நுழைய நல்ல சாய்ஸ் பயோகெமிஸ்ட்ரி!




IWCM

ஒரு காலத்தில் தனியார் கல்வி நிறுவனங்கள் போட்டி போட்டு தொடங்கிய படிப்புகளில் ஒன்றாக இருந்தது பயோகெமிஸ்ட்ரி. அதன் பிறகு, அரசுக் கல்லூரிகளிலும் பயோகெமிஸ்ட்ரி படிப்பு தொடங்கினார்கள். இன்றைக்கு பல சுயநிதிக் கல்லூரிகளில் பயோகெமிஸ்ட்ரி படிப்பு பெயரளவில் மட்டுமே உள்ளன. காரணம், பி.எஸ்சி. பயோகெமிஸ்ட்ரி படிப்பு, பி.எஸ்சி. வேதியியல் பட்டப்படிப்புக்கு இணையானது அன்று என்று தமிழக அரசின் அறிவிப்பு முதன்மையான காரணமாகிவிட்டது.

### தனியார் நிறுவன வேலை நிச்சயம்

எம்.எஸ்சி. பயோகெமிஸ்ட்ரி முடித்தவர்கள் எம்.எஸ்சி. வேதியியல் படிப்புக்கு சமமான படிப்பு என சில பல்கலைக்கழகங்கள் சான்றளித்துள்ளதால், அரசுப் பள்ளிகளில் முதுகலை ஆசிரியர் பணிக்குச் செல்ல ஆர்வம் உள்ளவர்களுக்கு தமிழக அரசின் இந்த அறிவிப்பு உபயோகமாக இருக்கும். தனியார் துறைகளில், குறிப்பாக ஆராய்ச்சித் துறையில் ஆர்வம் உள்ளவர்களுக்கு பயனுள்ள படிப்புகளில் ஒன்றாக உள்ளது பயோகெமிஸ்ட்ரி.

பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

### யார் தேர்ந்தெடுக்கலாம்?

*பயோகெமிஸ்ட்ரி, உயிரியலும், வேதியியலும் கலந்த கலவை. உயிரியலை வேதியியல் கண்ணோட்டத்துடன் அணுகுபவர்களுக்கு பயோகெமிஸ்ட்ரி பிரிவைத் தாராளமாகத் தேர்ந்தெடுக்கலாம்.*

*பன்னிரண்டாம் வகுப்பில் அறிவியல் பிரிவு (இயற்பியல், வேதியியல், தாவரவியல் மற்றும் விலங்கியல் பாடங்கள்) அல்லது கணிதம் - உயிரியல் பிரிவு (இயற்பியல், வேதியியல், கணிதம், உயிரியல்) பாடப்பிரிவுகளில் படித்த மாணவர்கள், பட்டப்படிப்பில் பயோகெமிஸ்ட்ரி பாடத்தைத் தேர்ந்தெடுக்கலாம்.*

**வேலை வாய்ப்பு:** பயோகெமிஸ்ட்ரி படிப்பவர்கள், மருத்துவம், வேளாண்மை, பொது சுகாதாரம், தடயவியல், சுற்றுச்சூழல் துறை சார்ந்த தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் ஆய்வுப் பிரிவுகளில் வேலை வாய்ப்புகள் உள்ளன. மருத்துவ உபகரணங்கள் தயாரிப்பு நிறுவனங்கள், பயோடெக்னாலஜி ஆய்வு நிறுவனங்கள், உணவு மற்றும் குளிர்பான தயாரிப்பு நிறுவனங்கள், மருந்து தயாரிப்பு நிறுவனங்கள், வேதியியல் பொருள்கள் உற்பத்தி நிறுவனங்கள், அழகு சாதனத் தயாரிப்பு நிறுவனங்கள் என ஏராளமான நிறுவனங்களில் வாய்ப்புகள் உள்ளன.

IWCM



# 9.5 ஆய்வக வேலை வாய்ப்பை அள்ளித்தரும் மைக்ரோபயாலஜி!




*கல்லூரிப் படிப்பு முடித்தவுடன் வேலையும் கிடைக்க வேண்டும், உயர்படிப்புக்கான வாய்ப்புகளும் நிறைந்த படிப்பாக இருக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் அதிகம். இவர்களுக்கான படிப்பாக இருக்கிறது மைக்ரோபயாலஜி.*

**யார் படிக்கலாம் மைக்ரோபயாலஜி?**

- *பன்னிரண்டாம் வகுப்பில் உயிரியல் பாடம் படித்தவர்கள், தாவரவியல் மற்றும் விலங்கியல் பாடத்தைப் படித்தவர்கள், மைக்ரோபயாலஜி பாடத்தைத் தேர்ந்தெடுத்துப் படிக்கலாம்.*
- *மைக்ரோபயாலஜி படிக்க நினைப்பவர்கள், ஆய்வு நோக்கத்துடனும் நுணுக்கத்துடனும், எதையும் அணுகும் திறனைப் பெற்றிருக்க வேண்டும்.*

### எங்கு படிக்கலாம் மைக்ரோபயாலஜி?

- அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பி.எஸ்சி மைக்ரோபயாலஜி படிப்பு உள்ளது.

### எந்தெந்தத் துறையில் நிபுணத்துவம் பெறலாம்?

இளநிலை பட்டப்படிப்பாக மைக்ரோபயாலஜி படித்தவர்கள், பயோகெமிஸ்ட்ரி, பயோ இன்ஃபர்மேட்டிக்ஸ், பயோ டெக்னாலஜி, என்விரான்மென்டல் மைக்ரோபயாலஜி, ஜெனிட்டிக்ஸ், மெடிக்கல் மைக்ரோபயாலஜி, மாலிக்குலர் பயாலஜி போன்ற பிரிவுகளில் நிபுணத்துவம் பெறலாம். தற்போது மைக்ரோபயாலஜி பட்டப்படிப்பு படிப்பவர்களில் 40 சதவிகிதம் பேருக்கு உடனடி வேலை வாய்ப்பு கிடைக்கிறது. 46 சதவிகிதம் பேர் உயர்படிப்பைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

> **“மைக்ரோபயாலஜி படித்தவர்கள், உள்ளூரில் உள்ள ரத்தப் பரிசோதனை மையத்திலிருந்து பன்னாட்டு நிறுவனங்களில் ஹெல்த்கேர் சயின்டிஸ்ட் வேலை வாய்ப்பு வரை பெறலாம்.”**

**வேலை வாய்ப்பு:** பொருள்களின் தரத்தைச் சோதிக்கவும், சுகாதாரத்தைப் பேணிக் காத்திடவும் மத்திய அரசும் மாநில அரசும் பல்வேறு ஆய்வகங்களை அமைத்துவருகின்றன. இத்தகைய ஆய்வகங்களில் மைக்ரோபயாலஜி படித்தவர்கள் வேலை வாய்ப்பைப் பெறலாம். இந்தியாவில் மருத்துவத் துறையும், உணவுப்பொருள் தயாரிப்புத் துறையும் பெரிய அளவில் வளர்ச்சியடைந்துவருகிறது. இந்த இரண்டு துறைகளிலும் மைக்ரோபயாலஜி படித்தவர்களுக்கு வேலை வாய்ப்புகள் நிறைந்துள்ளன.

மைக்ரோபயாலஜி முதுகலை படித்தால் பயோமெடிக்கல் சயின்டிஸ்ட், பயோடெக்னாலஜிஸ்ட், கிளினிக்கல் ரிசர்ச் அசோசியேட், ஃபுட் டெக்னாலஜிஸ்ட், ஹெல்த்கேர் சயின்டிஸ்ட், மெடிக்கல் கெமிஸ்ட், மைக்ரோபயாலஜிஸ்ட், நானோடெக்னாலஜிஸ்ட், பார்மாகோலஜிஸ்ட், என்விரான்மென்டல் சயின்டிஸ்ட், என்விரான்மென்டல் இன்ஜினீயர், தடய அறிவியலாளர், கடல் ஆராய்ச்சியாளர் என ஏகப்பட்ட பணிகளும், அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் அறிவியல் ஆய்வகங்களில் பல்வேறு பணி வாய்ப்புகளும் காத்திருக்கின்றன. ●



பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

# 9.6 வேகமாக வளர்ந்து வரும் உணவு மற்றும் ஊட்டச்சத்து அறிவியல் துறை!




தற்போது பொதுமக்களிடையே உணவுப்பொருள் குறித்த விழிப்புணர்வு அதிகரித்துவருகிறது. இதனால் வளரும் துறைகளில் ஒன்றாக மாறியிருக்கிறது, உணவு அறிவியல் மற்றும் உணவு தொழில்நுட்பத் துறை.

## என்னென்ன படிப்புகள் உள்ளன?

IWCM

அறிவியல் பிரிவில் ஃபுட் சயின்ஸ் அண்டு நியூட்ரிஷன், ஃபுட் சர்வீஸ் மேனேஜ்மெண்ட், கிளினிக்கல் நியூட்ரிஷன் கோர்ஸ் பல கல்லூரிகளில் உள்ளது. ஒரு சில இன்ஜினீயரிங் கல்லூரிகளில் ஃபுட் டெக்னாலஜி, ஃபுட் சயின்ஸ் அண்டு டெக்னாலஜி, ஃபுட் டெக்னாலஜி அன்ட் மேனேஜ்மென்ட், ஃபுட் புராசஸிங் இன்ஜினீயரிங், பால்பொருள் மேலாண்மை மற்றும் தொழில்நுட்பம், அக்ரிகல்ச்சர் அண்டு ஃபுட் இன்ஜினீயரிங் என்ற படிப்புகளும் உள்ளன.

## என்ன சொல்லிக்கொடுக்கப்படுகிறது?

உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்து (Food Science and Nutrition) படிப்பில் உணவுப்பொருள், அதில் உள்ள ஊட்டச்சத்துகள், உணவுப் பொருள் பரிமாற்ற மேலாண்மை, பொது மருத்துவத்தில் ஊட்டச்சத்தின் பங்களிப்பு, சிகிச்சை உணவு ஆகியவற்றைப் படிக்கின்றனர். ஃபுட் டெக்னாலஜி கோர்ஸில் உணவுப்பொருள்கள் தயாரிப்பில் வேதியியல், மைக்ரோ பயாலஜி முறைகள் மற்றும் தொழில்நுட்ப முறைகள் குறித்தும் படிக்கின்றனர். உணவுத் துறை மருத்துவத் துறையோடு நேரடியாகத் தொடர்பில் இருப்பதால், இத்துறையில் பிரகாசிக்க நல்ல மொழித்திறனையும், உணவுப்பொருள்களில் நிறைந்திருக்கும் ஊட்டச்சத்துகள் குறித்த அறிவையும் வளர்த்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

ஃபுட் சயின்ஸ் கோர்ஸில் சேர, இயற்பியல், வேதியியல், உயிரியல் பாடங்களைப் படித்திருக்க வேண்டும். பி.இ/ பி. டெக் கோர்ஸில் சேர கணிதம், இயற்பியல், வேதியியல் பாடங்கள் படித்தவர்கள் வாய்ப்பைப் பெறலாம்.

**வேலை வாய்ப்பு: உணவு மற்றும் ஊட்டச்சத்து படிப்பைப் படிப்பவர்களுக்கு, அரசுத் துறைகளான சுகாதாரத் துறை, சமூக நலத்துறை, உணவுப் பொருள்கள் துறை, விளையாட்டுத் துறை போன்ற பொதுத் துறைகளில் வேலை வாய்ப்பைப் பெறலாம். இதில், சுகாதாரத் துறையில் ஊட்டச்சத்து ஆலோசகர், திட்ட இயக்குநர், நீரிழிவுப் பிரிவில் ஆலோசகர் எனப் பல பிரிவுகளில் வாய்ப்பு வழங்கப்படுகிறது.**

சமூக நலத்துறையில் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுப் பிரிவில் வேலை வாய்ப்பு கிடைக்கிறது. மத்திய அரசு, அனைவருக்கும் ஊட்டச்சத்து மிக்க உணவு கிடைக்க வழி செய்யும் வகையில் ஊட்டச்சத்து திட்டத்தை அமல்படுத்தியுள்ளது. மத்திய அரசுப் பணியாளர்கள் தேர்வாணையம், உணவு மற்றும் ஊட்டச்சத்து வாரியத்துக்குத் தேவையான பணியாளர்களைத் தேர்வுசெய்கிறது.

சர்வதேச அளவில் குழந்தைகள் மற்றும் பெண்கள் நலனில் பல்வேறு திட்டப்பணிகளை மேற்கொண்டு வரும் யூனிசெஃப் நிறுவனத்திலும், ஐ.நா. சபையின் வளர்ச்சி மேம்பாட்டுப் பிரிவு, உலக உணவுக்கழகம், மெலிண்டா கேட்ஸ் ஃபவுண்டேஷன் போன்ற சர்வதேச தன்னார்வ நிறுவனங்களிலும் வாய்ப்பைப் பெறலாம்.

மேற்கண்ட நிறுவனங்களின் நிதியுதவியுடன், இந்தியாவில் பல்வேறு மாநிலங்களிலும் பல்வேறு திட்டப்பணிகளைத் தன்னார்வ நிறுவனங்கள் செயல்படுத்திவருகின்றன. இத்தகைய நிறுவனங்களிலும் வேலை வாய்ப்பைப் பெறலாம்.

தனியார் மருத்துவமனைகளிலும் உணவு மற்றும் ஊட்டச்சத்து மேலாண்மைப் பிரிவில் நல்ல சம்பளத்தில் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள்.

உணவுப்பொருள் தயாரிப்பு நிறுவனங்களான அமுல், பிரிட்டானிகா, நெஸ்லே, ஐடிசி, பார்லே, ஹிந்துஸ்தான் யூனிலிவர், கேத்ரேஜ் போன்ற பெரிய உணவுப்பொருட்கள் தயாரிப்பு நிறுவனங்களில் உணவுப்பொருள் பகுப்பாளர், உணவுப்பொருள் தயாரிப்பு மேலாளர், மேற்பார்வையாளர், விற்பனை ஆராய்ச்சி மற்றும் திட்டமிடல் பிரிவில் மேலாளர், தர நிர்ணய பிரிவுகளிலும் வேலை வாய்ப்பைப் பெறலாம். ●



பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

# 9.7 இயற்பியல் படிப்பு

### இயற்பியல் பாடத்தை யார் தேர்ந்தெடுக்கலாம்?

*இயற்பியல் பாடத்தைத் தேர்ந்தெடுப்பவர்கள், இயற்பியல் துறை சார்ந்த ஒரு வித ஈர்ப்பும், ஆர்வமும் இருக்க வேண்டும். பகுப்பாய்வுத் திறனும், ஏன், எதற்கு என்று கேட்டறிபவர்களாகவும் இருக்க வேண்டும். எப்படி காற்று வீசுகிறது? ஏன் ஐஸ் கரைகிறது? ஏன் இயற்கையில் இப்படி நடக்கிறது என்று கேட்டு, கேள்விக்குப் பதிலைத் தேடுபவர்களுக்கு இயற்பியல் நிச்சயம் பயனுள்ளதாக இருக்கும்.*


**வேலை வாய்ப்பு:** இயற்பியல் பட்டப்படிப்பு முடித்தவர்கள், அணுமின்சக்தி துறை (Atomic Research Centre), பாதுகாப்புத் துறை (Defence Research and Development Organization), இஸ்ரோ, நேஷனல் தெர்மல் பவர் கார்ப்பரேஷன், ஆயில் அண்ட் நேச்சுரல் காஸ் கார்ப்பரேஷன், பாரத் ஹெவி எலெக்ட்ரிக்கல் லிமிடேட் போன்ற நிறுவனங்களில் இளநிலை ஆய்வு உதவியாளர் (JRA) பணியைப் பெறலாம்.

**உயர்படிப்புக்கான வாய்ப்புகள்:** *அஸ்ட்ரோபிஸிக்ஸ், அஸ்ட்ரோனமி, பயோபிஸிக்ஸ், ஃப்ளூட் பிஸிக்ஸ், மாலிக்குலர் பிஸிக்ஸ், நியூக்ளியர் பிஸிக்ஸ், ஆப்டிக்கல் பிஸிக்ஸ், ஜியோ பிஸிக்ஸ், ஸ்பேஸ் சயின்ஸ், நானோடெக்னாலஜி, மெட்டீரியல் சயின்ஸ், மெட்டீரியாலஜி எனப் பல சிறப்புப் பிரிவுகள் இருக்கின்றன. சிறப்புத் துறைகளாக நியூக்ளியர் பிஸிக்ஸ், தியரிட்டிக்கல் பிஸிக்ஸ், பயோ பிஸிக்ஸ் போன்றவற்றை சென்னைப் பல்கலைக்கழகத்தில் படிக்கலாம்.*

*தியரிட்டிக்கல் பிஸிக்ஸ், இண்டியன் இன்ஸ்டியூட் ஆஃப் மேத்தமெட்டிக்கிஸ்ஸில் மேத்தமேட்டிகல் சயின்ஸ்(IMSc) படிக்கலாம். இதைப் படிப்பவர்கள் கம்ப்யூட்டேஷன் துறையிலும், பெரும் ஆராய்ச்சிப் பிரிவுகளிலும் வேலை வாய்ப்பைப் பெறலாம். பயோ பிஸிக்ஸ் படிப்பவர்கள், மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவுகளில் வேலை வாய்ப்பைப் பெறலாம். அண்ணா பல்கலைக்கழகத்தில் மெடிக்கல் பிஸிக்ஸ், மெட்டீரியல்ஸ் சயின்ஸ் போன்றவை படிக்கலாம். மெடிக்கல் பிஸிக்ஸ் படிப்பவர்கள், மருத்துவமனைகளில் ரேடியோ சேஃப்டி ஆபீஸர் பணியைப் பெறலாம். மெட்டீரியல்ஸ் சயின்ஸ் படிப்பவர்கள், நேஷனல் லேபாரட்டரீஸ் போன்றவற்றில் ஆராய்ச்சி வாய்ப்பைப் பெறலாம். MSc நியுக்ளியர் பிஸிக்ஸ் படித்தவர்கள் அணுசக்தித் துறையில் வேலை வாய்ப்புப் பெறலாம்.* ●

> “அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பிஎஸ்சி இயற்பியல் படிக்க, கட்டணம் 1800 ரூபாய் மட்டுமே. ஆக, நல்ல கல்லூரியைத் தேர்ந்தெடுத்துச் சேர்வது சிறப்பு.”

பொருளடக்க பக்கத்துக்கு செல்ல




IWOM

## 9.8 வேதியியல் துறை

ஒரு பொருளில் என்னென்ன இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளவும், அதைப் பகுப்பாய்வு செய்யவும், எதிலிருந்து எந்தப் பொருளைத் தயாரிக்க முடியும் என்ற, ஆர்வம் உள்ளவர்கள், வேதியியல் துறையில் தாராளமாகச் சேர்ந்து படிக்கலாம்.

### என்ன சொல்லிக்கொடுக்கப்படுகிறது?

- வேதியியல் துறை அடிப்படையில் மூன்று முக்கியப் பிரிவுகள் இருக்கின்றன.
- உயிர்ம வேதியியல் குறித்துப் படிப்பதற்கு ஆர்கானிக் வேதியியல், அதாவது, கரிம வேதியியல் பிரிவு. இதில், உயிர் பொருட்களின் மூலக்கூறு எவ்வாறு இருக்கிறது என்பது குறித்துப் படிப்பார்கள்.
- உயிரற்ற பொருட்களின் மூலக்கூறு அமைப்பு குறித்துப் படிப்பதற்கு இன்ஆர்கானிக் கெமிஸ்ட்ரி அதாவது, கனிம வேதியியல் என்று பெயர்.
- பொருள்களின் இயல்புநிலை அதன் மாற்றம் பற்றி படிப்பது பிஸிக்கல் கெமிஸ்ட்ரி (இயற்பியல் வேதியியல்).



பொருளடக்க பக்கத்துக்கு செல்ல



**உயர்படிப்புக்கான வாய்ப்புகள்:**

*பி.எஸ்சி., படித்து முடித்தவுடன் அனலிட்டிக்கல் கெமிஸ்ட்ரி, பயோ கெமிஸ்ட்ரி, இன்ஆர்கானிக் கெமிஸ்ட்ரி, மெட்டிரியல்ஸ் கெமிஸ்ட்ரி, நியூக்ளியர் கெமிஸ்ட்ரி, ஆர்கானிக் கெமிஸ்ட்ரி, பிஸிக்கல் கெமிஸ்ட்ரி, தியரிட்டிக்கல் கெமிஸ்ட்ரிஎன்றபிரிவுகளும்கெமிக்கல்என்ஜினீயரிங், பார்மாசூட்டிக்கல் கெமிஸ்ட்ரி, பயோ கெமிக்கல் போன்ற பிரிவுகளிலும் சேர்ந்து படிக்கலாம். பாலிமர், எனர்ஜி, மெட்டீரியல் சயின்ஸ், நானோ சயின்ஸ் போன்ற பிரிவுகளிலும் நிபுணத்துவம் பெறலாம்.*

*வேதியியல் முதுநிலை படிப்பு படிக்கத் தலைசிறந்த கல்வி நிறுவனங்களான இண்டியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் சயின்ஸ், இண்டியன் இன்ஸ்டியூட் ஆஃப் டெக்னாலஜி, என்ஐடி, சென்னைப் பல்கலைக்கழகம் போன்ற கல்வி நிறுவனங்களில் எம்எஸ்சி கெமிஸ்ட்ரி படிக்கலாம். இதைத் தவிர, அனைத்து பல்கலைக்கழகங்களிலும் முதுநிலை படிப்புகளையும், ஆராய்ச்சிப் படிப்புகளையும் மேற்கொள்ளலாம்.*

IWCM

**வேலை வாய்ப்பு:** இளநிலை பட்டப்படிப்பு படிப்பவர்களுக்கு, அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் இளநிலை ஆய்வாளர் பணி (சயின்டிபிக் அசிஸ்டன்ட்) கிடைக்கும். பார்மாசூட்டிக்கல், பெட்ரோலியம், நியூக்கிளியர் துறையிலும், கெமிக்கல் மற்றும் என்விரான்மென்ட் ஆய்வகங்களிலும் வேலை வாய்ப்பைப் பெறலாம்.

### உதவித்தொகையுடன் உயர்கல்வி

முதுகலை கல்விக்குப் பிறகு பிளஸ் 2 வகுப்பில் அறிவியல் பாடங்களைப் படித்தவர்கள் ஆராய்ச்சியில் ஆர்வம் இருந்தால் மத்திய அரசுக் கல்வி உதவித்தொகை வழங்கிப் படிக்க வைக்கிறது. முதல் மூன்று வருடங்களுக்கு மாதம் ஐயாயிரம் ரூபாயும், அதன் பின்பு இரண்டு வருடங்களுக்கு மாதம் ஏழாயிரம் ரூபாயும் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. M.S. என்ற ஆராய்ச்சி படிப்பை மத்திய அரசுக் கல்வி நிறுவனங்களில் படிக்கலாம்.

மேலும் விவரங்களுக்கு: http://www.iiseradmission.in/

## 9.9 தாவரவியல் துறை



பிளஸ் டூ முடித்தவுடன் பி.எஸ்சி., தாவரவியல் பாடத்தைத் தேர்ந்தெடுக்கலாம். தாவரத்தோடு இணைந்த வாழ்க்கைதான் மனிதனுடைய வாழ்க்கை. தாவரத்தின் மூலமாகவே நமக்கு உயிர், காற்று, உணவு, உடை, உறைவிடம் என எல்லாம் கிடைக்கிறது.

### யார் படிக்கலாம்?

இயற்கை, மரபியல் தாவர வகைப்பாட்டில், இயற்கைச் சூழல் பாதுகாப்பு, மரபு அணு மாற்றம் என ஏதேனும் ஒரு பிரிவில் ஆர்வம் இருந்தால், நிச்சயம் தாவரவியல் படிக்கலாம்.

### சிறப்பு பிரிவுகள்

**இளநிலை பட்டப்படிப்பில் சில சிறப்பு பிரிவுகள் உள்ளன.**

- தாவரவியல்
- பிளான்ட் பயாலஜி
- பிளான்ட் பயோடெக்னாலஜி
- ஹெர்பல் சயின்ஸ்

IWCM

**உயர்படிப்பு:** இளநிலை மூன்றாண்டு படித்து முடித்தவுடன் எம்.எஸ்சி. தாவரவியல், பிளான்ட் சயின்ஸ், அப்ளைடு பிளான்ட் சயின்ஸ் கோர்ஸில் சேரலாம். இண்டியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டெக்னாலஜி, இண்டியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் சயின்ஸ் போன்றவற்றிலும் பயோ டெக்னாலஜி, பயோ இன்ஃபர்மெட்டிக்ஸ், பயோகெமிஸ்ட்ரி, மைக்ரோபயலாஜி போன்ற பிரிவுகளில் முதுநிலை கல்வி பெறலாம்.

**வேலை வாய்ப்பு:** ஹெர்பல் சயின்ஸ் என்ற பிரிவு நல்ல வரவேற்போடு வளர்ச்சி பெற்று வருகிறது. இந்தப் பிரிவு சார்ந்து 700-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் இந்தியாவில் இயங்கிவருகின்றன. இவை இந்தியாவில் தாவரம் சார்ந்த மூலிகைகளைத் தயாரித்தும், ஏற்றுமதி செய்தும் வருகின்றன. இந்த நிறுவனங்களில் தாவரவியல் படித்தவர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பு கிடைத்து வருகிறது.

இந்திய வனத்துறை பணிக்கு தாவரவியல் படித்தவர்கள் தேர்வு எழுதி எளிதில் தேர்வாகலாம். இந்தத் தேர்வு குறித்து பலரும் அறியாமல் இருக்கிறார்கள். ●



பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

# 9.10 விலங்கியல்

**பயாலஜி, பயோடெக்னாலஜி போன்ற பிரிவுகளின் முன்னோடி விலங்கியல் துறை தான்.**

### யார் படிக்கலாம்?

உலகத்தில் உள்ள உயிரினங்களின் மீது அன்பும், ஆர்வமும் உள்ளவர்களுக்கு விலங்கியல் துறை படிப்பு சிறப்பு மிக்கது. விலங்கியல் படிப்பில் வரைதிறனும், ஆராய்ச்சி மனப்பான்மையும், வரைமுறையுடன் கூடிய அணுகுமுறையும் இருந்தால் சிறப்படைய முடியும்.

### என்ன சொல்லிக்கொடுக்கப்படுகிறது?

உலகம் முழுவதும் பரவியுள்ள விலங்கினத்தைக் குறித்தும், அதன் பயன்பாடு மற்றும் பாதுகாப்பு குறித்தும், உத்திகள் குறித்தும் படிக்கலாம். விலங்கியல் படிப்பவர்கள் இன்று வேகமாக வளர்ந்து வரும் சுற்றுச்சூழல், மருந்தியல், பூச்சியியல் சார்ந்த விவசாயம் (Insect plant interaction) போன்ற பிரிவுகள் குறித்தும் படிக்கிறார்கள்.


**வேலை வாய்ப்பு:** கொல்கத்தாவை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் Zoological Survey of India அரசு நிறுவனத்தில் வேலை வாய்ப்பைப் பெறலாம். இதற்கு 15 மண்டல அலுவலகங்கள் உள்ளன. இரண்டு மண்டல அலுவலகங்கள் தமிழ்நாட்டில் இயங்குகின்றன. இங்கு, கள ஆய்வுப் பணிக்கு நிறைய பேர் தேவைப்படுகிறார்கள். அருங்காட்சியகம், வன உயிரினப் பூங்கா, தேசிய பூங்காக்களிலும் விலங்கியல் படித்தவர்கள் அரசு வேலைக்குச் சேரலாம்.

சென்னையில் தலைமையிடத்தைக் கொண்டுள்ள பயோடைவர்சிட்டி அத்தாரிட்டி ஆஃப் இந்தியா அமைப்பிலும் விலங்கியல் படித்தவர்களுக்கும், தாவரவியல் பட்டப்படிப்பு படித்தவர்களுக்கும் வேலை வாய்ப்பு உள்ளது. விலங்கியல் படிப்பவர்கள், துணை படிப்புகளாகத் தாவரவியல், வேதியியல் படிப்பதால் உணவு பதப்படுத்துதல், விவசாயம், பால் மற்றும் கோழிப் பண்ணை, தோட்டக்கலை சார்ந்த வேலை வாய்ப்புகளையும் பெறலாம்.

### உயர்கல்விக்கான வாய்ப்புகள்

பிஎஸ்சி விலங்கியல் படித்தவர்கள், முதுகலை மற்றும் ஆராய்ச்சிப் படிப்பை Indian Institute of Science சிலும் படிக்கலாம். பயோடெக்னாலஜி, பயோஇன்ஃபர்மெட்டிக்ஸ், ஹியூமன் ஜெனட்டிக்ஸ், என்டோகிரானாலஜி, அப்ளைடு ஜெனட்டிக்ஸ், மைக்ரோபயாலஜி போன்ற பிரிவுகளில் சேர்ந்து படிக்கலாம். இந்தப் படிப்புகள் அனைத்தும் சென்னைப் பல்கலைக்கழகத்திலேயே இருக்கின்றன. •

# 9.11 நீங்களும் ஆகலாம் மேத்தமேட்டிஷியன்!




**பொ**றியியல் படிப்புக்கு அடுத்துக் குறைந்த செலவில் என்ன படிக்கலாம் என்று யோசிப்பவர்களுக்கு கை கொடுக்க காத்திருக்கிறது கணிதம். தகவல் தொழில் நுட்பத்துறையில் கணிதம் பாடத்தில் பட்டம் பெற்றவர்களும் எளிதில் நுழையலாம்.

***யார் படிக்கலாம்:*** கணிதப்பாடம் நுட்பமானது. கணிதத்தில் ஆர்வமும், நுட்பமான அறிவும் இருந்தால் கணிதப்பாடத்தை தேர்ந்தெடுக்கலாம். பொதுவாக பி.எஸ்சி கணிதம் அனைத்து அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் கல்லூரிகளில் உள்ளது. இங்குக் கட்டணமும் மிகவும் குறைவு.

**வேலை வாய்ப்பு: பட்டப்படிப்பில் சிறப்பாகப் படித்து எம்.எஸ்சி., பி.ஹெச்டி படித்தால் ஆசிரியர் பணி பெறலாம். இஸ்ரோ, பாதுகாப்புத் துறை ஆராய்ச்சி மையம் மற்றும் நேஷனல் ஏரோனாட்டிக்கல் லிமிடெட் போன்ற நிறுவனங்களில் கணிதப்பாடத்தை படித்திருப்பவர்கள் வேலை வாய்ப்பினை பெறலாம். கணிதம் படித்தவர்கள் வங்கி போட்டி தேர்வுகளிலும், இதர தேர்வுகளிலும் எளிதில் வெற்றி பெறலாம். கணக்கு படித்தவர்கள் ஐடி துறையில் எளிதில் நுழைய முடியும்.**

IWCM

***எங்குப் படிக்கலாம்:*** கணிதப்பாடத்தை இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் சயின்ஸ் எஜுகேஷன் அண்ட் ரிசர்ச் (Indian Institute of Science Education and Research) என்ற மத்திய அரசின் கல்வி நிறுவனத்தில் சேரலாம். இந்த நிறுவனங்கள் புனே, மொகாலி, கொல்கத்தா, திருவனந்தபுரம், போபால், திருப்பதி, புவனேஸ்வரில் செயல்படுகின்றன. மத்திய அரசின் மத்திய பல்கலைக்கழகங்களில் சேரலாம். இந்த பல்கலைக்கழகங்களில் ஐந்து வருட இன்ட்கிரேட்டட் கோர்ஸ்கள் இருக்கின்றன. சென்னை மேத்தமெட்டிக்கல் இன்ஸ்டிட்யூட்டிலும் சேரலாம் இங்கு பிஎஸ்சி சேர்பவர்களுக்கு மாதாந்திர உதவித்தொகை வழங்கப்படுகிறது..

முதுநிலை பட்டப்படிப்பைச் சென்னை தரமணியில் உள்ள புகழ்பெற்ற 'இன்ஸ்டிட்யூட் ஆஃப் மேத்தமேட்டிகல் சயின்ஸஸ்' கல்வி நிறுவனத்திலும், மும்பையில் உள்ள 'டாடா இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஃபண்டமென்டல் ரிசர்ச்' கல்வி நிறுவனத்திலும், அலகாபாத்தில் 'ஹரீஷ் சந்திரா ரிசர்ச் இன்ஸ்டிசட்யூடி'லும் படிக்கலாம். இங்கு சேர்பவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் பெருமளவில் உதவித்தொகை வழங்கப்படுகிறது.

| |
|---|
| **சென்னை மேத்தமெட்டிக்கல் இன்ஸ்டிட்யூட் குறித்து மேலும் விவரங்களுக்கு: https://www.cmi.ac.in/admissions/** |
| **'இன்ஸ்டிட்யூட் ஆஃப் மேத்தமேட்டிகல் சயின்ஸஸ்' குறித்த மேலும் விவரங்களுக்கு https://www.imsc.res.in/** |

# 10. வணிகவியல் படிப்புகள்




IWCM

### 10.1 பி.காம்., பி.பி.ஏ. படிப்பில் என்ன சொல்லிக்கொடுக்கப்படுகிறது?

கலைப் பிரிவைத் தேர்ந்தெடுத்து படித்தவர்கள் (வணிகவியல், பொருளியல், வரலாறு) உயர்கல்விக்குச் செல்லும்போது பி.காம் பிரிவைத்தான் அதிகளவில் தேர்ந்தெடுக்கின்றனர். இதனால் பல கல்லூரிகள் பி.காம்., படிப்பைப் பல விதமான ஸ்பெஷலைடு படிப்புகளாக மாற்றியுள்ளன.

பி.காம் படிப்பில் அக்கவுன்டிங், மார்க்கெட்டிங், ஆடிட்டிங், டேக்ஸேஷன், மேனேஜ்மென்ட் அக்கவுன்டிங், ஃபைனான்ஸியல் அக்கவுன்டிங், பிஸினஸ் லா உள்ளிட்ட பல்வேறு பாடங்கள் உள்ளன.

### பி.காம் சிறப்பு படிப்புகள்

- கம்ப்யூட்டர் பயிற்சியோடு இணைந்த பி.காம். (கணினி அறிவியல்) - BCom (CA)
- பி.காம். (தகவல் தொழில்நுட்பம் ) BCom (IT)
- வங்கித்துறை சார்ந்த படிப்புகளை வழங்கும் பி.காம். (வங்கி மேலாண்மை) BCom (Banking)



**த**ற்போது, வங்கிப் பணிகளுக்கு அந்தந்த வங்கிகளும் தனிப்பட்ட முறையில் தேர்வை நடத்துகின்றன. பல வங்கிகள் ஒன்றிணைந்தும் தேர்வு நடத்தி, கலந்தாய்வு மூலம் ஆட்களைத் தேர்வு செய்கிறார்கள். ஆகையால், முதலாம் ஆண்டு படிக்கும்போது வங்கி நடத்தும் போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகலாம்.

பி.காம் படித்தவர்களுக்கு ஆடிட்டிங், தகவல் தொடர்பியல், பி.பி.ஓ., கே.பி.ஓ, வங்கித் துறைகள் போன்ற பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்புகள் உள்ளன.

- *மார்க்கெட்டிங் பிரிவில் நிபுணத்துவம் பெற BCom (Marketing)*
- *நிதி மேலாண்மையில் சிறப்பு பெற பி.காம். (பைனான்சியல் மேனேஜ்மெண்ட்)*
- *பி.காம். (விளம்பரவியல்) என ஏராளமான பி.காம். படிப்புகள் உள்ளன.*

**வேலை வாய்ப்புகள்:** அரசு வேலை வாய்ப்புக்கு பி.காம் (பொது) படித்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஸ்பெஷலைடு படிப்பும் பி.காம் (பொது) படிப்புக்கு இணையானதாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கருதி வேலை வாய்ப்பை அரசு துறைகளில் அளிக்கிறது.

*மற்றபடி, பி.காம், பி.பி.ஏ., எந்தப் படிப்பைப் படித்தாலும், வங்கிகள், காப்பீடு, நிதி, தொழில்துறை நிறுவனங்களில்வேலைவாய்ப்புகள்தாராளமாகஉள்ளன.*

*டேட்டா அனலிட்டிக்ஸ், பைனான்ஷியல் அக்கவுன்டிங் சாஃப்ட்வேர் குறித்தும் (டாலி) படித்தால் ஐடிநிறுவனங்களிலும், வங்கித் துறையிலும் வேலை வாய்ப்பைப் பெறலாம்.*

*பி.காம் படிக்கும்போது வங்கியில் பயன்படுத்தும் அத்தனை சொற்களையும் கற்றுக்கொள்ளலாம். ஆகையால், பன்னாட்டு நிறுவனங்கள் உள் நாட்டு நிறுவனங்கள் மற்றும் அனைத்து பொதுத்துறை மற்றும் தனியார் நிறுவனங்களில் உள்ள கணக்கியல் மற்றும் நிதித் துறைகளில் வேலை வாய்ப்பைப் பெற முடியும்.*



பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

# 10.2 உதவித்தொகையுடன் சி.ஏ. (CA) படிக்கலாம்!




**வ**ணிகவியல் சார்ந்த தொழிற்படிப்புகளில் ஒன்றாக உள்ளது சி.ஏ (சார்ட்டர்ட் அக்கவுன்டன்ட்) சி.ஏ படிப்புக்கு மொத்த செலவே 50,000 ரூபாய்க்குள் அடங்கி விடும். மேலும், சி.ஏ படிப்பவர்களுக்கு மாதந்தோறும் உதவித்தொகையும் வழங்கப்படுகிறது.

### சி.ஏ சேர எந்த நிபந்தனையும் கிடையாது

சி.ஏ படிப்பில் சேர வயது வரம்பு, பன்னிரண்டாம் வகுப்பில் என்ன பாடங்களைப் படித்தீர்கள், எவ்வளவு மதிப்பெண் பெற்றீர்கள் என்ற எந்த நிபந்தனைகளும் கிடையாது. பிளஸ் டூ முடித்த யார் வேண்டுமானாலும் இதில் சேரலாம்.

பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

### பத்தாம் வகுப்பு முடித்தவர்கள் பதிவு செய்து கொள்ளலாம்

*சி.ஏ., வில் சேர விரும்பும் அனைவரும் நுழைவுத் தேர்வு எழுத வேண்டும். வருடத்தில் ஜூன் மற்றும் நவம்பர் மாதத்தில் நுழைவுத்தேர்வு நடத்துகிறார்கள். இந்தத் தேர்வுக்கு 10 ஆம் வகுப்பு முடித்தவர்கள் கூடத் தங்களது பெயரைப் பதிவு செய்துகொள்ளலாம். இவ்வாறு பதிவு செய்யும்போது நுழைவுத் தேர்வுக்குத் தேவையான புத்தகங்களை வழங்கிவிடுவார்கள்.*

### ஆடிட்டர் அலுவலகத்தில் பயிற்சி அவசியம்

*முதல் நிலை தேர்வில் ஏதாவது ஒரு பிரிவில் தேர்ச்சி பெற்றவர்கள், இந்தியாவில் உள்ள ஏதாவது ஒரு ஆடிட்டரிடம் கட்டாயமாக மூன்றரை ஆண்டுகள் செயல்முறை பயிற்சி பெற வேண்டும். இதைத் தவிர, 100 மணி நேர கம்ப்யூட்டர் பயிற்சியிலும் கண்டிப்பாகக் கலந்துக்கொள்ள வேண்டும்.*

### முதல்நிலைத் தேர்வும், முதன்மைத் தேர்வும்

*ஆடிட்டரிடம் செயல்முறைப் பயிற்சியில் சேர்ந்து 18 மாதங்கள் முடிவடையும்போது, முதல்நிலைத் தேர்வு எழுத வேண்டும். இதில் தேர்வு பெற்றால்தான் இறுதித் தேர்வு எழுத முடியும். இறுதித் தேர்வு, செயல்முறைப் பயிற்சியின் இரண்டரை ஆண்டுகள் முடியும்போது நடக்கும். இதற்கு முன்னதாக இன்ஸ்டிட்யூட் நடத்தும் மேலாண்மை பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள வேண்டும்.*

*நான்கு வருடம் படித்து சி.ஏ. தேர்வானால் ஒரு சாஃப்ட்வேர் இன்ஜினீயரைவிட அதிகமாகச் சம்பாதிக்கலாம்.*

### சி.ஏ தேர்வு அவ்வளவு எளிதானது அல்ல!

**நான்கு வருடங்கள் படித்து சி.ஏ தேர்வானால், ஒரு சாஃப்ட்வேர் இன்ஜினீயரைவிட அதிகமாகச் சம்பாதிக்கலாம். சி.ஏ படிப்புக்கும், தேர்வுக்கும் அதிக கவனம் செலுத்த வேண்டும். சி.ஏ தேர்வு கொஞ்சம் கடினமான விஷயம்தான் என்றாலும் முழுக் கவனத்தையும் செலுத்திப் படிக்க வேண்டும். அப்போதுதான் வெற்றி பெற்று ஆடிட்டர் ஆக மாற முடியும் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.**

சி.ஏ படிப்புக்கான மண்டல அலுவலகம், சென்னை
நுங்கம்பாக்கத்தில் உள்ளது.

122, Mahatma Gandhi Road,
Post Box No. 3314,
Nungambakkam, CHENNAI - 600 034
Phone.. 044- 3989 3989, 3021 0300
http://www.sirc-icai.org/

# 10.3 காஸ்ட் அண்ட் வொர்க்ஸ் அக்கவுன்டன்ட் படிப்பு




சி.ஏ. படிப்புக்கு அடுத்த இடத்தில் உள்ளது காஸ்ட் அண்ட் வொர்க்ஸ் அக்கவுன்டன்ட் படிப்பு.

### என்ன சொல்லிக்கொடுக்கப்படுகிறது?

*தொழிற்சாலையில் ஒரு பொருளைத் தயாரிக்கும்போது எவ்வளவு செலவாகிறது என்பதைக் கணக்கிட்டு, அதன் அடிப்படையில் அந்தப் பொருளின் விலையை நிர்ணயிப்பது, தொழிற்சாலையை வெற்றிகரமாக நிர்வகிப்பது என்பது போன்றவை கற்றுக்கொடுக்கப் படுகிறது.*

IWCM

### யார் விண்ணப்பிக்கலாம்?

*12-ஆம் வகுப்பு படித்தவர்கள் இந்தக் கோர்ஸில் சேர விண்ணப்பிக்கலாம். ஜூன், டிசம்பர் மாதங்களில் இதற்கான நுழைவுத் தேர்வு நடக்கும். வயது வரம்பு, மதிப்பெண் தகுதி என்று எதுவும் கிடையாது. எந்தப் பட்டப்படிப்பு படித்திருந்தாலும் நேரடியாக இன்டர் தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம். மொத்தப் படிப்புக் காலம் மூன்றரை ஆண்டுகள்.*

**வேலை வாய்ப்பு:** இன்டர் மற்றும் ஃபைனல் தேர்வில் வெற்றி பெற்றால் பன்னாட்டு நிதி நிறுவனங்களிலும், வங்கிகளிலும், அதிக முதலீட்டுடன் இயங்கும் தொழிற்சாலைகளிலும், தொழில் நிறுவனங்களிலும் வேலை வாய்ப்பைப் பெறலாம்.

### எங்கு விண்ணப்பிப்பது?

*ஆன்லைன் வழியாகவே விண்ணப்பிக்கலாம். ஐ.சி.டபிள்யூ.ஏ.ஐ. (ICWAI) -மண்டல அலுவலகம் சென்னை எழும்பூரில் உள்ளது.*

சென்னை அலுவலக முகவரி
CMA Bhawan, 4, Montieth Lane, Egmore, Chennai - 600 008
Ph : 044-28554443,28554326
Website: http://sircoficmai.in/

# 10.4 கம்பெனி செக்ரெட்டரிஷிப் படித்து கம்பெனிகளுக்கு ஆலோசகராகலாம்!




பத்து கோடி ரூபாய் மற்றும் அதற்கு மேல் பங்கு முதலீடு கொண்டிருக்கும் கம்பெனிகள் மற்றும் பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட அனைத்து நிறுவனங்களும் கட்டாயம் கம்பெனி செக்ரெட்டரிஷிப் பணிக்குப் பதிவு பெற்றவர்களை நியமனம் செய்ய வேண்டும் என்பது விதிமுறைகளில் ஒன்றாக உள்ளது.

### யார் படிக்கலாம்?

கம்பெனி செக்ரெட்டரியாக வேண்டும் என்று ஆர்வம் உள்ளவர்கள், பிளஸ் டூ படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம். இதற்கும் வயது வரம்பு, பன்னிரண்டாம் வகுப்பில் பெற்றுள்ள மதிப்பெண், எந்தப் பிரிவில் படித்தீர்கள் என்பதை எல்லாம் பார்ப்பதில்லை.

ஃபவுண்டேஷன் கோர்ஸ் விண்ணப்பித்து எட்டு மாதத்தில் நுழைவுத் தேர்வு எழுத வேண்டும். இதற்கு அடுத்து எக்ஸிகியூட்டிவ் புரோகிராம் படிப்பிற்குத் தேர்வு எழுத வேண்டும். இந்தத் தேர்வில் வெற்றி பெறுபவர்கள் புரஃபஷனல் புரோகிராம் தேர்வு எழுத வேண்டும். எக்ஸிகியூட்டிவ் தேர்வில் தேர்ச்சி பெற்ற உடனோ அல்லது புரஃபஷனல் தேர்வு எழுதிய உடனோ, 15 மாதங்களுக்கு



பொருளடக்க பக்கத்துக்கு செல்ல




அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் சேர்ந்து பயிற்சி பெற வேண்டும். பயிற்சி பெறும்போது ஒவ்வொரு மாதமும் 5-12 ஆயிரம் ரூபாய் வரை உதவித்தொகை வழங்கப்படும்.

### இதற்கான அலுவலகம் எங்குள்ளது?

இன்ஸ்டிட்யூட் ஆஃப் கம்பெனி செக்ரெட்டரீஸ் மண்டல அலுவலகம் சென்னை நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ளது.

The Institute of Company Secretaries of India
Southern India Regional Council,
ICSI SIRC House No.9, Wheat Crofts Road,
Nungambakkam, Chennai 600 034
Phone: 044-28279898; 28268685
Email:siro@ icsi.edu;
Website: www.icsi.edu/siro/, https://www.icsi.edu/siro/home/

பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

# 11. அரசு வேலையில் சேர விரும்புகிறவர்களுக்கு ஏற்ற ஆர்ட்ஸ் படிப்புகள்




*பிள்ளையை என்ன கோர்ஸில் சேர்க்க இருக்கிறீர்கள் என்று கேட்கும்போது பி.ஏ என்றால் எதிரில் உள்ளவர்களின் ஏளனப் பார்வைக்கு ஆளாகலாம். ஆனால், திட்டமிட்டு பி.ஏ படிப்பைத் தேர்ந்தெடுத்தால், மிகப்பெரிய அளவில் வெற்றி வாகை சூடலாம் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.*

அரசுத் துறைகளில் வேலை வாய்ப்பைப் பெற வேண்டும் என்று திட்டமிடுபவர்களுக்கு ஆர்ட்ஸ் குரூப்பைத் தேர்ந்தெடுத்துச் சேரலாம். கலை பிரிவைத் தேர்ந்தெடுத்தால் போட்டி குறைவு மட்டுமல்ல, கல்விக் கட்டணமும் மிகவும் குறைவு. அரசுக் கல்லூரியில் சேர்பவர், மூன்று ஆண்டுகளுக்கும் சேர்த்தே 10,000 ரூபாய்க்குள் கல்லூரிப் படிப்பை முடித்துவிடலாம்.



பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

### யார் ஆர்ட்ஸ் குரூப் படிப்பைத் தேர்ந்தெடுக்கலாம்?

மொழியின் மீதும், இலக்கியத்தின் மீதும், கலைகளின் மீதும், எழுத்தின் மீதும், நாட்டின் வரலாறு, பொருளாதாரம், அரசியல் போன்றவற்றின் மீதும் ஆர்வம் உள்ளவர்கள், ஆர்ட்ஸ் படிப்பைத் தேர்ந்தெடுக்கலாம்.

### என்னென்ன படிப்புகள் உள்ளன?

ஆர்ட்ஸ் குரூப்பில் பி.ஏ., தமிழ் இலக்கியம், ஆங்கில இலக்கியம், எக்கனாமிக்ஸ், வரலாறு, அரசியல் அறிவியல், சமூகவியல், உளவியல், தொல்லியல், புவியியல், சமூகப் பணி என ஏராளமான படிப்புகள் உள்ளன.

**வேலை வாய்ப்பு:** மத்திய அரசுப் பணிகள், வங்கிகள், காவல் துறை, எல்லைப் படை, இராணுவம், ரயில்வே எனப் பல அரசுப் பணிகளில் சேர ஏதேனும் ஒரு பட்டப்படிப்பே போதும் என்பதால் கலை பிரிவில் ஏதேனும் ஒரு படிப்பைப் படிப்பவர்கள், போட்டித்தேர்வுகளின் வழியே எளிதில் அரசு வேலையைப் பெறலாம்.

போட்டித் தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற்று வேலை வாய்ப்பில் இடம்பிடிக்க, கல்லூரி படிக்கும்போது போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிக்கு அதிக நேரத்தைச் செலவிடலாம்.

IWCM

### உயர்கல்விக்கான வாய்ப்புகள்

உயர்கல்வி செல்ல நினைப்பவர்களுக்கும் ஆர்ட்ஸ் கோர்ஸ் அற்புதமான தேர்வு என்றே சொல்லலாம். உதாரணத்துக்கு, இந்தியாவில் புகழ்பெற்ற இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் மேனேஜ்மென்ட் கல்வி நிறுவனத்தில் சேர ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு படித்திருந்தால் போதும் என்பதால் நிர்வாகவியல் துறையிலும் கலைப் படிப்பைப் படித்தவர்கள் சேரலாம்.

| மேலும் விவரங்களுக்கு |
| --- |
| https://www.iima.ac.in/web/pgp/apply/ |
| http://hsee.iitm.ac.in/ |

பி.எட் கோர்ஸ் முடித்து ஆசிரியர் தகுதித் தேர்வு எழுதி ஆசிரியர் பணியைப் பெறலாம்.

### சிறப்புக் கல்வி நிறுவனங்கள்!

மொழித் துறையில் சாதனை புரிய வேண்டும் என்பவர்களுக்கு மத்திய மொழியியல் துறை கல்வி நிறுவனம் மைசூரில் http://www.ciil.org/ltp.aspx அமைந்துள்ளது.

ஆங்கிலத் துறையில் அல்லது வெளிநாட்டு மொழியில் புலமை பெற வேண்டும் என்பவர்களுக்கு ஹைதராபாத்தில் உள்ள ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழி பல்கலைக்கழகத்தில் [https://www.efluniversity.ac.in/](https://www.efluniversity.ac.in/) சேரலாம்.


பொருளியல் துறையைத் தேர்ந்தெடுப்பவர்களுக்கு இந்தியாவில் மிகவும் புகழ்பெற்ற மெட்ராஸ் ஸ்கூல் ஆஃப் எக்கனாமிக்ஸ் கல்வி நிறுவனம் [https://www.mse.ac.in/](https://www.mse.ac.in/) சென்னையில் உள்ளது. இந்தக் கல்வி நிறுவனம், திருவாரூரில் உள்ள மத்திய பல்கலைக்கழகத்துடன் [https://cutn.ac.in/](https://cutn.ac.in/) இணைந்து இளநிலை பட்டப்படிப்பை வழங்குகிறது.

நுண் பிரிவுகளில் ஏராளமான படிப்புகள் உள்ளன. உதாரணத்துக்கு, வண்ணம் தீட்டுதல், சிற்பம் செய்தல், இசை, நடனம், புகைப்படம் எடுத்தல் என ஓவியக்கலையில் ஆர்வமுள்ளவர்களுக்குக் கவின் கலைக்கல்லூரியில் சேர விண்ணப்பிக்கலாம்.

ஊடகத் துறையில் பணியாற்ற விரும்பும் மாணவர்கள் பி.ஏ ஜர்னலிசம் அண்ட் மாஸ் கம்யூனிகேஷன் படிப்பில் சேர விண்ணப்பிக்கலாம். கம்ப்யூட்டர் கிராபிக்ஸில் ஆர்வமுள்ளவர்கள் கிராபிக்ஸ் டிசைன் கோர்ஸில் சேரலாம்.

IWCM

எந்த ஆர்ட்ஸ் படிப்பைத் தேர்ந்தெடுக்கிறோம் என்பது முக்கியமல்ல, இளநிலை பட்டப்படிப்பை முடித்தவுடன் என்ன செய்யப்போகிறோம் என்பதுதான் முக்கியம்.



# 11.1 வேலை வாய்ப்பை வழங்கும் எக்னாமிக்ஸ், எக்னாமெட்ரிக்ஸ்!




**பி.**ஏ எக்கனாமிக்ஸ் என்றாலேயே பலரும் முகம் சுழிப்பார்கள். ஆனால், எக்கனாமிக்ஸ் படித்தால் ஏராளமான வாய்ப்புகள் உள்ளன என்பதைக் கவனிக்கத் தவறிவிடுகிறார்கள். உணவு உற்பத்தி, வேளாண்மை, வியாபாரம், வங்கி என ஒவ்வொரு துறையிலும் பொருளாதாரம் முக்கிய அங்கம் வகிக்கிறது.

### யார் படிக்கலாம் பொருளியல்?

கொஞ்சம் பகுப்பாய்வுத் திறனும், கணிக்கும் திறனும், அறிக்கை எழுதுவதற்கான எழுத்தாற்றலையும் வளர்த்துக்கொண்டால் பொருளாதார வல்லுநராக மாறலாம்.

**வேலை வாய்ப்பு:** எக்கனாமிக்ஸ்ட், பைனான்ஸியல் ரிஸ்க் அனாலிஸ்ட், டேட்டா அனலிஸ்ட், பைனான்ஸியல் பிளானர், பொருளாதார ஆராய்ச்சிப் பிரிவில் பணி, நிதி ஆலோசகர், இன்ஷூரன்ஸ் துறையில் ரிஸ்க் அனலிஸ்ட்,பொதுத்துறைகளில் பொருளாதாரத் துறைகளில் பணி என வாய்ப்புகள் நீள்கின்றன.

பொருளடக்க பக்கத்துக்கு செல்ல




பி.ஏ. எக்கனாமிக்ஸ் படித்தாலே இந்தியன் எக்கனாமிக்ஸ் சர்வீஸ் மற்றும் இந்தியப் புள்ளியியல் பணிகளுக்கான தேர்வுகள் எழுதலாம். இந்தத் தேர்வில் தேர்ச்சி பெறுபவர்கள் நிதி ஆயோக், மத்திய அமைச்சகங்களுக்கான துறைகளில் பணியாற்றும் பொறுப்பைப் பெறலாம். ரிசர்வ் வங்கியில் கிரேடு ‘பி’ பணியில் சேரலாம். முதுநிலை எக்கனாமிக்ஸ் அல்லது எக்கனாமெட்ரிக்ஸ் படிப்பில் சேர்ந்தால் வேலை வாய்ப்பு கூடும். ஐக்கிய நாடுகள் சபையின் பல பிரிவுகளிலும் பொருளாதார படிப்பை முடித்தவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குகின்றனர்.

## வாய்ப்பை வழங்கும் பொருளாதார அளவியல் பிரிவு எக்கனாமெட்ரிக்ஸ்

பொருளாதார துறையில் எக்கனாமெட்ரிக்ஸ் பிரிவு மிகவும் பிரபலம். இதில், பன்னாட்டு நிறுவனங்கள் அதிகளவில் பயன்படுத்தத் தொடங்கி இருக்கும் டேட்டா அனலிடிக்ஸ் டூல்கள் குறித்தும், பொருளாதார ஆய்வுகள் குறித்தும், பொருளாதார பிரச்னைகளுக்குத் தகவல் அடிப்படையில் தீர்வு காண்பது குறித்தும் படிக்கலாம்.

இளநிலை எக்கனாமிக்ஸ் பட்டப்படிப்பு, அனைத்து அரசு கலைக் கல்லூரிகளிலும் உள்ளன. இளநிலை பட்டப்படிப்பில் எக்கனாமிக்ஸ் படித்த பின்பு, முதுநிலையில் எக்கனாமெட்ரிக்ஸ் படிப்பவர்களுக்கு, பன்னாட்டு நிறுவனங்களும், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களும் போட்டி போட்டுக்கொண்டு தேர்வு செய்கிறார்கள். சில கல்வி நிறுவனங்கள், பிளஸ் டூ முடித்த மாணவர்களுக்கு, எக்கனாமெட்ரிக்ஸ் ஒருங்கிணைந்த ஐந்தாண்டு முதுநிலை பட்டப்படிப்பு வழங்குகின்றன.

●

# 11.2 வாய்ப்புகள் நிறைந்த சமூகப் பணி படிப்பு Bachelor of Social Work




ஐக்கிய நாடுகள் சபையின் பல பிரிவுகளும், இந்தியாவில் மத்திய அரசும், மாநில அரசும் பல்வேறு திட்டப் பணிகளைச் செயல்படுத்தி வந்தாலும் அவை, சமூகத்தின் கடைக்கோடி மக்களைச் சென்றடைவதில்லை. அதற்கான வளர்ச்சிப் பணியில் ஈடுபடவும், வறுமையை ஒழிக்கவும், சிறந்த சுகாதார வசதியை ஏற்படுத்தித் தரவும், சமூக அளவில் வேறுபாடுகளைக் களையவும் உலக அளவில் பல்வேறு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் செயல்பட்டுவருகின்றன.

**இந்தியாவில் மட்டும் 32 இலட்சத்துக்கும் கூடுதலான தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் பதிவுபெற்றுள்ளன. இவற்றில் பல நிறுவனங்கள் பல நூறு கோடி ரூபாய் வெளிநாடுகளிலிருந்து நிதியுதவி பெறுகின்றன.**

இத்தகைய நிறுவனங்களில் வேலை வாய்ப்பைப் பெற இளநிலை பட்டப்படிப்பாக சோசியல் வொர்க்ஸ் (BSW) படித்தவர்கள் தேவைப்படுகின்றனர். சமூக சேவை செய்ய படிப்பா என்று கேட்ட காலம் மாறி, சமூகப் பணிகள் குறித்த படிப்பை முடித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு என்று மாறியிருக்கிறது.

சென்னையில், மெட்ராஸ் ஸ்கூல் ஆஃப் சோசியல் வொர்க்ஸ் என்ற கல்வி நிறுவனம் சிறந்து விளங்குகிறது. இங்கு bachelor of social work படிப்பு உள்ளது.

மேலும் விவரங்களுக்கு https://mssw.in/b-s-w-self-finance/

**வேலை வாய்ப்பு:** தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் மட்டுமல்ல, பன்னாட்டு நிறுவனங்களில் நிறுவன சமூக பொறுப்புணர்வு (corporate social responsibility) பணிகளை மேற்கொள்ளவும் சோசியல் வொர்க்ஸ் படித்தவர்களுக்கே வாய்ப்பு வழங்கப்படுகிறது. இதனால் தற்போது மிகவும் மதிப்பு மிகுந்த படிப்புகளில் ஒன்றாக இருக்கிறது சமூகப் பணி படிப்பு.

# 11.3 வளர்ந்து வரும் டிசைன் துறை




IWCM

**தொ**ழில்நுட்பமும், கலை நுட்பமும் கலந்த வடிவம்தான் டிசைன். ஆடை, வீடு, இதர அத்தியாவசிய பொருள்களிலும் வடிவமைப்பு இல்லாவிட்டால் பிடிக்காத பொருளாகிவிடுகிறது. ஒரு பொருளை வாங்கவைக்கும் மந்திரக்கோலாகச் செயல்படுகிறது டிசைனிங். இது குறித்த படிப்பு இண்டஸ்ட்ரீஸ்-க்கு தேவையான ஒன்றாக உள்ளது. ஒவ்வொரு இண்டஸ்ட்ரீயும், தனக்குத் தேவையான வகையில் டிசைன் படிப்பை மாற்றி வழங்க ஆரம்பித்திருக்கிறது.

இந்தியாவில் ஒரு சில கல்வி நிறுவனங்களில் மட்டும் இளநிலை பட்டப்படிப்பாக உள்ளது. அகமதாபாத்தில் உள்ள நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டிசைன் என்ற கல்வி நிறுவனம், இந்திய அளவில் மட்டுமல்ல, உலகளவில் பிரசித்தி பெற்ற கல்வி நிறுவனங்களில் ஒன்றாக உள்ளது. இங்கு சேர தனியே நுழைவுத் தேர்வு (National Entrance Examination for Design (NEED), எழுத வேண்டும்.

### டிசைன் படிப்புகள் எங்கு படிக்கலாம்?

- சென்னையில் உள்ள மிகவும் பழைமையான கவின்கலைக் கல்லூரியில் இளநிலை படிப்பில் சேரலாம். இங்கு, பி.எஃப்.ஏ., படிப்பு வழங்கப்படுகிறது.

- *பொறியியல் கண்ணோட்டத்தில் டிசைன் படிப்பை அணுகுபவர்களுக்கு, சென்னை வண்டலூரில் உள்ள இந்தியத் தகவல் தொழில்நுட்பம், வடிவமைத்தல் மற்றும் உற்பத்தி கல்வி நிறுவனம் ( IIITDM Kancheepuram) ஏற்றது. இந்த கல்வி நிறுவனத்தில் சேர ஐஐடி- ஜேஇஇ முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தால் மட்டும் போதுமானது.*

| மேலும் விவரங்களுக்கு https://www.iiitdm.ac.in |
|---|

- *தொழில்நுட்பம் சார்ந்த டிசைன் படிப்புகளுக்கு மும்பை ஐஐடி-யில் உள்ள டிசைன் படிப்பு பிரபலம். இதற்குத் தனியே நுழைவுத் தேர்வு எழுத வேண்டும்.*

| மேலும் விவரங்களுக்கு http://www.idc.iitb.ac.in/ |
|---|

- *ஆர்க்கிடெக்சர் படிப்புகளுக்கு ஓரளவு டிசைன் சார்ந்த பாடங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது. தற்போது, இன்டீரியர் டிசைன், ஃபேஷன் டிசைன், கிராப்பிக்ஸ் டிசைன், கேம்ஸ் டிசைன், மல்டிமீடியா டிசைன், ஆடியோவிஷுவல் டிசைன், டெக்ஸ்டைல் டிசைன், கம்யூனிகேஷன் என ஏராளமான டிசைன் படிப்புகளில் பிரிவுகள் உள்ளன.*
- *பொதுவாக, இளநிலை பட்டப்படிப்புகள் மூன்றாண்டுகள் மட்டுமே. ஆனால், டிசைன் இளநிலை பட்டப்படிப்புகள் நான்கு ஆண்டுகள். பன்னிரண்டாம் வகுப்பில் எந்தப் பிரிவில் படித்திருந்தாலும் டிசைன் மீது கற்றுக்கொள்ளும் ஆர்வமும், ஈடுபாடும் இருந்தால் போதுமானது. National Institute of Design கல்வி நிறுவனத்தில் சேர Undergraduate Common Entrance Exam for Design (UCEED) நுழைவுத் தேர்வை எழுதிட வேண்டும். இதற்கான விளம்பரம் செப்டம்பர் அல்லது அக்டோபர் மாதத்தில் வெளியிடப்படும். நுழைவுத் தேர்வு ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் நடத்தப்படுகிறது.*
- *இளநிலை பட்டப்படிப்புக்கு, பிளஸ் டூ முடித்து 20 வயது நிரம்பாத மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.*

| மேலும் விவரங்களுக்கு www.admissions.nid.edu |
|---|

**வேலை வாய்ப்பு:** ஒவ்வோர் ஆண்டும் பல்வேறு நிறுவனங்கள் போட்டிப்போட்டுக்கொண்டு வேலை வாய்ப்பை வழங்குகின்றன. இதனால் வேலை வாய்ப்புக்குப் பஞ்சமில்லை.

# 11.4 ஓவியக் கலையில் ஆர்வம் உள்ளவர்களைப் பட்டைதீட்டும் அரசு கவின்கலைக் கல்லூரி

*சென்னை எழும்பூரில் உள்ளது அரசு கவின்கலைக் கல்லூரி. இது, இந்தியாவிலேயே மிகவும் பழைமை வாய்ந்த கல்லூரிகளில் ஒன்று.*

*இங்கு, நான்கு ஆண்டு பட்டப் படிப்புகள் பல உள்ளன.*

| |
|---|
| BFA Industrial Design in Ceramic |
| BFA Industrial Design in Textiles |
| BFA Visual Communication Design |
| BFA Painting |
| BFA Sculpture |
| BFA Print Making |
| BFA Traditional Sculpture |
| BFA Traditional Drawing and Painting |
| BTech Traditional Architecture |

IWCM



கும்பகோணத்திலும் அரசு கவின் கலைக் கல்லூரி உள்ளது.
மாமல்லபுரத்தில் சிற்ப வடிவமைப்பு கல்லூரி உள்ளது.
மேலும் விவரங்களுக்கு : www.artandculture.tn.gov.in



## 11.4.1 ஃபேஷன் டெக்னாலஜி




ஃபேஷன் டெக்னாலஜி நாகரிகத்தின் பிரதிபலிப்பு ஆடை. டெக்ஸ்டைல் சார்ந்த நவீன ஆடை தயாரிப்புகள் தொடர்பான துறை சார்பான படிப்புகளும் உள்ளன. கற்பனைத் திறனும், படைப்பாற்றலும் உள்ளவர்களுக்கு ஏற்றம்தரும் துறை ஃபேஷன் டிசைனிங் துறை. மத்திய அரசின் ஜவுளித் துறை சார்பில் சென்னை உள்பட 20-க்கும் மேற்பட்ட இடங்களில் நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஃபேஷன் டெக்னாலஜி கல்வி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. சென்னை தரமணியில் நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஃபேஷன் டெக்னாலஜி கல்லூரி அமைந்துள்ளது. இங்குச் சேர தனியே நுழைவுத்தேர்வு எழுத வேண்டும்.

மேலும், விவரங்களுக்கு https://nift.ac.in/admission

## 11.4.2 உடற்கல்வி படிப்புகள்


உடற்கல்வி, யோகா, விளையாட்டு உள்ளிட்ட படிப்புகளில் ஆர்வம் உள்ளவர்கள் சென்னையில் உள்ள தமிழ்நாடு உடற்கல்வி பல்கலைக்கழகத்தில் சேரலாம். உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம் குறித்து மேலும் விவரங்களுக்கு:

https://tnpesu.edu.in/sports/home/index.php

நந்தனத்தில் YMCA கல்லூரியில் முழு நேரப் படிப்புகளும், மாலை நேரப் படிப்புகளும் உள்ளன. இங்கு ஓராண்டு முதுநிலை பட்டயப் படிப்புகளாக யோகா, டென்னிஸ், கிரிக்கெட், நீச்சல், கால்பந்து, ஹாக்கி, கூடைப்பந்து ஆகிய விளையாட்டு பயிற்சிக்கான பட்டயப்படிப்புகள் உள்ளன.

மேலும் விவரங்களுக்கு :
http://www.ymcacollege.ac.in/courses-offered.aspx

# 11.5 ஊடகத் துறையில் முன்னேற விஷுவல் கம்யூனிகேஷன்




**வி**ஷுவல் கம்யூனிகேஷன் என அழைக்கப்படும் காட்சித் தொடர்பியல் படிப்புகளில் சேர சமீப காலமாக மாணவர்களிடையே ஆர்வம் அதிகரித்து வருகிறது. தற்போது, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பெரும்பாலான கல்லூரிகளில் விஷுவல் கம்யூனிகேஷன் படிப்பு உள்ளது.


விஷுவல் கம்யூனிக்கேஷன் படித்தால் திரைத் துறையில் சாதிக்கலாம் என்ற எண்ணம் மாணவர்களிடையே உள்ளது. திரைத் துறை மட்டுமின்றி விளம்பரம், சின்னத் திரை, செய்தி ஊடகங்கள், பத்திரிகைத் துறை, அனிமேஷன், எடிட்டிங், இணையதளம் உள்ளிட்ட பிற துறைகளிலும் விஷுவல் கம்யூனிகேஷன் படித்தால், முன்னேறுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகமாக உள்ளன.

### விஷுவல் கம்யூனிக்கேஷன் படிப்பை யார் தேர்ந்தெடுக்கலாம்?

இது, முழுக்க படைப்பாற்றல் தொடர்பான படிப்பு என்பதால் இத்துறையைத் தேர்ந்தெடுக்கும் முன்பே, இத்துறை சார்ந்த அடிப்படை விஷயங்களைத் தெரிந்துக்கொள்வது நல்லது.



பொருளடக்க பக்கத்துக்கு செல்ல



சினிமா, சின்னத் திரை, செய்தி சேனல்கள், விளம்பரங்கள், இணைய தளங்கள் உள்பட என்னென்ன வகையான ஊடகங்கள் உள்ளன என்பதையும், எந்தெந்த ஊடகங்களில் என்னென்ன கருத்துகளை மக்களுக்குக் கொண்டு சேர்க்கிறார்கள் என்பது குறித்த புரிதலும் வேண்டும்.

உலக அளவில் சிறப்பாகச் செயல்படும் ஊடகங்கள் எவை என்பது குறித்தும், அத்தகைய ஊடகங்கள் மூலம் நாம் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை வந்த பின் மாணவர்கள் இந்தப் படிப்பைத் தேர்ந்தெடுக்கலாம்.

### எந்தக் கல்லூரியைத் தேர்ந்தெடுக்கலாம்?

விஷுவல் கம்யூனிகேஷன் படிப்பதற்கு விண்ணப்பிக்கும்போது, அத்துறையில் தேவையான உபகரணங்களும், தகுதியான ஆசிரியர்களும் இருக்கிறார்களா எனத் தீர விசாரித்து விண்ணப்பிப்பது நல்லது. ஏற்கெனவே படித்த மாணவர்கள், எங்கு பணியாற்றுகிறார்கள் என்பதையும் விசாரிக்க வேண்டும்.

### விஷுவல் கம்யூனிக்கேஷன் படிப்புக்கான வேலை வாய்ப்புகள்

- திரைத் துறையில் சாதிக்க வேண்டும் என்ற இலட்சியம் உள்ளவர்கள் விஷுவல் கம்யூனிகேஷன் படிக்கலாம் என்றாலும் அதற்கான தனிப்பட்ட திறமையையும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.
- சின்னத் திரை நிகழ்ச்சிகளில் இயக்கம், எடிட்டிங், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு, ஒளி-ஒலிப்பதிவு, நிகழ்ச்சிகளின் நிர்வாகத் தயாரிப்பு உள்ளிட்ட பிரிவுகளில் விஷுவல் கம்யூனிகேஷன் படித்தவர்கள் தேவைப்படுகிறார்கள்.
- விளம்பரத் துறையில் இயக்கம், கிரியேட்டிவ் ஹெட், அனிமேஷன் உள்ளிட்ட பணிகளில் சேர வாய்ப்புகள் அதிகம்.
- போட்டோகிராபி நுணுக்கங்களில் திறமையை வளர்த்துக்கொண்டால் திரைப்படங்கள், பத்திரிகைகள், இதழ்கள் போன்றவற்றில் பணியாற்றும் வாய்ப்பைப் பெறலாம்.
- 2டி, 3டி மற்றும் எடிட்டிங் தொடர்பான படிப்புகள் விஷுவல் கம்யூனிகேஷனில் கற்றுத் தரப்படுகின்றன. இதில் திறமையை வளர்த்துக்கொண்டால் அனிமேஷன், எடிட்டிங் பிரிவுகளில் சாதிக்கலாம்.

# 11.6 இதழியல் படிப்பும் வேலை வாய்ப்பும்




எல்லோர் கையிலும் மொபைல் போன் இருக்கிறது. உலகத்தின் எந்தப் பகுதியில் எந்த விதமான சம்பவங்கள் நடந்தாலும் உடனுக்குடன் தெரிந்துகொள்ள முடிகிறது.

### ஊடகங்கள் எவ்வாறு செயல்படுகின்றன?

ஆன்லைன் ஊடகமாக இருந்தாலும் சரி, தொலைக்காட்சி போன்ற காட்சி ஊடகமாக இருந்தாலும் சரி, தினசரி செய்தித்தாள்களாக இருந்தாலும் சரி, பல்வேறு பகுதிகளிலிருந்து செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. இவை பல்வேறு பகுதிகளில் பலராலும் திரட்டப்பட்டு, அதன்பின்பு ஒருவருடைய மொபைல் போனுக்கோ அல்லது இல்லங்களுக்கோ செய்தித்தாள் வழியாகவோ அல்லது தொலைக்காட்சி செய்தியாகவோ வந்தடைகிறது.

### இதழியலில் என்ன சொல்லி கொடுக்கப்படுகிறது

செய்திகள் வழங்குவதே ஒரு கலைதான். இந்தக் கலையைத் தான் இதழியல் படிப்பில் சொல்லிக்கொடுக்கிறார்கள். இதுநாள் வரை இதழியல் பாடம் பல பல்கலைக்கழகங்களில் முதுநிலை படிப்பாகவும், பட்டயப் படிப்பாகவும், சான்றிதழ் படிப்பாகவும் மட்டும் இருந்தது. தற்போது, பல கல்லூரிகளில் இளநிலை பட்டப்படிப்பாக இதழியல் படிப்பை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இதழியலில் சேர, பிளஸ் டூ-வில் எந்த பாடப்பிரிவைப் பயின்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

### இதழியல் வேலை வாய்ப்பு

இப்படிப்பை முடித்தவுடன் நாளிதழ்களில், வார இதழ்களில், செய்திகளை வழங்கும் தொலைக்காட்சிகளிலும், எஃப் எம் பண்பலைகளிலும் பணியாற்றும் வாய்ப்பைப் பெறலாம். ஆர்வமுள்ளவர்கள், சொந்தமாக யூ-டியூப் சேனல்களை ஆரம்பித்து பொதுமக்கள் விரும்பும் வகையில் பல்வேறு தகவல்களை வழங்கலாம்.

ஆர்வமிருந்தால் இதழியல் துறையில் சாதிக்கலாம். ●

# 11.7 ஐடி துறையில் வேலை வாய்ப்பைப் பெற்றுத்தரும் ஆங்கில பட்டப்படிப்பு




IWCM

### ஆங்கிலப் பட்டதாரிகளை விரும்பும் கார்ப்பரேட் அலுவலகங்கள்

ஆங்கில இலக்கியம் படித்தால் ஆசிரியர், விரிவுரையாளர் பணி மட்டுமே கிடைக்கும் என்பதெல்லாம் மாறி, மொழிபெயர்ப்பாளர், கன்டன்ட் எடிட்டர், ஜர்னலிஸ்ட், கார்ப்பரேட் அலுவலகங்களில் பணி என ஏகத்துக்கும் வாய்ப்புகளால் நிரம்பி இருக்கிறது.

தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் டெக்னிக்கல் ரைட்டிங் என்ற பிரிவில் ஆங்கிலப் பட்டப்படிப்பு படித்தவர்களுக்கு கைநிறைய சம்பளம் வழங்கப்படுகிறது.

தற்போது, ஆங்கிலப் பட்டப்படிப்பு படித்தவர்களுக்கு ஆராய்ச்சித் துறை, பதிப்புத்துறை, ஊடகம், மக்கள் தொடர்பு, மனிதவளத்துறை, வர்த்தக நிறுவனங்கள், பன்னாட்டுத் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களிலும் வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன. மேலும் வளர்ந்துவரும் ஹாஸ்பிட்டாலிட்டி, டிராவல்ஸ், டூரிசம் மற்றும் ஹாஸ்பிட்டல் இண்டர்ஸ்ட்ரியிலும் ஆங்கிலப் பட்டப்படிப்பு படிப்பவர்களுக்கு வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன.

பொருளடக்க பக்கத்துக்கு செல்ல




### வேலை வாய்ப்பு பெற என்ன செய்ய வேண்டும்

மூன்று ஆண்டுகள் படிக்கும்போது, ஆங்கிலப் புலமையை மேம்படுத்திக்கொண்டும், சரளமாக உரையாடும் திறமையை வளர்த்துக்கொண்டும் வந்தால், வாய்ப்புகளால் வசப்பட்டு நல்ல ஊதியம் பெறலாம். இன்னொரு சிறப்பு, மற்ற படிப்புகளைவிட ஆங்கிலப் பட்டப்படிப்புக்கு கல்லூரிகளில் மிகக் குறைந்த கட்டணமே.

### இதர வேலை வாய்ப்புகள்:

IWCM

- பி.ஏ. ஆங்கிலம் படித்த பின்பு, எம்.ஏ. ஆங்கிலம் படிக்கலாம். மேற்படிப்பு படிக்கும்போது நெட் எக்ஸாம் எழுதி தேர்ச்சி பெற்று விரிவுரையாளராகவும், ஆராய்ச்சியாளராகவும் மாறலாம்.
- பி.ஏ. ஆங்கிலம் படித்தவர்கள் ஜர்னலிசம் கோர்ஸில் சேரலாம். இதன்மூலம் பத்திரிகை மற்றும் மீடியாவில் வாய்ப்பைப் பெறலாம்.
- எம்.பி.ஏ. சேரலாம். எம்.பி.ஏ.-வில் ஹாஸ்பிட்டாலிட்டி மேனேஜ்மென்ட், ஹாஸ்பிட்டல் மேனேஜ்மென்ட், லாஜிஸ்டிக் மேனேஜ்மென்ட், டிராவல் & டூரிசம், ஃபேஷன் டிசைனிங் என ஏராளமான பிரிவுகள் உள்ளன. இதில் சேர்ந்து, நிர்வாக ரீதியிலான பணியினைப் பெறலாம்.
- சிவில் சர்வீஸ் தேர்வு எழுதி வெற்றி பெற்று சிறந்த அதிகாரியாக மாறலாம். வங்கித் தேர்வுகளை எழுதி வங்கி அதிகாரியாகலாம்.
- பி.எட். படித்து ஆசிரியராகலாம்.
- சட்டம் பயின்று சட்டத் துறையில் மிளிரலாம்.
- சமூக சேவைப் பணிகள் போன்ற படிப்பில் சேர்ந்து தன்னார்வ நிறுவனங்களில் வேலை வாய்ப்பைப் பெறலாம். ●

# 11.8 சட்டம் படித்து சட்ட நிபுணராகலாம்




தொழிற்கல்வி படிப்புகளில் ஒன்றாக மாறி இருக்கிறது சட்டவியல். சட்டப்படிப்பு படித்து வழக்குரைஞராகலாம்.

### கார்ப்பரேட் நிறுவனங்களில் சட்ட ஆலோசகர் பணி

பொதுவாக, சட்டப்படிப்பு படித்தால் நீதிமன்றத்தில் வழக்காடுவது என்று இருந்தது. தற்போது, கார்ப்பரேட் நிறுவனங்களில் சட்ட ஆலோசகர் பணிக்கு நியமிக்கப்படுகிறார்கள். வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள், தனியார் தொழிற்சாலைகளில் சட்ட ஆலோசகர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதனால் சட்டக் கல்விக்கான முக்கியத்துவமும் அதிகரித்துவருகிறது.

### எங்கு படிக்கலாம்?

தற்போது சென்னையில் உள்ள தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள சீர்மிகு சட்டக் கல்லூரியில் பி.ஏ. - எல்.எல்.பி., பி.பி.ஏ. - எல்.எல்.பி., பி.காம். - எல்.எல்.பி. என ஐந்தாண்டுக் கால ஒருங்கிணைந்த சட்டப் படிப்புகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

### என்னென்ன படிப்புகள் உள்ளன?

பி.ஏ.-எல்.எல்.பி. (ஹனர்ஸ்) படிப்பில் பிளஸ் டூ வகுப்பில் எந்த பாடப்பிரிவையும் எடுத்துப் படிப்பவர்கள் சேரலாம். பி.காம். - எல்.எல்.பி. (ஹனர்ஸ்) படிப்பில் சேர விரும்பும் மாணவர்கள், பிளஸ் டூ வகுப்பில் வணிகவியல் பிரிவுப் பாடங்களை எடுத்துப் படித்திருக்க வேண்டும். பி.சி.ஏ.-எல்.எல்.பி. (ஹனர்ஸ்) படிப்பில் சேர விரும்பும்

மாணவர்கள் பிளஸ் டூ வகுப்பில் கம்ப்யூட்டர் சயின்ஸ் பாடத்தை ஒரு பாடமாக எடுத்துப் படித்திருக்க வேண்டும்.

### யார் விண்ணப்பிக்கலாம்?

சீர்மிகு சட்டக் கல்லூரியில் சேர அனைத்துப் பாடங்களிலும் சேர்த்து குறைந்தது 70 சதவிகித மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். பட்டியலினத்தவர்... குறைந்தது 60 சதவிகித மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். வயது வரம்பு கிடையாது.

### தமிழ்நாட்டில் உள்ள சட்டக் கல்லூரிகள்

சென்னை, செங்கல்பட்டு, கோவை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி, விழுப்புரம், தர்மபுரி, இராமநாதபுரம் ஆகிய இடங்களில் உள்ள சட்டக் கல்லூரிகளில் பி.ஏ - எல்.எல்.பி, ஐந்தாண்டு ஒருங்கிணைந்த இளநிலை பட்டப்படிப்பில் பிளஸ் டூ படித்த மாணவர்கள் சேரலாம்.

### சட்டக் கல்லூரியில் சேர விண்ணப்பிக்க தகுதி என்ன?

அரசு சட்டக் கல்லூரிகளில் ஐந்தாண்டு ஒருங்கிணைந்த இளநிலை சட்டப் படிப்பு படிக்க விரும்பும் பொதுப்பிரிவு மாணவர்கள் பிளஸ் டூ வகுப்பில் குறைந்த பட்சம் 45 சதவிகித மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பட்டியலினத்தைச் சேர்ந்த மாணவர்கள் 40 சதவிகித மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றிருந்தால் போதும். பிளஸ் டூ தேர்வில் முதன் முறையிலேயே தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இப்படிப்பில் சேர வயது வரம்பு கிடையாது.

பிளஸ் டூ தேர்வில் மொழிப் பாடங்கள் நீங்கலாக மற்ற பாடங்களில் பெற்றுள்ள மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில் சட்டப் படிப்புக்கு மாணவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள்.

### தேசிய அளவில் சிறப்பு பெற்ற சட்டப் பல்கலைக்கழகங்கள்

சட்டப் படிப்பை வழங்குவதில் தேசிய சட்டப் பல்கலைக்கழகங்கள் முக்கிய பங்காற்றி வருகின்றன. நேஷனல் லா ஸ்கூல் என்றழைக்கப்படும் சட்ட சிறப்புக் கல்லூரிகள் பெங்களூரு, ஹைதராபாத், போபால், ஜோதாப்பூர், ராய்பூர், காந்தி நகர், லக்னோ, பாட்னா, கொச்சி, கட்டாக், ராஞ்சி, விசாகப்பட்டினம், திருச்சி, மும்பை மற்றும் நாக்பூரில் உள்ளன. இந்த சட்டக் கல்வி நிலையங்களில் மாணவர்கள் சேர்வதற்கு கிளாட் (Common Law Admission - CLAT) என்ற பொது நுழைவுத் தேர்வை எழுத வேண்டும்.

**தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகத்தில் சேர ஆன்லைன் வழியே விண்ணப்பிக்கலாம்.**

| |
|---|
| **மேலும் விவரங்களுக்கு:** www.tndalu.ac.in |

# 11.9 உணவு விருந்தோம்பல் துறை




**வி**ருந்தோம்பல் துறையில் முக்கிய இடம் வகிக்கும் ஹோட்டல் நிர்வாகம் சார்ந்த மூன்று விதமான படிப்புகள் இருக்கின்றன. முதலாவது சான்றிதழ் படிப்பு. இது ஒரு வருட படிப்பு. தமிழ்நாட்டில் இதற்கு 'தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்' சான்றிதழ் வழங்குகிறது. தமிழ்நாட்டில் 200-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பயிற்சி வழங்கி, இத்தகைய சான்றிதழ்களைக் கொடுக்கின்றன. பயிற்சிக் கட்டணமாக 10,000 ரூபாயிலிருந்து 20,000 ரூபாய் வரை வசூலிக்கிறார்கள்.

| |
|---|
| **சான்றிதழ் படிப்புகள் - தகுதிநிலை - பத்தாம் வகுப்பு முடித்தவர்கள் - ஓராண்டு படிப்பு** |
| 'ஃப்ரண்ட் ஆபீஸ் ஆபரேஷன்' (Front Office Operation)- வரவேற்பறை சார்ந்த பணி |
| 'ஃபுட் & பிவரேஜ் சர்வீஸ்' (Food and Beverage Service) - வெயிட்டர் பணி |
| 'ஹவுஸ் கீப்பிங் ஆபரேஷன்' - ஹவுஸ் மேன் அல்லது ரூம் பாய் பணி |
| 'ஃபுட் புரொடக்ஷன் மற்றும் பேக்கரி' - உணவு தயாரிப்பு சார்ந்த வேலை |
| **டிப்ளமோ படிப்பு - தகுதிநிலை - ப்ளஸ் டூ - மூன்றாண்டு படிப்பு** |
| 'டிப்ளமோ இன் ஹோட்டல் மேனேஜ்மென்ட்' - நிர்வாகப் பணிகள் - கட்டணம் ரூ. 30,000/- |



IWCM









டிப்ளமோ படிப்புக்கு இந்திய சுற்றுலாத் துறையின் கீழ் இயங்கும்' நேஷனல் கவுன்சில் ஃபார் ஹோட்டல் மேனேஜ்மென்ட் & கேட்டரிங் டெக்னாலஜி' என்ற அமைப்பு அனுமதி வழங்குகிறது.

பி.எஸ்சி, - ஹோட்டல் மேனேஜ்மென்ட் பட்டப்படிப்பு; இந்த வகை பட்டப்படிப்புக்கு பல்கலைக்கழகங்களும், 'நேஷனல் கவுன்சில் ஃபார் ஹோட்டல் மேனேஜ்மென்ட்'டும் அனுமதி வழங்குகிறது. பிஎஸ்சி, படிப்புக்கு ஆண்டுக்கு 40,000 - 50,000 வரை செலவாகும். வேலையைப் பொறுத்த வரை நிர்வாகப் பதவியிலிருந்து பொதுமேலாளர் பதவிவரை கிட்டும்.

சென்னை தரமணியில் 'ஹோட்டல் மேனேஜ்மென்ட் அண்ட் கேட்டரிங் டெக்னாலஜி - அப்ளைடு நியூட்ரிஷன்' கல்லூரி உள்ளது.

இக்கல்லூரியில் சேர, ப்ளஸ் டூ மாணவர்கள் மார்ச் மாதத்தில் நுழைவுத் தேர்வு எழுத வேண்டும். ஜூன் மாதம் கவுன்சிலிங் நடைபெறும். இந்தியாவில் மொத்தம் 26 அரசுக் கல்லூரிகள் உள்ளன. நுழைவுத்தேர்வு மதிப்பெண் அடிப்படையில் எங்கு வேண்டுமானாலும் சேர்ந்து கொள்ளலாம்.

**டிப்ளமோ மற்றும் டிகிரி படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு:** மேனேஜ்மென்ட் டிரெய்னி, கஸ்டமர் ரிலேஷன்ஷிப் எக்ஸிகியூட்டிவ், மார்க்கெட்டிங்/விற்பனை எக்ஸிகியூட்டிவ், கிச்சன் மேனேஜ்மென்ட், ஹவுஸ்கீப்பிங் மேனேஜ்மென்ட், கேட்டரிங் ஆபீஸர் போன்ற வேலைகள் கிடைக்கும்.


### எங்கெல்லாம் வேலை கிடைக்கும்?

நட்சத்திர ஹோட்டல்கள், உணவகங்கள், கேட்டரிங் மற்றும் கேன்டீன் அமைப்புகள், ஹெல்த் கேர் நிறுவனங்கள், ரிசார்ட்டுகள், கேளிக்கை பூங்காக்கள், ஆயுர்வேத நிறுவனங்கள், ஸ்பா சென்டர்ஸ், உயர்தர காபி பார்கள், கிளப்புகள் மற்றும் கப்பல்கள், விமான நிறுவனங்களிலும் வேலை கிடைக்கும்.

விருந்தோம்பல் துறை என்பது ஹோட்டலும் உணவகமும் மட்டுமே என்றிருந்த நிலை மாறி, தற்போது மருத்துவமனை, ரியல் எஸ்டேட், தீம் பார்க்ஸ், ஈவன்ட் மேனேஜ்மென்ட், விமான சேவை ஆகியவற்றையும் உள்ளடக்கியதாக மாறிவிட்டது. இதனால் பல்வேறு துறைகளில் வேலை வாய்ப்புகள் அதிகரித்துள்ளன.

**மேலும் விவரங்களுக்கு** http://www.ihmchennai.org/ihmchennai/

# 12. எளிதில் வேலை வாய்ப்பைப் பெற பாலிடெக்னிக் படிப்புகள்!




பன்னிரண்டாம் வகுப்பு படிச்சு முடிச்சாச்சு. பையனும் நல்ல மார்க் எடுத்திருக்கிறான். ஆனால் இப்போது இன்ஜினீயரிங் சேர்த்து படிக்க வைக்கலாம் என்றால் முடியாத நிலை. இப்படிப்பட்ட நிலையில் இருப்பவர்களுக்கு பாலிடெக்னிக் படிப்புகள் பெரிய அளவில் உதவும்.

### பாலிடெக்னிக் படிப்பில் யார் சேரலாம்?

பொதுவாக, பாலிடெக்னிக்கில் சேர 10 ஆம் வகுப்புத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தால் போதும். மூன்று வருட படிப்பாக பாலிடெக்னிக்கில் சேர்ந்துவிட முடியும். பிளஸ் டூ-வில் கணிதம், இயற்பியல், வேதியியல் பாடங்களைப் படித்தவர்கள், நேரடியாக இரண்டாம் ஆண்டில் சேர்ந்துவிடலாம்.

### பாலிடெக்னிக்கில் என்னென்ன படிப்புகள் உள்ளன?

பாலிடெக்னிக்கில் ஆறு படிப்புகள் முதன்மையாக உள்ளன. அவை கட்டுமானத் தொழில்நுட்பம் (சிவில்), மெக்கானிக்கல்,



எலெக்ட்ரானிக்ஸ் கம்யூனிகேஷன் இன்ஜினீயரிங், எலெக்ட்ரிக்கல் இன்ஜினீயரிங், கம்ப்யூட்டர் சயின்ஸ் மற்றும் இன்ஃபர்மேஷன் டெக்னாலஜி.

IWCM

இந்த ஆறு பிரிவுகளும் பல உட்பிரிவுகளைக் கொண்டிருக்கின்றன. உதாரணத்துக்கு ஆட்டோமொபைல் இன்ஜினீயரிங், மரைன் இன்ஜினீயரிங், மெக்ட்ரானிக்ஸ் போன்ற படிப்புகள் இருக்கின்றன. இதைத் தவிர, சிறப்பு படிப்புகளாக கெமிக்கல் இன்ஜினீயரிங், டெக்ஸ்டைல் இன்ஜினீயரிங், லெதர் இன்ஜினீயரிங், பிரின்டிங் டெக்னாலஜி போன்ற படிப்புகளும் இருக்கின்றன. மாணவர்களுக்கு எந்தப் பிரிவில் ஆர்வம் இருக்கிறதோ அந்தப் பிரிவைத் தேர்ந்தெடுத்து படிக்கலாம்.

### செய்முறை பயிற்சியும் வேலை வாய்ப்பும்

பாலிடெக்னிக் டிப்ளமோ படிப்புகள் அதிக அளவில் செய்முறை சார்ந்த பயிற்சிகளாகவே இருக்கின்றன. இந்தப் பயிற்சிதான் பாலிடெக்னிக் டிப்ளமோ படித்த உடனே ஏதேனும் ஒரு தொழில் நிறுவனத்தில் வேலை கிடைக்க உதவுகிறது.

### ஏன் பாலிடெக்னிக் படித்தவுடன் வேலை கிடைக்கிறது?

பொதுவாக, பி.இ படித்தவர்கள் ஒயிட் காலர் ஜாப்பை தான் விரும்புகிறார்கள். ஆனால் பாலிடெக்னிக் படித்தவர்கள். அப்படி அல்ல, எக்ஸிகியூட்டிவ்வாகவும் செயல்படுவார்கள், லேபராகவும் செயல்படுவார்கள். மேலும், எளிதில் மிடில் லெவல் வேலைக்கு



(சூப்பர்வைஸிங் பணிகளுக்கு) பொருத்தமாக இருக்கிறார்கள். இதனால் தொழில்நிறுவனங்கள் பெருமளவில் விரும்புவது பாலிடெக்னிக்கில் டிப்ளமோ படித்தவர்களைத் தான். பாலிடெக்னிக் பட்டயப் படிப்பு(Diploma) முடித்தவர்கள் நேரடியாக இரண்டாம் ஆண்டு பொறியியல் பட்டப்படிப்பில் சேர்வது பயிலலாம்.

### பாலிடெக்னிக் படிப்புக்கான கட்டணம்

அரசு பாலிடெக்னிக்கில் கல்விக் கட்டணம் என்று பார்த்தால் டியூஷன் ஃபீஸ் எதுவுமில்லை. மேம்பாட்டுக் கட்டணம், சிறப்புக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்களை எல்லாம் சேர்த்தால், ஆண்டுக்கு 2,000 ரூபாயில் இருந்து 2,500 ரூபாய் வரை ஆகும். அரசு பாலிடெக்னிக்கில் மொத்தம் 10,000 ரூபாய்க்குள் டிப்ளமோ படிப்பையே படித்து முடித்துவிடலாம். இதைத் தவிர, போக்குவரத்து இலவசம், ரயில் கட்டணச் சலுகை எல்லாம் இருக்கின்றன.

முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. தனியார் பாலிடெக்னிக்கில் சேர்ந்தால் ஆண்டுக்கு 10,000 ரூபாய்க்கு மேல் கட்டணமாகச் செலுத்த வேண்டி இருக்கும்.

### கல்வி உதவித்தொகை

பாலிடெக்னிக்கில் சேர்ந்து படிப்பவர் தனது குடும்பத்தில் முதலாவது பட்டதாரியாக இருந்தால், கல்வி உதவித்தொகை கூடுதலாகக் கிடைக்கும். விடுதியில் தங்கிப் படித்தாலும் உதவித்தொகை

பாலிடெக்னிக் அட்மிஷனுக்கு விண்ணப்பிக்க
https://www.tngptc.com/ அல்லது https://www.tngptc.in/#/

*அதிகமாகக் கிடைக்கும். விவசாயக் குடும்பத்திலிருந்து வந்து படித்தாலும் தனி உதவித்தொகை கிடைக்கிறது.*

**சென்ட்ரல் பாலிடெக்னிக் மற்றும்**

**தர்மாம்பாள் அரசு பெண்கள் பாலிடெக்னிக் கல்லூரி**

*தமிழ்நாட்டிலேயே பாலிடெக்னிக்கில் தனிச்சிறப்பானது என்றால் சென்னை தரமணியில் உள்ள சென்ட்ரல் பாலிடெக்னிக் கல்லூரிதான். இங்கு இல்லாத டிப்ளமோ படிப்புகளே இல்லை என்று சொல்லும் அளவுக்கு எல்லா பிரிவுகளையும் கொண்டிருக்கிறது.*

| சென்ட்ரல் பாலிடெக்னிக் கல்லூரியில் உள்ள சில சிறப்பு டிப்ளமோ படிப்புகள் |
|---|
| மீன் வளர்ப்பு தொழில்நுட்பம் |
| பிரின்டிங் டெக்னாலஜி |
| கெமிக்கல் இன்ஜினீயரிங் |
| லெதர் இன்ஜினீயரிங் |
| டெக்ஸ்டைல் இன்ஜினீயரிங் எனப் பல விதமான ஸ்பெஷலைடு படிப்புகளும் உள்ளன. |
| வணிகவியல் படித்தவர்களுக்கு டிப்ளமோ இன் மாடர்ன் ஆபிஸ் பிராக்டீஸ் என்ற படிப்பை வழங்கும் காமர்ஸ் கல்வி மையமும் இங்கு இருக்கிறது. |
| முதுநிலை டிப்ளமோ படிப்புகளாக, போஸ்ட் டிப்ளமோ டவுண் அண்ட் கன்ட்ரி டெவலப்மெண்ட் பிளானிங் (Town and Country Development Planning) என்ற படிப்பு இருக்கிறது. இது, இந்தியாவிலேயே இரண்டு இடத்தில்தான் இருக்கிறது. ஒன்று போபால். மற்றொன்று சென்னையில் மட்டுமே. |
| போஸ்ட் டிப்ளமோ படிப்பாக, குவான்டிட்டி சர்வேயிங் (QUANTITY SURVEYING) என்ற படிப்பு இருக்கிறது. இந்தப் படிப்பை சிவில் இன்ஜினீயரிங் படித்தவர்கள் படித்தால் வேலை வாய்ப்பைப் பெறலாம். |
| சென்ட்ரல் பாலிடெக்னிக் வளாகத்துக்கு அருகில் உள்ளது தர்மாம்பாள் அரசு பெண்கள் பாலிடெக்னிக் கல்லூரி. |

IWCM

| **தர்மாம்பாள் அரசு பெண்கள் பாலிடெக்னிக் கல்லூரியில் சொல்லி கொடுக்கப்படும் டிப்ளமோ படிப்புகள்** |
|---|
| கட்டடக்கலையியல் உதவிப்பணி (Architectural Assistantship) |
| சிவில் இன்ஜினீயரிங் (Civil Engineering) |
| கம்ப்யூட்டர் இன்ஜினீயரிங் (Computer Engineering) |
| எலெக்ட்ரானிக்ஸ் அண்ட் கம்யூனிகேஷன் இன்ஜினீயரிங் (Electronics and Communication Engineering) |
| என்விரான்மென்டல் இன்ஜினீயரிங் (Environmental Engineeering) |
| கார்மென்ட் டெக்னாலஜி (Garment Technology) |
| இன்ஸ்ட்ருமென்ட் அண்ட் கன்ட்ரோல் இன்ஜினீயரிங் (Instrumentation and Control Engineering) |
| மாடர்ன் ஆபீஸ் பிராக்டீஸஸ் (Modern Office Practices) படிப்புகள் உள்ளன. தர்மாம்பாள் பெண்கள் பாலிடெக்னிக் கல்லூரியில் கல்வி கட்டணம் 2160/- |

IWCM

**சென்னை, சென்னைக்கு அருகில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பாலிடெக்னிக் கல்லூரிகள்:**

- சென்னையில் அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளாக புரசைவாக்கத்திலும், ஆர்.கே.நகரிலும் உள்ளன. கிண்டியில் அரசு தொழிற்பயிற்சி மையம் அமைந்துள்ளது.
- திருவள்ளூர், செவ்வாய் பேட்டையில் அரசு பாலிடெக்னிக் கல்லூரி உள்ளது.
- மத்திய அரசின் தொழில் நுட்பப் பயிலகம் கிண்டி கத்திபாரா அருகில் அமைந்துள்ளது. இங்கு டூல் அண்ட் டை மேக்கர் (Tool and Die Maker), Refrigeration and Air Conditioning, Auto Cad - 3 ஆண்டு டிப்ளமோ பயிற்சியில் சேர்ந்து பயன் பெறலாம்.
- சென்னையில் அரசு உதவிபெறும் பாலிடெக்னிக் கல்லூரிகளாக, எழும்பூருக்கு அருகில் வேப்பேரியில் செங்கல்வராய நாயக்கர் பாலிடெக்னிக் கல்லூரி, மயிலாப்பூரில் உள்ள இராமகிருஷ்ணா மிஷன் பாலிடெக்னிக் கல்லூரி, பூந்தமல்லியில் ஏ.எம்.கே டெக்னாலஜிக்கல் பாலிடெக்னிக் கல்லூரி, ஆவடியில் முருகப்பா பாலிடெக்னிக் கல்லூரி ஆகியவை உள்ளன.

# 13. குறைந்த மதிப்பெண்ணா கவலைப்படாதீர்கள், ஐடிஐ படிப்பு உங்களை உயர்த்தும்!




பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பில் குறைந்த மதிப்பெண் பெற்றவர்கள் மனம் தளர வேண்டிய அவசியமில்லை. பொறியியல் கல்லூரியில் படித்தவர்களைவிட ஐடிஐ படித்தவர்களுக்கே வேலை வாய்ப்பு அதிகமாக உள்ளது. இண்டஸ்ட்ரியல் டிரைனிங் இன்ஸ்டிட்யூட் என்பதைத் தான் ஐடிஐ என்று அழைக்கிறார்கள்.

IWCM

### எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களே ஐடிஐயில் சேரலாம்

ஐடிஐ-யில் சேர எட்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சிபெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். எட்டாம் வகுப்பு தேர்ச்சிபெற்றவர்கள் சேர்வதற்கு எனப் பல தொழிற்பயிற்சிகள் இருக்கின்றன. இதைப் போலவே, பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களும், பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சிபெற்றவர்களும் தனித்தனியே தொழிற்பயிற்சி வகுப்புகளில் சேரலாம்.

தொழிற்பயிற்சியில் பொறியியல் வகை தொழிற்பயிற்சிகள், பொறியியல் பிரிவு அல்லாத தொழிற்பயிற்சிகள் என இரண்டு வகை உண்டு.

பொறியியல் வகை தொழிற்பயிற்சிக்கு, கணிதம் மற்றும் அறிவியல் பாட மதிப்பெண்களின் அடிப்படையிலும், இதர தொழிற்பயிற்சிகளுக்கு மொத்த மதிப்பெண்கள் அடிப்படையிலும் சேர்க்கை நடக்கிறது.

### ஐடிஐ-யில் சேர வயது வரம்பு

பொதுப்பிரிவினர், பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், மாற்றுத்திறனாளிகள் போன்றோருக்கு 14 வயது முதல் 40 வயது வரை உள்ளவர்களும், முன்னாள் ராணுவத்தினர் 45 வயது

வரை உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். போரில் இறந்த ராணுவ வீரரின் மனைவி, கணவரால் கைவிடப்பட்டோர், விதவை, மகளிர் போன்றோருக்கு வயது வரம்பு எதுவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஐடிஐ-யில் உள்ள பொதுவான படிப்புகள் (சில படிப்புகள் மூன்றாண்டு காலம், சில படிப்புகள் இரண்டு ஆண்டுகள், ஓராண்டு காலம் கொண்டவை)



- எலெக்ட்ரீஷியன்
- மெஷினிஸ்ட்
- ஃபிட்டர்
- பிளம்பர்
- வெல்டர்
- டர்னர்
- மோட்டார் மெக்கானிக்
- ஏசி மெக்கானிக்
- வைண்டர்
- டீசல் மெக்கானிக்
- ஸ்டெனோகிராபி
- டிராஃப்ட்ஸ்மேன்
- டி.வி மெக்கானிக்
- எலெக்ட்ரானிக்ஸ் மெக்கானிக்
- ரெஃப்ரிஜிரேட்டர் - ஏர் கண்டிஷன் மெக்கானிக் என 60-க்கும் மேற்பட்ட கோர்ஸ்கள் இருக்கின்றன.

### சென்னையில் உள்ள அரசு ஐடிஐ - கள்

வட சென்னை, அம்பத்தூர் மற்றும் ஆலந்தூரில் அரசு ஐடிஐ-கள் அமைந்துள்ளன.

ஐடிஐ யில் சேர ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கலாம்.
விண்ணப்பிக்க விரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட இணையதள முகவரிக்கு சென்று விண்ணப்பிக்கலாம்

http://nimiprojects.in/detonlineadmission2021/

*கலந்தாய்வு மையத்தில் மதிப்பெண் தகுதி மற்றும் இன ஒதுக்கீட்டின்படி தரவரிசைப் பட்டியல் தயாரித்து வெளியிடப்படும்.*

**மேலும் விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதள முகவரியில் பார்வையிடலாம் www.skilltraining.tn.gov.in**

*அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் அரசு உதவி பெறும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சிபெறும் மாணவர்களுக்கு*

### வழங்கப்படும் சலுகைகள்

- *மாதம்தோறும் உதவித்தொகை 750 ரூபாய்*
- *பேருந்துக் கட்டணச் சலுகை*
- *மிதிவண்டி*
- *மடிக்கணினி*
- *பாடப்புத்தகங்கள் மற்றும் வரைபடக் கருவிகள்*
- *ஒரு செட் சீருடை*
- *ஒரு செட் காலணி போன்றவை அரசால் வழங்கப்படுகின்றன.*

*அரசு ஒதுக்கீட்டில் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் அமைந்த தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேரும்போது, மாணவர்களுக்கு 12,000 ரூபாயும், கிராமங்கள் மற்றும் பஞ்சாயத்துகளில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் சேரும்போது 10,000 ரூபாயும் அரசு பயிற்சிக் கட்டணமாக வழங்குகிறது. சில தொழிற்சாலைகள், அரசு அனுமதியுடன் அடிப்படைப் பயிற்சி மையங்களை நடத்திவருகின்றன. இங்கு பயிற்சி பெறுபவர்களுக்கு, தொழிற்பிரிவுகளுக்கு ஏற்ப ஒவ்வொரு மாதமும் 7,000 ரூபாய் முதல் 9,000 ரூபாய் வரை உதவித்தொகை வழங்கப்படுகிறது.*

### ஐடிஐ-யில் பயிற்சி காலம்


*ஐடிஐ-யில் ஒரு வருடப் பயிற்சியில் ஏழு மாதங்கள் தொழிற்பயிற்சி நிலையத்திலும், ஐந்து மாதங்கள் தொழிற்சாலை நிறுவனத்தில் செய்முறைப் பயிற்சியும் வழங்கப்படுகிறது. இரண்டு வருடப் பயிற்சியில் 15 மாதங்கள் தொழிற்பயிற்சி நிலையத்திலும், ஒன்பது மாதங்கள் தொழிற்சாலை நிறுவனங்களிலும் பயிற்சி வழங்கப்படும். தொழில் நிறுவனத்தில் பயிற்சிபெறும்போது ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. ஐடிஐ பயிற்சி முடித்தவர்கள் டிப்ளமா இரண்டாம் ஆண்டு பயிற்சியில் நேரடியாக சேர்ந்து பயிலலாம்.*

# 13.1 சென்னை மாநகராட்சி ஐடிஐ-யில் முற்றிலும் இலவச தொழிற்பயிற்சி

சென்னை மாநகராட்சி தொழிற்பயிற்சி நிலையம் இராயப்பேட்டை பகுதியில் உள்ளது. இந்த தொழிற்பயிற்சி நிலையத்தில் சேர நேரடியாக விண்ணப்பிக்கலாம். இங்கு தொழிற்பயிற்சியை இலவசமாகக் கற்கலாம்.

| |
|---|
| பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் கீழ்க்கண்ட படிப்பில் சேரலாம். |
| **இங்கு உள்ள படிப்புகள் :** |
| கணினி இயக்குபவர் மற்றும் தொகுப்பாளர் (Computer) பயிற்சி - 48 இடங்கள்- ஒருவருட பயிற்சி |
| பொருத்துநர் (Fitter) பயிற்சி-20 இடங்கள் - 2 வருட பயிற்சி படிப்பு |
| கம்மியர் மோட்டார் வாகனம் (Motor Mechanic Vehicle) - 24 இடங்கள் - 2 வருட பயிற்சி |
| மின்பணியாளர் (Electrician) - 20 இடங்கள் - 2 வருட பயிற்சி |
| எலெக்ட்ரானிக் மெக்கானிக் (Electronic Mechanic) - 24 இடங்கள் - 2 வருட பயிற்சி |
| **எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள்** |
| குழாய் பொருத்துநர் (Plumber) பயிற்சி - 48 இடங்கள் - ஒருவருட பயிற்சி |

IWCM







பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

## மாநகராட்சி பள்ளி மாணவர்களுக்கு முன்னுரிமை

மாநகராட்சிப் பள்ளி மாணவர்களுக்கும், மாநகராட்சியில் பணியாற்றும் ஊழியர்களின் பிள்ளைகளுக்கும் சேர்க்கையில் முன்னுரிமை வழங்கப்படும். மேற்கண்ட பயிற்சியில் சேர வயது வரம்பு 14 முதல் 40 வயது ஆகும். பெண்களுக்கு வயது வரம்பு கிடையாது.

### மாணவர்களுக்கான சலுகைகள்

இங்கு சேரும் மாணவர்களுக்கு கல்விக்கட்டணம் இலவசம். பயிற்சி முடிக்கும் மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு பெற்றுத்தரவும் ஏற்பாடு செய்கிறார்கள். பயிற்சி பெறும் மாணவர்களுக்கு இலவசச் சீருடை, இலவச பஸ் பாஸ் மற்றும் பயிற்சிக் காலத்தில் மாதந்தோறும் ரூ.500 பயிற்சி உதவித்தொகையாக வழங்கப்படுகிறது. மேலும், பயிற்சி முடிக்கும் மாணவர்களுக்கு அரசாணையின்படி விலையில்லா மடிக்கணினி வழங்கப்படும். விண்ணப்பப் படிவம் மற்றும் தகவல் தொகுப்பை https://chennaicorporation.gov.in/gcc/pdf/ITI%20PROSPECTUS%202021-2022.pdf என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பத்தை இராயப்பேட்டையில் உள்ள சென்னை மாநகராட்சி தொழிற்பயிற்சி நிலையத்தில் நேரடியாகச் சமர்பித்து சேர்க்கை பெறலாம். ஐ.டி.ஐ பயிற்சி முடித்தவர்கள் நேரடியாக இரண்டாம் ஆண்டு பாலிடெக்னிக் பட்டயப் படிப்பில் சேர்ந்து பயிலலாம்.

**முகவரி:** சென்னை மாநகராட்சி தொழிற்பயிற்சி நிலையம், முத்தையா தெரு அருகில், இலாயிட்ஸ் காலனி, இராயப்பேட்டை, சென்னை-14. தொலைபேசி எண் : 044 – 28473117. (பேருந்து நிறுத்தம்: ஐஸ் ஹவுஸ் காவல் நிலையம் அல்லது யெல்லோ பேஜஸ்)

| சென்னையில் உள்ள ஐடிஐ – க்கள் | |
|---|---|
| 1. | அரசு ஐடிஐ, சிட்கோ இன்டஸ்டரீயல் எஸ்டேட், கிண்டி |
| 2. | அரசு ஐடிஐ (பெண்கள்), சிட்கோ இன்டஸ்டரீயல் எஸ்டேட்,கிண்டி |
| 3. | அரசு ஐடிஐ, ஸ்டான்லி மருத்துவமனை அருகில், |
| | தண்டராயப்பேட்டை, வடசென்னை |
| 4. | அரசு ஐடிஐ, ஆர்.கே நகர், சென்னை |
| 5. | அரசு ஐடிஐ, திருவான்மியூர், சென்னை |
| 6. | அரசு ஐடிஐ, செங்கல்பட்டு |
| 7. | அரசு ஐடிஐ, பெரும்பாக்கம் |
| 8. | அரசு ஐடிஐ, ஒரகடம் |
| 9. | அரசு ஐடிஐ, அம்பத்தூர் |
| 10. | அரசு ஐடிஐ (பெண்கள்), அம்பத்தூர் |
| 11. | அரசு ஐடிஐ, வடகரை, திருவள்ளூர் மாவட்டம் |

## 13.2 சென்னை மாநகராட்சியில் சமுதாயக் கல்லூரிகள்

பெருநகர சென்னை மாநகராட்சியின் மேற்பார்வையில் மூன்று சமுதாயக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இங்கு செவிலியர் படிப்பு, இயந்திரவியல் படிப்பு, கணினி படிப்பு, அடுமனை தொழில்சார்ந்த படிப்பு (கேட்டரிங்), அலுவலக நிர்வாகம் (ஆபிஸ் மேனேஜ்மென்ட்) போன்ற பயிற்சி வழங்கப்படுகின்றன.

இங்கு சென்னை மாநகராட்சி பள்ளிகளிலும், அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் பள்ளியில் படித்த மாணவர்களுக்கு சமுதாயக் கல்லூரியில் சேரும்போது முன்னுரிமை வழங்கப்படுகிறது.

சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள சமுதாயக் கல்லூரியில் சுகாதார உதவியாளர், அறுவைச் சிகிச்சைக் கூட உதவியாளர், ரேடியாலஜி, டயாலிசிஸ் டெக்னீசியன், ஆய்வக உதவியாளர் என ஐந்து பட்டயப் படிப்புகள் படிப்பதற்கு பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். மேற்கண்ட பட்டயப் படிப்புக்கான காலம் ஓராண்டு.

இங்கு, ஆங்கில பேச்சுப் பயிற்சி, அடிப்படை ஆங்கிலம், கணினி மென்பொருள் குறித்த பயிற்சியும் வழங்கப்படுகிறது. இந்த பயிற்சியில் பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெறாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.

IWCM

மேற்கண்ட படிப்பில் சேர விரும்பும் மாணவர்கள் ஆழ்வார்பேட்டை சி.வி.ராமன் சாலையில் உள்ள சமுதாயக் கல்லூரியில் நேரடியாக விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

**மேலும் விவரங்களுக்கு : 044-2498 8401 / 98403 93630 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.**



# 14. பிளஸ் டூ முடித்திருந்தால் போதும் இராணுவத்தில் அதிகாரியாகலாம்!

பொதுவாக, இராணுவப் பணி என்றாலே எல்லையைப் பாதுகாக்கும் சிப்பாய்ப் பணி என்றுதான் பலருக்கும் நினைவுக்கு வரும். ஆனால், இராணுவத்தில் போர்வீரர் பணி தவிர்த்து தொழில்நுட்பப் பிரிவிலும், விமானப் படை, கடற்படை எனப் பல்வேறு பிரிவுகளிலும் பன்னிரண்டாம் வகுப்பு முடித்தவர்களுக்கு ஏராளமான வேலை வாய்ப்புகள் காத்திருக்கின்றன. பள்ளி மற்றும்



கல்லூரியில் தேசிய மாணவர் படையில் பயிர்சி பெற்றவர்கள் நேரடியாக இராணுவத்தில் சேரலாம்.

### தேசிய இராணுவ அகாடமியில் சேர என்ன செய்ய வேண்டும்?

பிளஸ் டூ முடித்த மாணவர்கள், புனேயில் உள்ள தேசிய இராணுவ அகாடமி National Defence Academy and Naval Academy Examination (என்.டி.ஏ)-யில் சேர விண்ணப்பிக்கலாம். இங்கு மூன்று ஆண்டுகள் பட்டப்படிப்பும், ஓர் ஆண்டு இந்திய இராணுவ அகாடமியில் பயிற்சியும் வழங்கப்படுகிறது. பயிற்சி தொடங்கும்போது, அதிகாரிகள் அந்தஸ்தில் உள்ளவர்களுக்கு ரூ. 50,000 ஊதியம் வழங்கப்படுகிறது.

| https://www.joinindianarmy.nic.in/ |
| --- |

ஒவ்வோர் ஆண்டும் தேசிய இராணுவப் பயிற்சி அகாடமியில் சேர்வதற்கான அறிவிப்பு, மார்ச், அக்டோபர் மாதங்களில் செய்தித்தாளில் விளம்பரமாக வெளியிடப்படும். இதற்கு, அனைத்துப் பிரிவுகளில் படித்தவர்களும் விண்ணப்பிக்கலாம். விமானப் படை, கடற்படையில் சேர இயற்பியல், கணிதம் முடித்திருக்க வேண்டும்.

**மேலும் விவரங்களுக்கு** https://www.upsc.gov.in/examinations/

தொழில்நுட்பம் சார்ந்த பட்டப்படிப்புகளுக்கு, கயையிலுள்ள இராணுவ அதிகாரிகள் பயிற்சி மையத்தில் சேரலாம். இங்கு, ஐந்து ஆண்டுகள் படிப்பு சொல்லிக் கொடுக்கப்படுகிறது. இதற்கான அறிவிப்பு, ஏப்ரல், செப்டம்பர் மாதங்களில் வெளியிடப்படும்.

https://www.joinindianarmy.nic.in/ota-gaya.htm

### இந்திய இராணுவ அகாடமியில் பயிற்சி

டேராடூனில் உள்ள இந்திய இராணுவ அகாடமியிலும் நேரடிப் பயிற்சியில் சேரலாம். இங்கு சேர ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு முடித்திருக்க வேண்டும். ஒன்றரை ஆண்டுகள் பயிற்சி இருக்கும். இதற்கான அறிவிப்பு மார்ச்-ஏப்ரலில் வெளியாகும்.

IWGM


https://joinindianarmy.nic.in/writereaddata/Portal/Images/pdf/IMA_144_TGC_JOINING_INSTRS_20_JUN17.pdf

ஒருங்கிணைந்த இராணுவ சேவை போட்டித் தேர்வு (சி.டி.எஸ்) மூலமாகவும் இந்திய இராணுவ அகாடமி, விமானப் படை அகாடமி, கடற்படை அகாடமி, இராணுவ அதிகாரிகள் பயிற்சி மையத்திலும் சேரலாம். மேலும் விவரங்களுக்கு

https://www.upsc.gov.in/sites/default/files/Notif-CDSE-I-21-Engl.pdf



# 15. பத்தாம் வகுப்பு படித்திருந்தாலேயே அரசு வேலை கிடைக்கும்



டிகிரி, மாஸ்டர் டிகிரி முடித்தால் மட்டுமே அரசு வேலை கிடைக்கும் என்று நினைக்கக்கூடும். தற்போது பியூன் வேலைக்கு பி.ஹெச்டி படித்தவர்கள் விண்ணப்பிக்கும் காலம். சில அரசுப் பணிகளுக்கு பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு படித்திருந்தாலே போதுமானது.

### தமிழக அரசு வேலை:

பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் கிராம நிர்வாக அலுவலர், குரூப் IV தேர்வு மூலம் இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்து தட்டச்சர், குரூப் III தேர்வு மூலம் செயல் அலுவலர், பில் கலெக்டர், நில அளவையாளர்கள் போன்ற பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்.

**மேலும் விவரங்களுக்கு:** https://www.tnpsc.gov.in/static_pdf/syllabus/new_syllabus_CCSE_IV_Gruop_IV_VAO.pdf

பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் குரூப் III தேர்வெழுதி, இந்து சமய அறநிலையத் துறை செயல் அலுவலர் பணியைப் பெறலாம்.

மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தேர்வெழுதி, இளநிலை உதவியாளர், கிளார்க், டேட்டா என்ட்ரி ஆப்பரேட்டர், சுருக்கெழுத்தர் பணியைப் பெறலாம்.

https://www.tnpsc.gov.in/static_pdf/syllabus/new_syllabus_combined_civil_services_III_updated.pdf

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தேர்வெழுதி, காவலர், தீயணைப்புத் துறை காவலர் போன்ற பணியையும், மத்திய பாதுகாப்பு காவல் துறை காவலர் பணிக்கும் விண்ணப்பிக்கலாம்.

**மேலும் விவரங்களுக்கு**
https://eservices.tnpolice.gov.in/CCTNSNICSDC/Recruitment

### இரயில்வே துறையில்

இரயில்வே துறையில் காவலர், டிராக்மேன், உதவியாளர், உதவி புள்ளியாளர், துப்புரவாளர், அலுவலக உதவியாளர், பல்நோக்குப் பணியாளர் போன்ற பணிகளுக்கு பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

**மேலும் விவரங்களுக்கு** http://www.rrbcdg.gov.in/

இரயில்வே துறை நடத்தும் தேர்வெழுதி டிக்கெட் ரிசர்வேஷன் கிளார்க் வேலை செய்யலாம். பாதுகாப்புத் துறை நடத்தும் தேர்வெழுதி, இளநிலை அதிகாரி பணியைப் பெறலாம்.

**மேலும் விவரங்களுக்கு** http://www.rrbchennai.gov.in/


### பாதுகாப்பு துறையில்

இந்திய பாதுகாப்புத் துறையில் (இராணுவம்) படைவீரர்-பொதுப்பணி, பல்நோக்கு பணியாளர், படைவீரர் தொழிற்பிரிவு பணிகளுக்கும், கப்பல் படையில் சமையலாளர், விளையாட்டு உதவியாளர், இசையாளர் போன்ற பணிகளுக்கும் தேர்வு செய்யப்படுகிறார்கள்.

**மேலும் விவரங்களுக்கு:**
http://www.joinindianarmy.nic.in/Authentication.aspx

கடற்படைத் துறையில் விண்ணப்பித்தும் வேலைக்குச் சேரலாம்.

மத்திய துணை இராணுவப் படைப்பிரிவில் காலியாக உள்ள 25,271 கான்ஸ்டபிள் பணியிடங்களுக்கான வேலை வாய்ப்பு அறிவிப்பை வெளியிட்டுள்ளது Staff Selection Commission. இதற்கு பத்தாம் வகுப்பு முடித்தவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க கடைசி 31.08.2021 https://ssc.nic.in/SSCFileServer/PortalManagement/UploadedFiles/notice_ctgd_17072021.pdf



மேலும் விவரங்களுக்கு https://www.joinindiannavy.gov.in/en/entry/entry/eligibilityform

இந்திய கப்பல் படை நடத்தும் தேர்வெழுதி இளநிலை மாலுமி உதவியாளர் வேலையைப் பெறலாம்.

https://airmenselection.cdac.in/CASB/, https://indianairforce.nic.in/

**விமானத்துறையில் வேலை**

விமான போக்குவரத்துத் துறை நடத்தும் தேர்வில் வெற்றிபெற்று இளநிலை உதவியாளர் பணிக்குத்தேர்வாகலாம்.

மேலும் விவரங்களுக்கு https://indianairforce.nic.in/

**பல்வேறு காவல்படையில் வேலை**

கடலோர காவல்படை நடத்தும் தேர்வில் கலந்துகொண்டு ஏர்மேன் பணியைப் பெறலாம். ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களில் காப்பீட்டு முகவராகவும் சேரலாம்.

மேலும் விவரங்களுக்கு https://joinindiancoastguard.gov.in/

எல்லையோர காவல் படை, மத்திய ரிசர்வ் படை, தொழிற்படை என மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் காவல் துறையிலும் பணியாற்றலாம்.

மேலும் விவரங்களுக்கு https://crpf.gov.in/recruitment.htm, https://www.cisf.gov.in/cisfeng/recruitment/, https://www.cisfrectt.in/

# 16. பேரிடர் மேலாண்மை படித்தால் அரசு வேலைக்கான வாய்ப்பு!




**கொ**ரோனா பரவலால் உயிரிழப்புகள் அதிகரிக்க, தேசியப் பேரிடராக அறிவித்து நடவடிக்கை எடுத்துள்ளது மத்திய அரசு. தமிழக அரசு, பேரிடர் மேலாண்மை அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் இயற்கைப் பேரிடர்களிலிருந்து தற்காத்துக்கொள்ளவும், உடனே மீட்புப் பணிகளை மேற்கொள்ளவும், பொருளாதார சேதத்தைத் தவிர்க்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவித்தது.

பேரிடர் வரும் முன் தற்காத்துக்கொள்வதும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் மூலம் பேரிடர் பாதிப்புகளைக் குறைத்துக்கொள்வதும், பேரிடருக்குப் பின்பு உடனடியாக மீட்புப் பணியை மேற்கொண்டு, பாதிக்கப்பட்டவர்களை மீட்பதும், பாதிக்கப்பட்ட பகுதிகளை மறுசீரமைப்பு செய்வதும் பேரிடர் மேலாண்மை குழுக்களின் முதன்மையான பணிகளாகும். இத்தகைய பணிகளை மேற்கொள்ளத்



பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

திறமையான, அனுபவம் வாய்ந்த பேரிடர் மேலாண்மை அறிந்த நிபுணத்துவம் பெற்றவர்கள் தேவைப்படுகிறார்கள். இதற்காக, தேசிய அளவிலும் தமிழகத்தின் பல பல்கலைக் கழகங்களிலும் பேரிடர் மேலாண்மை குறித்த படிப்புகளை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

### பேரிடர் மேலாண்மை படிப்பை எங்கு படிக்கலாம்

- *பொறியியல் படிப்பை முடித்தவர்களுக்கு இந்திரா காந்தி தேசிய திறந்த நிலைப் பல்கலைக்கழகம் பட்டயப் படிப்பாகப் பேரிடர் மேலாண்மை குறித்த படிப்பை அறிமுகப்படுத்தி உள்ளது.*
- *மத்திய அரசின் முக்கிய அங்கமாக உள்ள தேசிய பேரிடர் மேலாண்மை கல்வி நிலைய (National Institute of Disaster Management) நிறுவனத்தில் பல படிப்புகள் உள்ளன. இந்தப் படிப்புகளை ஆன்லைன் வழியாகவே படிக்கலாம்.மேலும் விவரங்களுக்கு https://nidm.gov.in/*
- *சர்வதேச அளவில் செயல்பட்டு வரும் செஞ்சிலுவை அமைப்பும் இணையத்தின் வழியே பேரிடர் மேலாண்மை குறித்த சான்றிதழ் படிப்பை வழங்கி வருகிறது.*

  https://indianredcross.org/ircs/training
- *தமிழ்நாட்டில், சென்னை பல்கலைக் கழகமும் அண்ணாமலைபல்கலைக்கழகமும் பேரிடர் மேலாண்மை குறித்த முதுநிலைப் பட்டப்படிப்பை வழங்குகிறது.*

**வேலை வாய்ப்பு:** அரசுத் துறைகளிலும், தன்னார்வ அமைப்புகளிலும் பேரிடர் ஒருங்கிணைப்புக் குழுவில் பணியாற்ற, பேரிடர் மேலாண்மை படிப்பை முடித்தவர்கள் அதிகளவில் தேவைப்படுகிறார்கள். சமூக அக்கறையுடன், மக்களையும் பல்வேறு பிரிவுகளையும் ஒருங்கிணைக்கும் திறன் கொண்டவர்களுக்குப் பேரிடர் மேலாண்மையில் வாய்ப்புகள் அதிகம்.

> தமிழக அரசு, பேரிடர் மேலாண்மை அடிப்படையில் அந்தந்த மாவட்டத்தில் ஏற்படும் தொடர் இடர்பாடுகளைக் களைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவித்துள்ளது. இதனால் பேரிடர் மேலாண்மைச் சான்றிதழ், பட்டயப்படிப்புகள் மற்றும் பட்டப்படிப்புகள் படித்தால் வேலை வாய்ப்புகளைப் பெறலாம்.

IWCM

# 17. தொலைதூர கல்வி - எங்கு சேரலாம்?

குடும்பத்தின் பொருளாதாரச் சூழல் காரணமாக, சிலருக்கு பன்னிரண்டாம் வகுப்புக்குப் பின்பு நேரடியாகக் கல்லூரிக்குச் சென்று பயில வாய்ப்பில்லாமல் இருக்கலாம். ஆனால், படிக்க வேண்டும் என்று ஆர்வம் உள்ள வேலையில் இருப்பவர்கள், பள்ளிப் படிப்பைத் தொடர முடியாதவர்கள், குடும்பப் பெண்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் உதவுகிறது தொலைதூர கல்வி மையங்கள்.

தற்போது, பல்கலைக்கழக மானியக் குழு (UGC) தொலைதூர கல்வி வழங்கும் கல்வி நிறுவனங்களுக்குப் பல்வேறு கட்டுப்பாடுகள் விதித்துள்ளது.

### தொலைத்தூர கல்வி - கவனிக்க வேண்டிய விஷயம்

தமிழ்நாட்டில் 20-க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களில் தொலைத்தூர கல்வி மையங்கள் உள்ளன. பல்கலைக்கழக மானியக் குழு அனுமதித்துள்ள பல்கலைக்கழகங்களில், அனுமதிக்கப்பட்ட படிப்புகளைத் தேர்ந்தெடுத்து சேர்வது சிறப்பாக இருக்கும்.

### தேசிய அளவில் அனுமதி பெற்ற பல்கலைக்கழகம்

தேசிய அளவில் உள்ள இந்திரா காந்தி தேசிய திறந்தநிலைப் பல்கலைக்கழகம் (IGNOU) 42 தொலைதூரப் படிப்புகளுக்கு அனுமதி பெற்றுள்ளது. இந்தப் பல்கலைக்கழகத்துக்கு 56 மண்டல மையங்களும், 3000 கல்வி மையங்களும் உள்ளன. தமிழ்நாட்டில் மண்டல அலுவலகம் எழும்பூரில் உள்ளது.

### இளநிலை பாடங்கள் என்னென்ன உள்ளன?

பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள், இளநிலை பட்டப்படிப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம். இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்புகளாக ஆங்கிலம், பொருளாதாரம், வரலாறு, சமூகப் பணியியல், அரசியல் அறிவியல், பொது நிர்வாகம், ஹிந்தி, உளவியல். கணினி, கிராமப்புற வளர்ச்சி, சுற்றுலா, தத்துவவியல், சமூகவியல், நூலகம் மற்றும் தகவல் அறிவியல், மானுடவியல், இயற்பியல், வேதியியல், லைஃப் சயின்ஸ், மற்றும் கணக்கு போன்ற பாடங்கள் உள்ளன.

### சான்றிதழ் படிப்புகளில் என்ன படிக்கலாம்?

சான்றிதழ் படிப்புகளாக பேரிடர் மேலாண்மை, வணிகத்திறன், அரசு சாரா நிறுவன மேலாண்மை, சுற்றுலா, செயல்பாட்டு ஆங்கிலம், நுகர்வோர் பாதுகாப்பு, மனித உரிமைகள், தகவல் தொழில்நுட்பம்,



பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

எரிசக்தி தொழில்நுட்ப மேலாண்மை, உணவும் ஊட்டச்சத்தும், ஊட்டச்சத்து மற்றும் குழந்தை பராமரிப்பு, சைபர் சட்டம், நீர் மேலாண்மை என ஏராளமான படிப்புகள் உள்ளன.

**அரசு வேலை கிடைக்குமா?**

இங்கு படிப்பவர்கள் அரசு, அரசு சாரா நிறுவனங்களில், தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்புபெற தகுதி உடையவர்கள். கல்லூரி மாணவர்கள் சான்றிதழ் படிப்பைப் படித்து கூடுதல் தகுதியை வளர்த்துக் கொள்ளலாம். இங்கு தமிழ் மற்றும் ஆங்கில வழியில் படிக்கவும் வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. இதனையும் மாணவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்

**தமிழ்வழியில் படிக்க வாய்ப்பு உண்டா?**

பள்ளிப் படிப்பை (10+2) முடிக்காதவர்கள், ஆனால் 18 வயது நிரம்பியவர்கள், இக்னோவில் பட்டப்படிப்பு ஆயத்த பாடம் (6 மாதம்) படிப்பு மூலம் BA, BCom, BSW, BTS படிப்பைத் தொடரலாம். ஆயத்த பாடத்தை தமிழ் மற்றும் ஆங்கில வழியில் பயிலலாம். சிஏ, ஏசிஎஸ், ஐசிடபிள்யூஏ படிக்கும் மாணவர்களுக்கெனச் சிறப்பு பிகாம் படிப்பு வழங்கப்படுகிறது.

மேலும் விபரங்களுக்கு, இக்னோ மண்டல மையம், பெரியார் திடல், 84/1, ஈ.வி.கே சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை -600007. தொலைபேசி எண்கள் 044-26618438/26618039

மின்னஞ்சல்-rcchennai@ignou.ac.in வழியே தொடர்புகொள்ளலாம்.

| மேலும் விவரங்களுக்கு http://rcchennai.ignou.ac.in/ |
|---|



# 18. கல்விக் கடன் வேண்டுமா வாரி வழங்கக் காத்திருக்கிறார் வித்யா லட்சுமி!




**பி**ளஸ் டூ முடிச்சாச்சு. பிள்ளைகளைப் பொருளாதார சிக்கலில்லாமல் படிக்கவைக்க முடியுமா என்று யோசிக்கும் பெற்றோர்கள் அதிகம். பிள்ளைகள், தங்களுடைய கல்வியை எந்த விதமான தங்குதடையில்லாமல் பெற வேண்டும் என்பதற்காக வங்கி கல்விக் கடன் வழங்குகின்றன.

கல்விக் கடனுக்காக வங்கியை அணுகும்போது, காத்திருப்பதும் அலைக்கழிப்பதும் தவிர்க்க முடியாதவையாக உள்ளது. இதைத் தவிர்க்கும் வகையில் அனைத்து தேசிய வங்கிகளையும் ஒருங்கிணைத்து, 'வித்யா லட்சுமி' (www.vidyalakshmi.co.in) என்ற இணையதளத்தின் வழியாகக் கல்விக் கடன் பெற விண்ணப்பிக்கலாம்.

**'வித்யாலட்சுமி' இணையதளத்தில் விண்ணப்பிக்கும்போது 30-க்கும் மேற்பட்ட வங்கிகள், 100-க்கும் மேற்பட்ட திட்டங்களில் கல்விக் கடன் வழங்கத் தயாராக உள்ளன.**

### கல்வி கடன் விண்ணப்பிக்க என்ன செய்ய வேண்டும்?

வித்யாலட்சுமி இணையதளத்தில் கல்விக் கடன் கேட்டு விண்ணப்பிக்கும்போது, மாணவர் மற்றும் பெற்றோரின் விவரங்களைப் பதிவு செய்ய வேண்டும். இதில், இரண்டு பேரின் பான் கார்டு, ஆதார் கார்டு, வங்கியின் சேமிப்புக் கணக்கு விவரங்களோடு, எந்தக் கல்லூரியில் சேர இருக்கிறீர்கள், தேர்ந்தெடுத்துள்ள படிப்பு, பாடப்பிரிவு, கல்விக் கட்டணம், தேர்வுக் கட்டணம், புத்தகக் கட்டணம், விடுதிக்கான கட்டணம் அல்லது போக்குவரத்துக்

*கட்டணம், கல்வி பயிலும்போது வாங்க வேண்டிய அத்தியாவசிய பொருள்களின் விவரங்கள் (லேப்டாப் போன்ற உபகரணங்கள் வாங்க விரும்பினால் அதுகுறித்த விவரத்தையும்) வழங்க வேண்டும்.*

**கல்வி கடனுக்கு என்னென்ன பதிவேற்றம் செய்ய வேண்டும்?**

*உங்களுடைய மதிப்பெண் சான்றிதழையும் கல்லூரி சேர்க்கைக்கான கடிதத்தையும் ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்ய வேண்டும். கடன் பெற விருப்பம் உள்ள மூன்று வங்கிகளைத் தேர்வுசெய்ய வேண்டும். விண்ணப்பித்த 15 நாள்களுக்குள் உங்களுடைய இருப்பிடத்துக்கு அருகில் உள்ள வங்கியிலிருந்து அழைப்பு வரும்.*

**விண்ணப்பித்த எத்தனை நாளில் கல்வி கடன் கிடைக்கும்?**

*வங்கியை அணுகிய பின்பு, ஒரு வார காலத்துக்குள், கல்விக் கடன் கேட்டவர், குறிப்பிட்ட முகவரியில் வசிக்கிறாரா என்பது குறித்து வங்கி அதிகாரிகள் நேரடியாக வீட்டுக்கே வந்து விசாரிப்பார்கள். அதன்பின்பு, ஒரு வாரத்தில் வங்கியிலிருந்து குறிப்பிட்ட கல்லூரிக்குக் கட்டணத்தை அனுப்பி வைப்பார்கள். இதர கட்டணங்களுக்கான தொகையை மாணவரின் வங்கிக் கணக்கில் செலுத்துவார்கள். அட்மிஷன் கிடைத்த இரண்டு வாரங்களிலேயே கல்விக் கடன் கிடைப்பதால், பெற்றோர்கள் எந்தவிதமான சிரமமும் இல்லாமல் எளிதாக மாணவர்களைப் படிக்கவைக்கலாம்.*

IWGM

**கல்வி கடனுக்கு உத்தரவாதம் அவசியமா?**

*நான்கு இலட்சம் ரூபாய்க்கு குறைவாகக் கல்விக் கடன் பெறுபவர்களுக்கு எந்த விதமான உத்தரவாதமும் தேவையில்லை. ஆனால், நான்கு லட்ச ரூபாய்க்குக் கூடுதலாகக் கல்விக் கடன் பெற வேண்டி இருந்தால், பெற்றோர் கடனுக்கு உத்தரவாதம் வழங்க வேண்டும். 7.5 லட்சம் ரூபாய்க்கு அதிகமாக கல்விக் கடன் தேவைப்பட்டால், பெற்றோரின் சொத்துகளை உத்தரவாதமாக வழங்க வேண்டும்.*

**கல்வி கடனை எப்போது திருப்பிச் செலுத்த வேண்டும்?**

*படிப்பை முடித்தவுடன், வேலை தேடும்போது கடனைத் திருப்பிச் செலுத்த முடியாது என்பதால், ஒரு வருடம் வரை கடனைச் செலுத்த கால அவகாசம் வழங்கப்படுகிறது. ஒரு வேளை, படிப்பை முடித்தவுடன் வேலையில் சேர்ந்தால், உடனே கடனைத் திருப்பிச் செலுத்த ஆரம்பித்து விடலாம். படிக்கும் காலத்தில் கல்விக் கடனுக்கான வட்டியை மத்திய அரசு செலுத்துகிறது. மேலும், தொழில்நுட்ப படிப்புக்கும், பெண்கள் விண்ணப்பதாரர்களாக இருந்தால் அவர்களுக்கு வட்டி விகிதத்தில் சலுகையும் வழங்கப்படுகிறது.*

## 19. உங்கள் பகுதியில் உள்ள கல்லூரிகளின் பட்டியல்

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் அறிவியல் கலைக் கல்லூரிகள் சென்னை பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றன. சில கல்லூரிகள் தன்னாட்சி அதிகாரம்பெற்றவை. சில கல்லூரிகள் நேரிடையாக சென்னை பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டில் செயல்படுபவை. தன்னாட்சி அதிகாரம் பெற்ற கல்லூரிகள் தேர்வு நடத்தவும், அந்தக் கல்லூரிகளே தேர்ச்சி முடிவுகளை அறிவிக்கவும் அதிகாரம்பெற்றவை.

| | **அரசு தன்னாட்சி பெற்ற கல்லூரிகள்** |
|---|---|
| 1 . | Dr. Ambedkar Government Arts College,<br>Vysarpadi, Chennai-600039. Phone: 044-25520151 Website: www.daga.co.in |
| 2. | Government Arts College for Men (Estd.1969),<br>Nandanam, Chennai-600035. Phone: 044-24351048<br>Website: www.nandanamartscollege.com |
| 3. | Presidency College (Co-Education) (Estd.1840),<br>100, Kamaraj Salai,Chepauk, Chennai-600005.<br>Phone: 28544894, 28510732 Website: www.presidencychennai.com |
| 4. | Bharathi Women's College (Estd.1964),<br>85, Prakasam Salai, Chennai-600108.<br>Phone: 044-25286411, 044-25285753 Website: www.bharathicollege.org |
| 5. | Quaid-E-Milleth Govt. Arts College for Women,<br>74, Binny Road, Anna Salai, Chennai-600002.<br>Phone: 044-28520793, 044-28550198 Website: http://www.qmgcw.in/ |
| 6. | Queen Mary's College (Women)(Estd.1914),<br>Mylapore, Chennai-600004. Phone: 044-28444995<br>Website: http://www.queenmaryscollege.com/ |
| 7. | L. N. Government College (Estd.1965),<br>T.H. Road,Ponneri, Thiruvallur District-601204.<br>Phone: 044-27972266, 044-27972810<br>Website: http://www.lngovernmentcollege.com/ |

| அரசு கல்லூரிகள் | |
|---|---|
| 1. | R. V. Government Arts College (1970),<br>Chengalpattu, Kancheepuram-603001.<br>Phone: 044-27427816,044-27431257 |
| 2. | Sri Subramaniaswamy Government arts College,<br>Thiruvallur District, Tiruttani-631209. Phone: 044-27885220 |
| 3. | University of Madras Arts and Science College<br>(University Constituent College),<br>East coast Road, Nemmeli -603104. Phone: 044-27402535<br>Website: www.unom..ac.in/uccnemmeli/ |
| 4. | University of Madras Arts and Science College (University Constituent College),<br>Poonthottam Street, Theradi, Thiruvottiyur-600019.<br>Phone: 044-25730382 |
| 5. | PuratchI Thalaivar Dr.M.G.R. Government Arts and Science College,<br>Uthiramerur, Kancheepuram District. |
| 6. | Government Arts & Science College (Co-Education),<br>No.138/33, Kummallamman Kovil Street, Tondaiyarpet, Chennai. |
| 7. | Government Arts & Science College,<br>U-Block, TNSCB, Ezhil Nagar, Perumbakkam, Chennai. |

IWCM

| அரசு உதவிப்பெறும் தன்னாட்சி பெற்ற கல்லூரிகள் | |
|---|---|
| 1 | University of Madras - Aided Autonomous Private Colleges<br>Dwaraka Doss Goverdhan Doss Vaishnav College,<br>833, E.V.R. Periyar Salai, Chennai-600106.<br>Phone: 044-23635101,23635102<br>Website: www.dgvaishnavcollege.com |
| 2 | Loyola College, Nungambakkam, Chennai-600034. Phone: 044-28178300,044-28178301 Website: www.loyolacollege.edu |
| 3 | The New College, 87, Peters Road, Royapettah, Chennai-600014.<br>Phone: 044-28351269, 28350297 Website: www.thenewcollege.in |
| 4 | Vivekananda College,<br>70-72, P.S.Sivasami Salai, Mylapore, Chennai-600004.<br>Phone: 044-24993057 Website: www.rkmvc.ac.in |

பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

| | |
|---|---|
| 5 | The Ethiraj College for Women, Ethiraj Salai, Egmore, Chennai-600008. Phone: 044-28279189 Website: www.ethirajcollege.in |
| 6 | Stella Mari's College, 17, Cathedral Road, Chennai-600004. Phone: 044-28111987,044-28111951 Website: www.stellmariscolleges.edu.in |
| 7 | Justice Basheer Ahmed Sayeed College for Women, Old No.310, New No.56, K.B. Dasan Road,Teynampet, Chennai-600018. Phone: 044-24364152,24364140,24350395 Website: www.jbascollege.org |
| 8 | Womens Christian College, 51, College Road,Nungambakkam, Chennai-600006. Phone: 044-28275926 Website: www.wcc.edu.in |
| 9 | The Madras School of social Work, 32, Casa Major Road, Egmore, Chennai-600008. Phone: 044-28195126, 28192824 Website: www.mssw.in |
| 10 | Meenakshi College for Women, 363, Arcot Road, Kodambakkam, Chennai-600024. Phone: 044-24725466 Website: www.meenakshicollege.com |
| 11 | S.D.N Bhatt Vaishnav College for Women, Chrompet, Chennai-600044. Phone: 044-22655450,22655451 Website: www.sdnbvc.com |
| 12. | Dhanraj Baid Jain College, Jothi Nagar, IT Corridor,Thorapakkam, Chennai-600096. Phone: 044-24960889 Website: www.dbjaincollege.org |
| 13. | Madras Christian College, Tambaram, Chennai-600059. Phone: 044-22390675,044-22396772 Website: www.mcc.edu.in |
| 14. | Gurunanak College, Velacherry Main Road, Velacherry, Chennai-600042. Phone: 044-22451746 Website: www.gurunanakcollege.in |

IWCM

## அரசு உதவி பெறும் கல்லூரிகள்

| | |
|---|---|
| 1. | C.Kandaswami Naidu College for Men,<br>E7, 3rd Avenue, Anna Nagar East, Chennai-600102.<br>Phone: 044-26262970,26223130<br>Website: www.cknc.edu.in |
| 2. | Pachaiyappa's College,<br>116, E.V.R. Periyar High Road, Shenoy Nagar, Chennai-600030.<br>Phone: 044-26412844, 26482094<br>Website: www.pachaiyappaschennai.net/ |
| 3. | Sir Theagaraya College,<br>1047, T.H.Road, Old Washermenpet, Chennai-600021.<br>Phone: 044-25951300,29523996<br>Website: www.sirtheagarayacollege.com |
| 4. | Chellammal Women's College,<br>Anna Salai, Guindy, Chennai-600032.<br>Phone: 044-2235 1217<br>Website: www.chellammal.edu.in |
| 5. | The Quaide Milleth College for Men,<br>Tambaram-Velachery Main Road, Medavakkam-600100.<br>Phone: 044-22771202, 22772634 |
| 6. | S I. V. E. T. College,<br>Tambaram-Velachery Main Road, Gowrivakkam, Chennai-600073.<br>Phone: 044-22780777<br>Website: www.sivetcollege.com |
| 7. | Pachaiyappa's College for Men,<br>Chengalpet Main Road, Kanchipuram-631501.<br>Phone: 044-27268824 |
| 8. | Pachaiyappa's College for Women,<br>Vegavathi Road, Kanchipuram-631501.<br>Phone: 044-27222768 |
| 9 | A.M.Jain College,<br>Meenambakkam, Chennai-600114.<br>Phone: 044-22321705, 22316603<br>Website: www.amjaincollege.info |
| 10 | D. R. B. C. C. C. Hindu College,<br>Dharmamurthi Nagar, Pattabiram-600072.<br>Phone: 044-26850621<br>Website: www.drbcchinducollege.ac.in |

IWCM

பொருளடக்க பக்கத்துக்கு செல்ல

| |
|---|
| **அரசு கல்லூரிகளில் உள்ள படிப்புகள்** |
| * T/M - தமிழ் மீடியம் ● E/M - ஆங்கில வழி படிப்பு |
| **Presidency College (Autonomous) Chennai -600005 (Co-Education)** |
| presidencycollegechennai.ac.in |
| **Shift - I** |
| B.A. Tamil , B.A. Political Science (E/M), B.A. Political Science (T/M), B.A. English, B.A. Hindi, B.A. History (E/M), B.A. History (T/M), B.A. Malayalam, B.A. Urdu |
| B.Com. (General) (E/M), B.Com. (Corporate Secretaryship) (E/M), B.A. Economics (E/M), B.A. Economics (T/M), B.Com. Hearing Impaired (E/M) |
| B.Sc. Chemistry (E/M), B.Sc. Chemistry (T/M), B.Sc. Mathematics (E/M), B.Sc. Mathematics (T/M), B.Sc. Geology (E/M), B.Sc. Plant Biology & Plant Biotechnology (E/M), B.Sc. Plant Biology & Plant Biotechnology (T/M), B.Sc. Psychology (E/M), B.Sc. Statistics (E/M), B.Sc. Advanced Zoology & Biotechnology (E/M), B.Sc. Advanced Zoology & Biotechnology (T/M), B.Sc. Physics (E/M), B.Sc. Physics (T/M), B.Sc. Geography (E/M) |
| **SHIFT-II** |
| B.A. History (T/M), B.A. Economics (T/M), B.C.A. Hearing Impaired (E/M), B.Com. (Corporate Secretaryship) (E/M) |
| **Queen Mary's College (Autonomous)- Women, Dr.Radhakrishnan Salai, Mylapore, Chennai - 600 004.** |
| www.queenmaryscollege.edu.in |
| **Shift - I** |
| B.A. History (E/M), B.A. History (T/M), B.A. Sociology (E/M), B.A. Indian Music (E/M), B.A. English, B.A. Tamil, B.A. Telugu Literature, B.A. Sanskrit |
| B.Com.(General) (E/M), B.Com. (Corporate Secretaryship) (E/M), B.A. Economics (E/M), B.A. Economics (T/M) |
| B.Sc. Mathematics (E/M), B.Sc. Mathematics (T/M), B.Sc. Physics (E/M), B.Sc. Physics (T/M) |
| B.Sc. Chemistry (E/M), B.Sc. Chemistry (T/M), B.Sc. Biochemistry (E/M), B.Sc. Plant Biology & Plant Biotechnology (E/M), B.Sc. Plant Biology & Plant Biotechnology (T/M), B.Sc. Advanced Zoology & Biotechnology (E/M), B.Sc. Advanced Zoology & Biotechnology (T/M), B.Sc. Geography (E/M), B.Sc. Geography (T/M), B.Sc. Geography Tourism & Travel Management (E/M), B.Sc. Home Science Nutrition Food Service Management & Dietetics (E/M), B.Sc. Home Science Clinical Nutrition and Dietetics, B.Sc. Physical Education, Health Education and Sports, B.Sc. Computer Science (E/M), B.C.A. Bachelor of Computer Application (E/M) |
| **Shift - II** |
| B.Sc. Mathematics (E/M), B.Sc. Computer Science (E/M), B.A. Economics (E/M), B.Com. (General) (E/M) |
| **Bharathi Womens College (Autonomous), No.1 Prakasam Salai, Chennai - 600108** |
| www.bwc.edu.in |
| B.A. Historical Studies (T/M), B.A. Historical Studies (E/M), B.A. Economics (T/M), B.A. Economics (E/M), B.A. English, B.A. Tamil |

| |
|---|
| B.Com. (Commerce) (E/M) |
| B.Sc. Mathematics (T/M), B.Sc. Mathematics (E/M), B.Sc. Physics (T/M), B.Sc. Physics (E/M), B.Sc. Chemistry (T/M), B.Sc. Chemistry (E/M), B.Sc. Botany (T/M), B.Sc. Botany (E/M), B.Sc. Advanced Zoology & Biotechnology (T/M), B.Sc. Advanced Zoology & Biotechnology (E/M), B.Sc. Geography (T/M), B.Sc. Geography (E/M), B.Sc. Biochemistry (E/M), B.Sc. Computer Science (E/M) |
| **Shift - II** |
| B.Com. (Commerce) (E/M), B.Sc. Mathematics (E/M), B.Sc. Chemistry (E/M), B.Sc. Biochemistry (E/M), B.Sc. Computer Science (E/M) |
| **Government Arts College for Men (Autonomous), Nandanam, Chennai - 600035** |
| www.gacnandanam.com |
| **Shift - I** |
| B.A. Tamil Literature, B.A. English Literature, B.A. Historical Studies / History (T/M), B.A. Historical Studies / History (E/M) |
| B.A. Economics (T/M), B.A. Economics (E/M), B.Com. (Commerce) (E/M), B.Com. Corporate Secretaryship (E/M), B.B.A. Business Administration (Human Resource Development) (E/M) |
| B.Sc. Mathematics (T/M), B.Sc. Mathematics (E/M), B.Sc. Physics (T/M), B.Sc. Physics (E/M), B.Sc. Chemistry (T/M), B.Sc. Chemistry (E/M), B.Sc. Botany (T/M), B.Sc. Botany (E/M), B.Sc. Zoology (E/M), B.Sc. Zoology (T/M), B.Sc. Computer Science (E/M) |
| **Shift - II** |
| B.A. Tamil Literature, B.A. Historical Studies / History (E/M), B.A. Economics (E/M), |
| B.Com. (Commerce) (E/M), B.Com. (Corporate Secretaryship) (E/M), B.Sc. Computer Science (E/M) |
| **Dr.Ambedkar Government Arts College (Autonomous), Vyasarpadi, Chennai - 600039 (Co-Education)** |
| www.dagac.co.in |
| **Shift - I** |
| B.A. Defence & Strategic Studies (E/M), B.A. English, B.A. Tamil |
| B.A. Economics (E/M), B.Com. (Commerce) (E/M), B.B.A. Business Administration (Financial Management) (E/M) |
| B.Sc. Computer Science (E/M), B.Sc. Chemistry (E/M), B.Sc. Chemistry (T/M), B.Sc. Physics (E/M), B.Sc. Physics (T/M), B.Sc. Mathematics (E/M), B.Sc. Mathematics (T/M), B.Sc. Statistics (E/M), B.Sc. Plant Biology & Plant Biotechnology (E/M), B.Sc. Home Science - Nutrition Food Service Management & Dietetics (E/M), B.Sc. Advanced Zoology & Biotechnology (E/M), B.Sc. Advanced Zoology & Biotechnology (T/M), B.Sc. Psychology (E/M), B.Sc. Visual Communication (E/M) |
| **Shift - II** |
| B.Sc. Computer Science (E/M), B.Com. (Commerce) (E/M) |

IWCM

| |
|---|
| **Quaid-E-Millath Government College for Women (Autonomous), Anna Salai, Chennai - 600002** |
| www.qmgcw.edu.in |
| B.A. Tamil Literature, B.A. English Literature, B.A. Economics (E/M ), B.A. Economics (T/M), B.A. Historical Studies (E/M), B.A. Historical Studies (T/M) |
| B.Com. (Commerce) (E/M), B.Com. Corporate Secretaryship (E/M) |
| B.Sc. Physics (E/M), B.Sc. Physics (T/M), B.Sc. Chemistry (E/M), B.Sc. Chemistry (T/M), B.Sc. Plant Biology & Plant Biotechnology (E/M), B.Sc. Plant Biology & Plant Biotechnology (T/M), B.Sc. Advanced Zoology Biotechnology (E/M), B.Sc. Advanced Zoology Biotechnology (T/M), B.Sc. Mathematics (E/M), B.Sc. Home Science - Nutrition Food Service Management & Dietetics (E/M), B.Sc. Computer Science (E/M) |
| **Shift- II** |
| B.Com. (General) (E/M), B.Sc. Mathematics (E/M), B.Sc. Computer Science (E/M) |
| **Government Arts and Science College, RK Nagar, Chennai - 600081** |
| www.gascrknagar.co.in |
| **(Co-Education)** |
| B.A. Tamil, B.A. English Literature, |
| B.Com. (General) (E/M), B.Com. (General) (T/M), B.Com. (Corporate Secretaryship) (E/M) |
| B.A. Economics (E/M), B.A. Economics (T/M) |
| B.Sc. Mathematics (E/M), B.Sc. Computer Science (E/M) |
| **Government Arts and Science College, Perumbakkam, Chennai -600131** |
| **(Co-Education)** |
| www.gascperumbakkam.org |
| B.A. Tamil, B.A. English, B.Com. (General) (E/M) , B.Com. (Corporate Secretaryship) (E/M), |
| B.Sc. Mathematics (E/M), B.Sc. Computer Science (E/M), B.C.A. Bachelor of Computer Application (E/M), B.Sc. Physics (E/M), B.Sc. Chemistry (E/M) |
| **Government Arts and Science College, ECR, Nemmeli - 603104** |
| **(Co-Education)** |
| B.A. Tamil , B.A. Historical Studies (E/M), B.Com. (Commerce) (E/M), B.Com. (C.A.) Commerce with Computer Applications (E/M), B.C.A. Bachelor of Computer Application (E/M) |
| **Government Arts and Science College, Thiruvottiyur, Chennai-600019** |
| **(Co-Education)** |
| B.A. Tamil Literature, B.A. English Literature, B.Com. (Commerce), B.Com. (C.A.) Commerce with Computer Applications (E/M), B.C.A. Bachelor of Computer Application (E/M) |

IWCM

PINK FIRST 2021 2022

STRONG WOMEN STRONGER WORLD 2021-2024

# INNER WHEEL CLUB OF MADRAS

## District 323

# +2-விற்க்குப் பிறகு என்ன படிக்கலாம்? எப்படி ஜெயிக்கலாம்...



பொருளடக்க பக்கத்துக்கு செல்ல